

புதியதோர் உலகம் செய்வோம்

# ஜனசக்தி

மக்கள் வாரஇதழ்

மலர் 85 | 2022 மே 01 - 07 | விலை: ரூ.10 | 16 பக்கங்கள் | இதழ் 04




**அங்கே கடவுள் இங்கே கவர்னரா?**



உலகில் உள்ள அனைத்து நாடுகளிலும் அரசியல் கட்சிகளும், அமைப்புகளும் உண்டு. கட்சிகளும், அமைப்புகளும் தாங்கள் ஏற்றுக்கொண்ட தத்துவத்தை, >>>

ப 02

**பாதையில் பதிந்த அடிகள்**



இன்றைக்கு சமுதாயப் பிரச்சினை குறித்து தீர்வு காண பல வழிகளைக் கூறுகின்றனர். அம்பேத்கரியம்தான் தீர்வு என்று ஒரு சாரார் கூறுகின்றனர். பெரியாரியம்தான் >>>

ப 05

**வேளாண் சட்டங்களை மீண்டும் புதிய வடிவில்....**



மூன்று வேளாண் சட்டங்களுக்கு எதிராக ஐக்கிய விவசாயிகள் முன்னணி டெல்லி நுழைவுப் போராட்டத்தை முறியடிக்க பல்வேறு வழிகளை ஒன்றிய அரசு கையாண்டது. சில நபர்களை கொண்டு >>>

ப 03

# போராட்டக் களம் புகுவோம்!

## ஏஐடியுசி மே தின அறைகூவல்!

**உழைக்கும் வர்க்கத்தில் சங்கமித்து வரும் இன்றைய இளந்தலைமுறை தொழிலாளர்களின் நலன் கருதி, 1886 – ஆம் ஆண்டு மே தினத்தின் புகழ்மிக்க வீரவரலாற்றை மீண்டும் எடுத்துரைப்பதற்கான தேவை எழுந்துள்ளது.**

19 ஆம் நூற்றாண்டு காலச் சூழலுக்குள் சற்றே பின்னோக்கி பயணிப்போம்ஞ் ஐரோப்பா மற்றும் அமெரிக்காவில் மனித சமுதாயம், அதன் வாழ்வாதார தேவைகளை உற்பத்தி செய்யும் முறையில் ஒரு மாபெரும் மாற்றம் உதயமானது. ஆம்! வேளாண்மையிலிருந்து தொழில்துறை எனும் மாபெரும் மாற்றம் அது! மதிப்பீடு செய்ய இயலாத அளவிற்கு, மனித சமுதாயம் முழுவதும் மாற்றத்திற்கு உள்ளானது. பண்ணை நிலங்களில் அடிமைகளாய் கிடந்த உழைக்கும் மக்கள், நிலப்பிரபுத்துவத்தில் இருந்து விடுதலை பெற்றனர்; தங்களைத் தாங்களே பாதுகாத்துக் கொள்ள வேண்டிய நிலைக்குத் தள்ளப்பட்டனர்.

தொழிற்சாலை எனும் புதிய கட்டமைப்பு உருப்பெறத் தொடங்கியது. அந்த ஒற்றைக் கூரையின் கீழ் ஆடைகள், பாத்திரங்கள் மற்றும் அன்றாட வாழ்க்கைக்குத் தேவையான அனைத்து பண்டங்களையும் உற்பத்தி செய்திடும் கரங்களாக தொழிலாளர்களைப் பணியமர்த்தியது.

இந்தத் தொழிற்சாலைகளில் உழைத்தவர்கள் பெயரளவிற்கு மட்டுமே சுதந்திர மனிதர்களாக இருந்தார்கள். தங்கள் உணவுத் தேவைகளை நிறைவேற்றிக் கொள்ள வேறிடம் செல்வதற்கான சுதந்திரம் கூட இல்லாதவர்களாகத் தவித்தார்கள். முதலாளி விதித்தநிபந்தனைகளுக்கு கட்டுப்பட்டு உழைத்திட அவர்கள் தொழிற்சாலைகளில் திரண்டனர். அதன் விளைவு சற்று ஏறக்குறைய எதிர்பார்த்தபடியே அமைந்தது: ஆண், பெண், குழந்தை என்ற வேறுபாடின்றி, முதலாளி அவர்களிடம் உழைப்பைச் சுரண்டினார். உயிர் பிழைத்திருப்பதற்கு போதுமான கூலியை மட்டுமே முதலாளி தொழிலாளிக்கு கொடுத்தார். ஆனால், வேலை நேரமோ காலை கதிரவன் விண்ணில் எழுந்தது முதல் மாலையில் மயங்கி விழுவது வரை நீட்டிக்கப்பட்டது. மின்சார ஆற்றல் பயன்பாட்டிற்கு வந்த பிறகு, நாள் ஒன்றுக்கு 16, 17, 18, ஏன்ஞ் 20 மணி நேரம் வரையில் வேலை நேரம் நீண்டு கொண்டே போனது. உண்மையில் வேலை நேரத்திற்கு என்று ஒரு வரம்பும் இல்லாமல் இருந்தது. ஆனால், 19 ஆம் நூற்றாண்டின் தொடக்கத்தில் இருந்து அமெரிக்காவில் நாள் ஒன்றுக்கு 10 மணி நேரம் மட்டுமே வேலை நேரம் என்ற கோரிக்கை வலியுறுத்தப்பட்டு போராட்டங்களும் நடைபெற்றன.



இத்தகைய போக்குகள் உற்று நோக்கப்பட்டன; ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டன; பொருளியல் வல்லுநர்கள் விவாதத்தில் ஈடுபட்டனர். ஏன் இத்தகைய போக்கு? என்பதற்கான உண்மையான காரணத்தை மாமேதை கார்ல் மார்க்ஸ் கண்டறிந்தார். முதலாளித்துவ பொருளாதார அமைப்பே இத்தகைய போக்கிற்கு மூலகாரணம் என்பதைப் பறைசாற்றினார். உழைப்புச் சுரண்டலை முடிவுக்கு கொண்டுவர மனித உருவாக்கமான இந்த முதலாளித்துவ பொருளாதார அமைப்பைத் தகர்த்தெறிய வேண்டும் என்று அவர் பிரகடனம் செய்தார். இந்த நோக்கம் நிறைவேற, "உலகத் தொழிலாளர்களே ஒன்றுபடுங்கள்!" என்று உழைக்கும் வர்க்கத்திற்கு மாமேதை கார்ல் மார்க்ஸ் அறைகூவல் விடுத்தார். 1864 ஆம் ஆண்டு அவர் நிறுவிய சர்வதேச தொழிலாளர் அமைப்பு (முதலாவது அகிலம் என்றும் கூறுவர்) வேலை நேரத்தை நாள் ஒன்றுக்கு 8 மணி நேரமாக வரையறை செய்திட வேண்டும் என்று தீர்மானம் நிறைவேற்றியது.

8 மணி நேர வேலை உரிமைக்காக 1886ஆம் ஆண்டு சிகாகோவில் நடைபெற்ற போராட்டத்தை முதலாளிகளின் குண்டர் படையும், போலீசாரும் ஒடுக்கினர். 'ஹேமார்க்கெட் சதுக்க கலகம்' என்று குறிப்பிடப்படும் இந்தப் போராட்டத்தில் தொழிலாளர்களின் செங்குருதி சிகாகோ நகர வீதிகளை நனைத்தது. தொழிலாளர் தலைவர்கள் நால்வருக்கு மரண தண்டனை விதிக்கப்பட்டது; போதுமான ஆதாரங்கள் இல்லாததால் மூவர் விடுவிக்கப்பட்டனர். ஆனால், 8 மணி நேர வேலை உரிமை கோரிக்கை மடிந்துவிடவில்லை. 1889ஆம் ஆண்டு இரண்டாம் அகிலம் நிறைவேற்றிய மற்றொரு தீர்மானத்தின் மூலமாக இந்த கோரிக்கை உலக அளவில் முழங்கப்பட்டது. அதன்படி, 8 மணி நேர வேலை உரிமைக்காக மே தினம் கடைபிடிக்கப்பட்டது. 1890 ஆம் ஆண்டில் உலகின் அனைத்துக் கண்டங்களிலும் உள்ள நாடுகளில் மே தினம் கடைபிடிக்கப்பட்டது.

எண்ணற்ற போராட்டங்கள் மூலமாக பல்வேறு உரிமைகளை மக்கள் வென்றெடுத்திருக்கிறார்கள். 1909ஆம் ஆண்டில் சீரான ஊதியம், பணியிட சூழல் மற்றும் பாலியல் துன்புறுத்தலில் இருந்து பாதுகாப்பு ஆகிய கோரிக்கைகளை வலியுறுத்தி நியூயார்க் நகரில் பெண்கள் ஆடை உற்பத்தி தொழிலாளர்கள் வேலைநிறுத்த போராட்டங்களில் ஈடுபட்டனர். அந்தப் போராட்டங்களே ஒவ்வொரு ஆண்டும் மார்ச் மாதம் 8ஆம் நாளை உலக மகளிர் தின மாகக் கொண்டாடுவதற்கு காரணமாக அமைந் தன. இந்தியாவில் 10 ஆண்டு கால போராட்டத்திற்கு பின்பு தான், 1890ஆம் ஆண்டில் ஞாயிற்றுக்கிழமை வார விடுமுறை மற்றும் அரை மணி நேர மதிய உணவு இடைவேளை உள்ளிட்ட உரிமைகள் வென்றெடுக்கப்பட்டன. இந்தப் போராட்ட இயக்கத்திற்கு மகாத்மா ஜோதிபா பூலேவின் சகதோழரான மேகாஜி லோகண்டே தலைமை ஏற்றார். இவர் பாம்பே மில் ஹேன்ட்ஸ் அசோஷியேஷனில் (Bombay Mill Hands Association) தலைமை பொறுப்பு வகித்தார்.

1920 ஆம் ஆண்டு அக்டோபர் 31ஆம் நாள் இந்தியாவின் முதல் மத்திய தொழிற்சங்கமான ஏஐடியுசி உதயமானதே ஒரு வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வாகும். பிரிட்டிஷ் ஆட்சிகாலத்தில் தேசம் முழுவதிலும் ஆங்காங்கே வெடித்த போராட்டங்களின் உச்சகட்டமாக முகிழ்த்த ஏஐடியுசி, தொழிலாளர் போராட்டங்கள் மேலும் தீவிரமடைய உத்வேகம் ஊட்டியது. இந்திய விடுதலைப் போராட்ட இயக்கத்தையும் பன்மடங்கு வலுப்படுத்தியது.

உறுதிப்பாடுமிக்க தொழிலாளர் போராட்டங்கள் காரணமாக, உழைக்கும் வர்க்கத்தின் பல உரிமைகள் சட்டங்களாக இயற்றப்பட்டன. இதற்கு எடுத்துக்காட்டாக வேலையாள் இழப்பீட்டுச் சட்டம் 1923, தொழிற்சங்க சட்டம் 1926, சம்பள பட்டுவாடா சட்டம் 1935, தொழில் தகராறு சட்டம் 1947, இ.எஸ்.ஐ. சட்டம் 1948, இ.பி.எஃப். சட்டம் 1952, மகப்பேறு கால பயன்கள் சட்டம் 1961, போனஸ் பட்டுவாடா சட்டம் 1965, சம ஊதிய சட்டம் 1976 ஆகிய சட்டங்களைக் குறிப்பிடலாம். தேச விடுதலைக்குப் பிறகு உற்பத்தி மற்றும் சேவைத் துறைகளில் பொதுத்துறை நிறுவனங்களைக் கட்டமைப்பதில் ஏஐடியுசி மாபெரும் பங்காற்றியது.

இதன் மூலம், அரசியல் அமைப்புச் சட்டத்தில் உறுதியளித்துள்ளபடி, பிற்படுத்தப்பட்ட வகுப்பினருக்கும் வேலைவாய்ப்பில் சம வாய்ப்பு வழங்கப்பட ஏஐடியுசி மாபெரும் பங்காற்றியது.

சுருக்கமாக சொல்வதானால், இன்றைய தலைமுறையினர் உரிமைகள் என்று கருதும் பணியிட சூழல் ஒவ்வொன்றுக்குப் பின்னாலும் ஒரு மகத்தான போராட்ட வரலாறு உண்டு. எடுத்துக்காட்டாக, மிகை நேர பணிக்கு (overtime work) இரு மடங்கு ஊதியம் என்ற உரிமைக்கு பின் நாள் ஒன்றுக்கு 8 மணி நேர வேலை என்றும், 8 மணி நேரத்திற்குப் பிறகு உழைப்பதற்கு இரு மடங்கு ஊதியம் என்று சட்டப்படி வரம்பு கட்ட நடைபெற்ற போராட்ட வரலாற்றைக் கூறமுடியும்.

### இன்றைய சவால்கள்:

முதலாளி – தொழிலாளி உறவுகளில் மிகப் பெரிய மாற்றத்தை இருபதாம் நூற்றாண்டு ஏற்படுத்தியது. இரு உலக மகா யுத்தங்கள், ரஷ்ய புரட்சி, சர்வதேச தொழிலாளர் அமைப்பு (ILO) போன்ற முத்தரப்பு நிறுவனங்களின் உருவாக்கம், மக்கள் நல அரசு எனும் புதிய கருத்தாக்கம் ஏற்கப் பெறுதல் மற்றும் தொழிற்சங்கம் அமைப்பதற்கான உரிமை, குறைந்தபட்ச ஊதியம் ஆகியவை சர்வதேச தொழிலாளர் அமைப்பில் விவாதிக்கப்பட்டு, அவை உறுதி செய்யப்பட்டு, நடைமுறைப்படுத்திட உறுப்பு நாடுகள் சட்டங்கள் இயற்றுவது என்று முக்கியத்துவம் வாய்ந்த பல நிகழ்வுகள் இருபதாம் நூற்றாண்டில் இடம் பெற்றன.

20 ஆம் நூற்றாண்டின் இடைப்பகுதியில் இரண்டாம் உலகப் போருக்குப் பின், தேசிய விடுதலை இயக்கங்கள்

தொடர்ச்சி 3ம் பக்கம் >>

## எதிரும் புதிரும்




ஆளுநர் பதவியே தேவை இல்லாத ஆணிதான்!! –பொதுமக்கள்






# அங்கே கடவுள்! இங்கே கவர்னரா?

**பேரன்புமிக்க தோழர்களே!**

**உலகில் உள்ள அனைத்து நாடுகளிலும் அரசியல் கட்சிகளும், அமைப்புகளும் உண்டு.**

கட்சிகளும், அமைப்புகளும் தாங்கள் ஏற்றுக்கொண்ட தத்துவத்தை, கொள்கையை, இலட்சியங்களை பகிரங்கமாக மக்களுக்கு தெரிவித்து மக்களின் ஆதரவைப் பெறுவார்கள்.

ஆனால், இங்கே ஒரு அமைப்பு உள்ளது. அதன் அரசியல் பிரிவும் உள்ளது. அமைப்பான ஆர்.எஸ்.எஸ்., அதன் அரசியல் பிரிவாக செயல்பட்டு வரும் முந்தைய ஜனசங்கம், இன்றைய பாஜகவோ தங்களின் தத்துவமாக போற்றப்படும் மனுதர்மத்தை இந்நாள்வரை பகிரங்கமாக வெளிப்படுத்தி மக்களின் ஆதரவை பெறுவதற்கு முயன்றது இல்லை – தங்களது சொந்த தத்துவத்தை, கொள்கையை வெளிப்படுத்தாது செயல்பட்டுவரும் அதிசயமான அமைப்புதான் ஆர்.எஸ்.எஸ். கட்சிதான் பா.ஜ.க.

தங்களது தத்துவத்தை பகிரங்கமாக வெளிப்படுத்தினால் மக்களின் கடுமையான கோபத்திற்கு உள்ளாக நேரிடும் என்கிற உண்மையை அவர்கள் உணர்ந்த காரணத்தால், அவைகளை மூடி மறைத்துவிட்டு, கடவுளின் பெயரால் கட்சி நடத்தி வருகின்றார்கள்.

தங்களுக்கு ஏற்பட்டுள்ள துன்ப துயரத்திற்கு தீர்வு காண கடவுளை வணங்கினால் தீர்வு கிடைக்கும் என்கிற மக்களின் அறியாமையை, மூடநம்பிக்கையை தங்களுக்கு சாதகமாக பயன்படுத்திக் கொண்டு, தங்களின் குறுகிய அரசியல் நோக்கத்தை நிறைவேற்றிக் கொள்ள அற்பத்தனமான முறையில் கலகங்களை மேற்கொண்டு வருகின்றார்கள்.

ராமன் மீதும் அனுமன் மீதும் மக்களுக்கு உள்ள நம்பிக்கையை தனதாக்கிக்கொள்ள கடவுளின் பெயரால் கலகம் செய்து வருகின்றனர். ராமநவமி அல்லது அனுமன் ஜெயந்தியை தமிழ்நாட்டு மக்கள் பெரும் விழா எடுத்து கொண்டாடுவது இல்லை. வடமாநிலங்களில் இவ்விரு விழாக்களும் பெருமளவில் கொண்டாடப்பட்டு வருகின்றது.

இவ்விழாக்களுக்கு பெருமளவில் மக்கள் கூடுகின்றார்கள், ஊர்வலமாகவும் செல்கின்றார்கள்.

ராமன் வேடமணிந்தும், அனுமன் வேடமணிந்தும் ஊர்வலத்தில் செல்கின்றனர்.

ஊர்வலமாக செல்லும் பெருங்கூட்டத்தில் காவிக் கும்பல் உள்ளே புகுந்து, தலைமை தாங்கி ஆடல், பாடல், முழக்கம் என கூக்குரல் கிளப்பி செல்கின்றது.

ஊர்வல வாகனத்தில் ஒலிபெருக்கி அமைத்து முழக்கங்களும், பாடல்களும் காதை பிளக்கும் அளவிற்கு காட்டுக் கூச்சல் கிளப்பிச் செல்வார்கள்.

ஊர்வலமாக வேண்டுமென்றே இஸ்லாமிய சகோதரர்கள் குடியிருப்பு வழியாகச் செல்வார்கள்.

இந்துக்கள் எழுச்சி பெறும் போது அதன் விளைவுகள் பயங்கரமாக இருக்கும் என்று தொடங்கி, இஸ்லாமியர்களுக்கு எதிராக உணர்ச்சியை தூண்டிவிடும் பாடல்கள் ஒலிபரப்பப்படுகின்றன.

ஊர்வலத்தில் வருபவர்கள் இராமனின் படத்தையோ அல்லது அனுமன் படத்தையோ எடுத்து வருவது இல்லை.

மாறாக காவி துண்டுகளை அணிந்து கொண்டு, தங்களின் கொடிய கரங்களில் வாள், கத்தி, கிரிக்கெட் பேட், பொம்மை துப்பாக்கிகள் மற்றும் நிஜ துப்பாக்கிகள் என வானை நோக்கி உயர்த்தியபடி வருகின்றனர்.

இஸ்லாமியர்கள் வசிக்கும் பகுதிகளில் செல்லும்போது உரக்க குரல் எழுப்புவார்கள். குறிப்பாக மசூதியை ஊர்வலம் நெருங்கும்போது இவர்களது மிக ஆக்ரோஷமாக, ஆத்திரமூட்டக் கூடியதாக காட்டுக் கூச்சல் எழுப்பப்படும்.

இத்தகைய அராஜக அடாவடித்தனத்திற்கு எதிராக இஸ்லாமிய இளைஞர்கள் எதிர்ப்பு குரல் கொடுத்தால் அங்கே கலகம். கலகத்தை மூட்டியவர்கள் இஸ்லாமியர்கள் எனக் குற்றம் சாட்டி அவர்களது வீடுகள், கடைகள் புல்டோசர் கொண்டு இடித்து தள்ள அரசே உத்தரவு போடுகின்றது.

நாட்டின் தலைநகர் டெல்லி மாநிலத்தில் ஆம் ஆத்மி ஆட்சி நடைபெற்றாலும் ஒன்றிய அரசின் கட்டுப்பாட்டில்தான் காவல்துறை உள்ளது.

அதுமட்டுமன்றி மாநகராட்சியை பாஜக தான் ஆட்சி நடத்துகின்றது. ஜஹாங்கிர் புரி மாநகராட்சி பகுதியில் உள்ள இஸ்லாமியர்கள் வீடுகளை புல்டோசர் கொண்டு இடிக்க உத்தரவிட்டது.

உச்சநீதிமன்றம் வீடுகளை இடிக்காதே என்று உத்தரவு பிறப்பித்தும் கூட, நீதிமன்ற உத்தரவுகளை குப்பையில் வீசி எறிந்துவிட்டு வீடுகளை இடித்தார்கள்.

காவிக் கூட்டத்தின் அராஜகத்தை எதிர்த்து இந்திய கம்யூனிஸ்ட் கட்சி, மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி உள்ளிட்ட கட்சிகள் புட்டோசரை மறித்து போராட்டத்தில் ஈடுபட்டனர்.

**நீதிமன்றத்தில் மாநகராட்சியின் சார்பில் வாதிட்ட வழக்கறிஞர் வீடுகளை இடிக்கவில்லை; நாற்காலிகளை அகற்றினோம் என்று அப்பட்டமான பொய்யை கூறியதை நீதிமன்றம் நிராகரித்தது மட்டுமின்றி, நாற்காலிகளை அகற்ற புல்டோசர் எதற்கு? எனகேள்விஎழுப்பியதுடன், இஸ்லாமியர்கள் வீடுகளை மட்டும் குறி வைத்து இடிப்பது ஏன்? என கேள்வி கேட்டுள்ளது! நீதிமன்ற உத்தரவை மீறி செயல்படுவதை அனுமதிக்க முடியாது என்று கடும் கண்டனத்தை தெரிவித்துள்ளது.**

உத்தரபிரதேசம், பீகார், உத்தரகாண்ட், மத்தியப் பிரதேசம், கர்நாடகம் என பல மாநிலங்களில் கலகத்தை உருவாக்கி இந்து, இஸ்லாம், கிறிஸ்தவ மக்களிடையே மோதலை உருவாக்கி கலகக் கொடியை உயர்த்தியுள்ளது காவிக் கும்பல்.

இவை மட்டுமல்ல, மசூதிகளில் ஒலிபெருக்கியை அகற்றாவிட்டால் விபரீதம் ஏற்படும் என நவநிர்மான் சேனா தலைவர் ராஜ்தாக்கரே கடும் எச்சரிக்கை விடுத்துள்ளார்.

மே மாதம் 3 ஆம் தேதிக்குள் மசூதிகள் மீது கட்டப்பட்டுள்ள ஒலிபெருக்கிகளை அகற்றப் படவேண்டும், இல்லையெனில், மசூதிகளின் முன்பாக நாங்கள் ஐந்து முறை ஹனுமன் சாலியா மந்திரத்தை ஓதுவோம் என பகிரங்கமாக மிரட்டல் விடுத்துள்ளார்.

நாம் இருவர், நமக்கு இருவர் என்ற குடும்பக் கட்டுப்பாட்டை இந்துக்கள் புறந்தள்ளி நாம் இருவர் நமக்கு நால்வர் என பிள்ளைகளை பெற்றுத் தள்ளவேண்டும்– அவர்களில் இரண்டு பிள்ளைகளை ஆர்எஸ்எஸ் அமைப்பில் சேர்த்திட வேண்டும் என்று பெண் துறவி சாத்வி ரிதம்பரா அழைப்பு விடுத்துள்ளார்.

மொத்தத்தில் நாடு முழுவதும் மதக்கலவரங்களை திட்டமிட்டு தூண்டுவது என்று முடிவெடுத்து செயல்படுகின்றனர்.

மக்கள் விரோத ஒன்றிய அரசின் சட்டங்களை, திட்டங்களை, அறிவிப்புகளை, விலைவாசி உயர்வு போன்றவைகளை எதிர்த்து போர்க்குரல் எழுப்பி வரும் மக்களை திசைதிருப்பி மத மோதலை உருவாக்கி வன்முறைகள் மூலம் மக்களை பிளவுபடுத்திட பயன்படுத்துகின்றார்கள்.

அங்கே அதுவென்றால் இங்கே தமிழ்நாட்டில் கவர்னரை காட்டி மிரட்டுகின்றார்கள்.

கவர்னருக்கு கருப்புக்கொடி காட்டியதை காரணம் காட்டி தமிழ்நாட்டில் சட்டம் ஒழுங்கு கெட்டுவிட்டது என்று கூச்சல் போடுகின்றார்கள்.

கருப்புக்கொடி காட்டியதை சும்மா விடமாட்டோம். இதோ இப்போதே உள்துறை அமைச்சர் அமித் ஷாவை சந்தித்து கடிதம் கொடுக்க போகிறேன், நானே கொடுக்கப் போகிறேன் என்று அண்ணாமலை அரசை அச்சுறுத்துகின்றனர்.

அங்கே கடவுள், இங்கே கவர்னர் என பீதியை கிளப்புகின்றார்கள்.

ஒரு பொய்யை, திரும்பத் திரும்பச் சொன்னால் உண்மையாகி விடும் என கோயபல்ஸ் வகையறாக்கள் துடியாய் துடிக்கின்றார்கள்.

வன்முறை, கலகம், மோதல் என்று நாடெங்கும் கலகத் தீ மூட்டி தங்களின் பாசிசத் தனத்தை வெளிப்படுத்தி வருகின்றனர்.

சர்வாதிகாரம் – பாசிசம் ஒருபோதும் வெற்றி பெறாது என்கிற உண்மையை அவர்களுக்கு உணரச் செய்ய நேரம் வந்துவிட்டது.

மக்களின் ஒற்றுமைக்காக அவர்களின் உயர்வுக்காக அயராது பாடுபடுவோம்!

அரசியல் ரீதியாக – அமைப்பு ரீதியாக மக்களை அணி திரட்டிட களம் காண்போம்!

காவி கும்பலுக்கு நாட்டில் இடம் இல்லை என்பதனை மெய்ப்பிக்க நமது மாநாடுகளில் திட்டமிடுவோம்!

மீண்டும் சந்திப்போம் வணக்கம்.

**தோழமைமிக்க**


**இரா.முத்தரசன்**



- பி.எஸ்.மாசிலாமணி

# வேளாண் சட்டங்களை மீண்டும் புதிய வடிவில் கொண்டுவர பாஜக முயற்சி!

**மூன்று வேளாண் சட்டங்களுக்கு எதிராக ஐக்கிய விவசாயிகள் முன்னணி டெல்லி நுழைவுப் போராட்டத்தை முறியடிக்க பல்வேறு வழிகளை ஒன்றிய அரசு கையாண்டது. சில நபர்களை கொண்டு உச்சநீதிமன்றத்தில் போக்கு வரத்து பாதிப்பு என மனு தாக்கல் செய்த நிலையில், போராடும் சங்கத் தலைவர்களை உச்சநீதிமன்றம் அழைத்தது. மத்திய அரசு எடுத்த புதிய வேளாண் கொள்கை இது. அரசின் கொள்கை முடிவில் தலையிட முடியாது என முதலிலேயே நீதிமன்றம் சொல்லி விட்ட நிலையில், நாங்கள் வந்து பயன் என்ன என்று மறுத்து விட்டார்கள்.**




அதன்பின் இந்த சட்டங்களால் விவசாயிகளுக்கு என்ன பாதிப்பு ஏற்படும் என நாடு தழுவிய நிலையில் விவசாயிகளிடம் கருத்து கேட்டு உச்சநீதிமன்றத்திற்கு அறிக்கையாக கொடுத்திட நான்கு பேர் கொண்ட கமிட்டியை அமைக்க உத்தரவிட்டது. இக் கமிட்டியின் உறுப்பினர்களாக மகாராஷ்டிராவில் உள்ள ஒரு சங்கத்தின் பொறுப்பாளர், ஒன்றிய அரசின் ஓய்வு பெற்ற உயர் அலுவலர், தொண்டு நிறுவனத்தின் பொறுப்பாளர் என மத்திய அரசு தான் இக்கமிட்டியின் பெயர்களை பரிந்துரை செய்து அமைக்கப்பட்டது. இக்கமிட்டியில் உள்ளோர் அரசின் ஆதரவாளர்கள் என அப்போதே எஸ்.கே.எம். அறிவித்துவிட்டது.

பின்னர் இதில் இடம் பெற்றிருந்த ஒருவர் என்னால் செயல்பட இயலாது என சொல்லி தொடக்கத்திலேயே விலகி விட்டார். இதன்பின் மூவர் கமிட்டி விசாரித்து முடித்ததாக ஒரு அறிக்கையை உச்சநீதிமன்றத்தில் கொடுத்துள்ளது.

வேளாண் விரோத சட்டங்களை ஒன்றிய அரசு சட்டபூர்வமாக திரும்பப் பெற்று விட்ட நிலையில், இந்த அறிக்கையை நீதிமன்றம் வெளியிடாமல் நிறுத்திவைத்து விட்டது. அந்த அறிக்கையைதான் சுப்ரீம் கோர்ட் கமிட்டி, இதன் தலைவர் கென்வட் தற்போது பொது வெளியில் செய்தியாளர்களை சந்தித்து விவரித்துள்ளார்.

இந்த சட்டங்களை 87 சதம் பேர்கள் ஆதரித்துள்ளனர். 13 சதம் பேர் மட்டுமே எதிர்த்துள்ளனர். அதாவது 3.8 கோடி விவசாயிகளை உள்ளடக்கிய சங்கங்கள் ஆதரித்துள்ளன. கருத்து கேட்டது என்பது, சங்கப்பிரதிநிதிகளிடம் நேரடியாக, இணையவழி மூலம், இமெயில் வழியாக, ஆதாரங்களின் அடிப்படை என 4 வகைகளில் கருத்து அறியப்பட்டதாக சொல்கிறார். 500க்கும் மேற்பட்ட சங்கங்கள் நாடு தழுவிய அளவில் பல மாதங்களாக உறுதியுடன் போராடி வந்த நிலையில், இவர்களின் கருத்தறியாது இதுவெளியிடப்பட்டு இருக்கிறது. வேளாண்மை தரகர்கள், கமிசன் வியாபாரிகள், தொண்டு நிறுவனங்கள், ஓய்வுபெற்ற அரசு உயர் அலுவலர்கள் என வேளாண்மையில் நேரடியாக ஈடுபடாதவர்களிடம் இக்கருத்துக்கள் அறியப்பட்டுள்ளது.

மேலும் உச்சநீதிமன்றம் கேட்காத, தன் சுய எதிர்பார்ப்பை வெளிப்படுத்தும் நிலையில் புதிய கருத்தையும் இவர் இதில் வெளியிடுகிறார்.

வேளாண் உற்பத்தி பொருட்களுக்கு ஒன்றிய அரசு குறைந்தபட்சஆதாரவிலை (எம்.எஸ்.பி), நிர்ணயம் செய்ய வேண்டிய அவசியமில்லை. நிர்ணயம் செய்கிற போது அரசு அவைகளை கொள்முதல் செய்ய வேண்டிய கட்டாயம் ஏற்படுகிறது. எனவே அரசு கொள்முதல் தேவையில்லை. அரசு உணவு பொருட்களை வாங்கி இருப்பு வைக்க வேண்டியதில்லை. பொது விநியோக அங்காடிகளை மூடிவிடலாம். மானியத்தை நேரடியாக அவரவர்கள் வங்கிக் கணக்குகளுக்கு அனுப்பி விடலாம் எனவும் கூடுதலாக கூறியுள்ளார்.

விவசாயிகளுக்கு மிகவும் சாதகமான இப்படியாப்பட்ட சட்டங்களை ஒன்றிய அரசு திரும்பப் பெற்றது மாபெரும் தவறு எனவும் கவலையுடன் கூறியதுடன், மீண்டும் இந்த சட்டங்களை கொண்டுவர வலியுறுத்தி செப்டம்பர் மாதத்தில் டெல்லியில் பல்லாயிரம் பேர்கள் பங்குகொள்ளும் பேரணி நடத்தப்படும் என்றும் இறுதியில் அறிவித்துள்ளார்.

தற்போது அரசு கொள்முதல் பெயர் அளவிற்காவது இருப்பதால் தான் விவசாயிகளுக்கு கொஞ்சம் பாதுகாப்பு கிடைப்பது மட்டுமல்ல, இதனால்தான் ஏழை எளிய நடுத்தர மக்கள் ஓரளவு பட்டினி இல்லாமல் சாப்பிட்டு உயிர்வாழ்கிறார்கள். இவர்களின் உணவை பறித்து பட்டினி போட்டு சாகடிக்க வேண்டும் எனஅவர் கருதுகிறார் போலும்.

**சம்பந்தப்பட்ட பயனாளிகளுக்கு மானியம் சரிவர இதுவரை வந்ததுண்டா? வழங்கப்பட்ட மானியங்கள் நாளடைவில் குறைந்து. மறைந்துபோயுள்ளதே, எரிவாயு சிலிண்டர் மானியம் போல, தற்போது வரை நெல், கோதுமை மட்டுமே ஒன்றிய அரசு விவசாயிடம் கொள்முதல் செய்கிறது. அதுவும் ஒவ்வொரு ஆண்டும் 6சதம் அளவில்தான். எஞ்சியவைகளை தனியாரிடம் மிகக் குறைந்த விலைக்கு விற்பனை செய்து, ஒவ்வொரு ஆண்டும் பல ஆயிரம் கோடி ரூபாய் இழப்பை சந்தித்து வருகிறார்கள் விவசாயிகள். தனியார்களின் கொள்ளை லாப வேட்டைக்கு வழி வகுக்கவே இக்கமிட்டி விரும்புவதாக தெரிகிறது.**

இக்கமிட்டியின் செயல்பாடுகள் பலகேள்விகளை எழுப்புகிறது. சுப்ரீம் கோர்ட் கேட்டது இந்த சட்டங்களால் விவசாயிகளுக்கு என்ன பாதிப்பு என தானே? அதற்கு பதில் சொல்ல வேண்டிய இக்கமிட்டி புதிய திட்டங்களை ஆலோசனைகளை, நீதிமன்றம் கேட்காத, இவர்களின் சொந்த கருத்துக்களை கொடுக்கலாமா?

இது சுப்ரீம் கோர்ட் உத்தரவை மீறிய செயல் ஆகாதா, எந்த அமைப்பு ஆய்வறிக்கை கேட்கிறதோ அந்த நீதிமன்றம் தான் இதன் அறிக்கையை வெளியிட முடியும். விவாதிக்க முடியும். அந்தமன்றமே அவசியமில்லை என இருக்கிற போது, இக்கமிட்டி பொதுவெளியில் இதை வெளியிடுவது நீதிமன்றத்தை மீறிய செயல் ஆகாதா?

இப்படி நீதிமன்றங்கள் அமைக்கும் விசாரணை கமிட்டிகள் தன் விருப்பத்திற்கு வெளியிடுவதும், தன் கருத்துக்களை நீதிமன்ற அங்கீகார துணையோடு வெளியிடுவதும் பொது அமைதிக்கு பங்கம் ஏற்படாதா? நீதி பரிபாலனம் புரியும் அமைப்புகள் நெறிதவறும் இந்த செயலுக்கு உரிய நடவடிக்கையை எடுத்திட வேண்டிய அவசியம் உள்ளது.

ஒன்று மட்டும் உறுதியாக தெரிகிறது. இந்த சட்டங்கள் திரும்பப் பெறப்பட்ட பின் ஒன்றிய வேளாண் துறை அமைச்சர் நரேந்திர சிங் தோமர் அவர்கள் கூறியதை கவனத்தில் கொள்ள வேண்டும்.

திரும்பப் பெறப்பட்ட வேளாண் சட்டங்கள் மறு வடிவில் மீண்டும் கொண்டு வரப்படும் என்று அவர் கூறியதற்கு, பொதுமக்களின் ஆதரவை பெற்றிடவே, இக்கமிட்டியின் மூலம் புதிய சட்டங்களுக்கான திறவுகோலாக இது வெளியிடப்பட்டதாக தெரிகிறது.

உச்சநீதிமன்ற பின்புற வழியை, நாடாளும் அவைகளின் நுழைவு வழிகளாய் வைத்து புதிய வேளாண் விரோத சட்டங்களை பிரசவிக்க துடிக்கும் போக்கை முறியடித்திட முன்னைவிட தீவிரமாகிறது விவசாயிகளின் எழுச்சிமிக்க போராட்டம் தொடரும்.

தொடர்புக்கு: 94438 65101

>> 01ம் பக்கத் தொடர்ச்சி

தீவிரமடைந்தன; ஐக்கிய நாடுகள் சபை உருவானது; பனிப்போர் நடவடிக்கைகள் ஆரம்பமாகின. தொழில்நுட்பத்தின் அதிவிரைவு வளர்ச்சி முதலாளி ஸ்ரீ தொழிலாளி இடையிலான உறவில் மேலும் மிகப்பெரிய மாற்றத்தை ஏற்படுத்தியது. தகவல் தொழில்நுட்பம் 4வது தொழிற்புரட்சிக்கு கட்டியம் கூறியது.

அரசியல் தளத்தில் 1989 – 90களில், சோவியத் சோசலிச ஒன்றியம் சிதைவுற்றது. உலக வங்கி, உலக வர்த்தக நிறுவனம் மற்றும் சர்வதேச நிதியம் ஆகியவற்றைக் கொண்டு அமெரிக்கா தலைமையிலான ஏகாதிபத்திய சக்திகள் மீண்டும் உலகத்தை தங்கள் கட்டுப்பாட்டிற்குள் கொண்டு வர முயன்றன.

21 ஆம் நூற்றாண்டின் முதல் 25 ஆண்டு காலகட்டத்தில் நாம் பயணித்து வருகிறோம். இந்தியாவில் 2022 ஆம் ஆண்டு மே தினத்தில் உழைக்கும் வர்க்கத்தினராகிய நமது தற்போதைய நிலை என்ன? வரலாறு, தொடங்கிய இடத்திற்கே வட்டமடித்து மீண்டும் வந்து நிலை கொண்டுவிட்டது. கடந்த 150 ஆண்டு காலமாக உழைக்கும் வர்க்கம் போராடி வென்றெடுத்த உரிமைகளை இழந்து மீண்டும் பழைய நிலைமைக்கு தள்ளப்பட்டிருப்பதை நாம் பார்க்கிறோம். நமது முன்னோடிகள் வென்றெடுத்த உரிமைகள் பறிபோய்க் கொண்டிருப்பதை எண்ணி வேதனையுற்று அமைதியாக வேடிக்கை பார்த்துக் கொண்டிருக்க முடியாது.

அமைப்புரீதியான தொழிற்சங்கம் இல்லாத காலத்திலும் இந்திய தொழிலாளர்கள் போராட்ட களம் புகுந்தார்கள். எனவே, தொழிற்சங்கம் அமைக்கும் உரிமையை நம்மிடமிருந்து தொழிலாளர் சட்ட தொகுப்புகள் பறித்தால்தான் என்ன?

வேலை நிறுத்தப் போராட்டங்கள் நடத்த இடையூறுகள் செய்தால் தான் என்ன?

நிரந்தரப் பணிகளை காலமுறை பணிகளாக மாற்றினால் தான் என்ன?

முதலாளிகள் எளிதாக தொழில் நடத்திட இத்தகைய மாற்றங்களைக் கொண்டு வருகிறோம் என்று ஒன்றிய அரசாங்கம் வெளிப்படையாக அறிவித்தால் தான் என்ன?

சுதந்திரம் அடைந்த பின்பு 70 ஆண்டுகளாக அரும்பாடுபட்டு உழைத்து உருவாக்கிய பொதுத்துறை நிறுவனங்களை ஒன்றிய அரசாங்கம் அழித்தால் தான் என்ன?

இவை அனைத்தையும் போராடி முறியடிப்போம்! இழந்த உரிமைகளை மீண்டும் வென்றெடுப்போம்!

இந்த ஆண்டு மே தினம் என்பது, தொழிலாளர் விரோத, மக்கள் விரோத, விவசாயிகள் விரோத, மற்றும் தேச விரோத ஒன்றிய அரசாங்கத்திற்கு எதிரான போராட்ட நடவடிக்கைகளுக்கான ஓர் அறைகூவல் ஆகும். தங்கள் மீது திணிக்கப்பட்ட மூன்று வேளாண் சட்டங்களை, தங்களின் ஒற்றுமை மற்றும் உறுதிப்பாட்டின் மூலமாக, விவசாயிகள் ஒன்றிய அரசாங்கத்தைத் திரும்பப் பெற செய்தார்கள். நாம் விழிப்புடன் இருக்க வேண்டும். சாதிய மற்றும் மதவாத சூழ்ச்சிகள் மூலமாக பிளவுகளை உண்டாக்குவதற்கான முயற்சிகளை முறியடித்து தொழிலாளர் – விவசாயிகள் ஒற்றுமையை மேலும் வலுப்படுத்த வேண்டும்.

2024 ஆம் ஆண்டில் மோடி அரசாங்கத்தைத் தூக்கியெறிந்திடுவோம் என்ற ஐக்கிய விவசாயிகள் முன்னணியின் முழக்கத்தையே நாமும் மேதின சபதமாக ஏற்போம்!

தமிழில்: **அருண் அசோகன்**

## எடப்பாடி பழனிச்சாமியை உளவுத்துறைதான் பின்தொடர்கிறது: இரா.முத்தரசன்

விருதுநகர்: விருதுநகரில் இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் மாநில செயலாளர் இரா. முத்தரசன் செய்தியாளர் சந்திப்பின்போது கூறியதாவது, இங்கிருந்து இலங்கை 20கி.மீ.தூரம்தான் உள்ளது. பொருளாதார நெருக்கடியில் விலைவாசி உயர்வால் மக்கள் தெருவில் இறங்கி போராடிக் கொண்டிருக்கிறார்கள். அதிபர் மாளிகை முற்றுகையிடப்பட்டுள்ளது. அவ்வரசால் ஒன்றும் செய்ய முடியவில்லை. அத்தகைய போராட்டம் இந்தியாவில் நடக்க அதிக நாட்கள் இல்லை. ஒன்றிய அரசு விலைவாசியை கட்டுப்படுத்த எந்த முயற்சியும் எடுக்கவில்லை. அதற்கு பதில் மதத்தின் பேரால் கலவரத்தை உருவாக்குகிறார்கள். தங்கள் குறுகிய அரசியல் நோக்கத்தை நிறைவேற்ற முயற்சிக்கிறார்கள். இது ஆபத்தானது.

ஒரு செய்தியாளர் "எடப்பாடி பழனிச்சாமியை மக்கள் பின்தொடர ஆரம்பித்து விட்டார்கள் என கூறி உள்ளாரே " எனக்கேட்டார். அதற்கு மக்கள் பின் தொடரவில்லை உளவுத்துறைதான் பின்தொடர்ந்து கொண்டிருக்கிறது என முத்தரசன் நகைச்சுவையாக பதிலளித்தார். செய்தியாளர் சந்திப்பில் மாநில நிர்வாக குழு உறுப்பினர்கள் தி.இராமசாமி எக்ஸ் எம்எல்ஏ, வி.அழகிரிசாமி எக்ஸ் எம்பி , மாவட்ட செயலாளர் பி. லிங்கம் எக்ஸ் எம்பி, மாவட்ட துணை செயலாளர் எஸ்.பழனிக்குமார் ஆகியோர் இருந்தார்கள்.

தொட்டுப் பார்த்தால் காகிதம்
தொடர்ந்து படித்தால் ஆயுதம்

ஜனசக்தி

மலர் 85 இதழ் 04

## தாவும் அகந்தைக் குரங்கு!

கொரோனா பெருந்தொற்று உலகமெங்கும் ஆட்டிப் படைத்து கொண்டிருந்த நேரம். 2020 ஆம் ஆண்டின் ஜூலை மாதம். மத்திய வாரியத்தின் மேல்நிலைப்பள்ளித் தேர்வில் மாணவர்களுக்கு சில குறிப்பிட்ட பாடங்களிலிருந்து கேள்விகள் கேட்கப்படாது என்ற அறிவிப்பு வந்தது. அதாவது அவற்றை மாணவர்கள் படிக்கத் தேவையில்லை என்று பொருள்.

கூட்டாட்சி முறைமை, மதச்சார்பின்மை, தேசியம், குடியுரிமை ஆகிய பாடங்களே இவ்வாறு நீக்கப்பட்டன. இதுகுறித்து ஆட்சேபனைகள் எழுந்தபோது ஒன்றிய அரசின் அன்றைய கல்வித்துறை அமைச்சரான ரமேஷ் போக்ரியால் கொதித்துப் போய் பேசினார்.

“பள்ளிக்கூடங்கள் மூடியிருந்ததால், பாடங்களை நடத்த முடியவில்லை. மாணவர்கள் சோர்ந்து போயிருக்கிறார்கள். அவர்களது நலனுக்காக, மொத்த பாடங்களில் 30 சதவீதத்தை குறைப்பது என நல்ல நோக்கத்தோடு முடிவெடுத்தோம். நீக்கப்பட்ட தலைப்புகளை ஒன்று சேர்த்துக் கொண்டு, தவறான நோக்கத்துடன் நாங்கள் செய்தது போலப் பேசி, பரபரப்பை ஏற்படுத்த எதிர்க்கட்சிகள் முயற்சிக்கின்றன” என்று சரமாரியாக குற்றம் சாட்டினார்.

“நாம் கல்வியிலிருந்து அரசியலை விலக்குவோம், அரசியலை மேலும் கல்வித்தகுதி பெறச் செய்வோம்“ என்று தத்துவம் எல்லாம் பேசினார். அரசியல் அறிவியல் பாடத்தில் இருந்து அரசியலை நீக்கிவிட்டு வேறென்ன சொல்லித் தருவார்கள் என்று அப்போது கேள்விகள் எழுந்தன.

கொரோனா பாதிப்பினால் இந்த ஆண்டுக்காக ஒரே ஒருமுறை பாடங்கள் குறைக்கப்படுகின்றன. இந்த பாடங்கள் நிரந்தரமாக நீக்கப்படவில்லை என்றும் அவர் சத்தியம் செய்தார். அதை என்சிஇஆர்டி அதிகாரியும் ஆமாம் என வழிமொழிந்தார்.

அவர்கள் சொன்னதெல்லாம் மாசு மருவற்ற பொய்கள் உண்மைக்கும் அதற்கும் எந்தச் சம்பந்தமும் இல்லை என்பதை ஒன்றிய அரசு இப்போதைய நடவடிக்கைகள் வெளிச்சம் போட்டுக் காட்டுகின்றன. இதையும் என்சிஇஆர்டி வழிகாட்டுதல் என்றுதான் சொல்கிறார்கள்.

9 முதல் 12 வரை உள்ள வகுப்புகளுக்கு பின்வரும் தலைப்பிலான பாடங்கள் நிரந்தரமாக நீக்கப்படுகின்றன. கூட்டுச் சேரா நாடுகள் இயக்கம், பனிப்போர் யுகம் ஆகிய பாடங்கள் நீக்கப்படுகின்றன. கூட்டு சேரா நாடுகளின் தலைவனாக இருந்து உலக நாடுகளை வழிநடத்திய இந்தியா, இன்று அமெரிக்காவின் தாசானுதாசனாகி வால் பிடித்து நிற்பதை மாணவர்கள் அறிந்து விடக்கூடாது அல்லவா!

‘உணவு பாதுகாப்பு’ எனும் அத்தியாயத்தில், ‘விவசாயத்தின் மீது உலகமயமாக்கலின் தாக்கம்‘ என்ற பாடம் இருந்தது. விவசாய நிலங்களில் இருந்து விவசாயிகளை வெளியேற்றிவிட்டு, விவசாயத்தை கார்ப்பரேட் இடைத்தரகர்களிடம் ஒப்படைக்க வேண்டுமென உலகமயமாக்கல் நெட்டித் தள்ளுவதை அந்தப்பாடம் எடுத்துச் சொல்கிறது. பொறுக்க முடியுமா? எடுத்துவிட்டார்கள்.

ஜனநாயகமும் பன்மைத்துவமும் என்றொரு பாடம். பன்மைத்துவத்தை சீரழித்து ஜனநாயகத்தை சர்வாதிகாரமாக மாற்றத் துடிப்பவர்களால், இந்தப் பாடம் இளம் வயதில் மாணவர்களுக்கு சொல்லித் தரப்படுவதை எவ்வாறு ஏற்க முடியும்?

‘மதம் வகுப்புவாதம் மற்றும் அரசியல்’ என்று ஒரு பாடம். இதில் புகழ்பெற்ற உருதுக் கவிஞரான ஃபைஸ் அகமது ஃபைஸ் அவர்களின் கவிதைகள் இருந்தன. இதைப்போலவே ஆசியஆப்பிரிக்க நாடுகளில் இஸ்லாமிய அரசுகளின் வளர்ச்சி மற்றும் முகாலய நீதிமன்றங்கள் போன்ற பாடங்களும் இருந்தன. இவையெல்லாம் ஒட்டுமொத்தமாக நீக்கப்பட்டுள்ளன.

உலகத்தின் உற்பத்தி முறையையே எந்திர மயமாக்கி, மாற்றியமைத்த தொழில் புரட்சி குறித்த பாடமும் கூட நீக்கப்பட்டுவிட்டது. மூலதனத்தோடு எவனும் பிறக்கவில்லை, தொழிலாளி உழைத்து உழைத்துத் தான் மூலதனம் உருவானது. அதை ஒரு வர்க்கம் கவர்ந்து கொண்டு முதலாளிகள் ஆகிவிட்டது என்ற அறிவியல் உண்மை மாணவர்களின் மூளையைத் தொட்டுவிடக்கூடாது. எனவே அதையும் தூக்கி விட்டார்கள்.

அறிவியலோடு சம்பந்தமே இல்லாத ஆர்எஸ்எஸ்ன் வர்ணாசிரம, சனாதன, சகிப்புத்தன்மையற்ற, பாசிச அரசியலை குழந்தைகளின் நெஞ்சில் நஞ்சாக விதைக்கிறார்கள். இது நம்முடைய அரசியல் சாசனத்திற்கு முழுக்க முழுக்க எதிரானது.

இது ஒரு குரூரமான மிகப் பெரிய சதித் திட்டம். ஏற்கனவே படித்து, வளர்ந்து முற்போக்கு சிந்தனை கொண்ட மாணவர்களை அச்சுறுத்துவது; அதற்காக, ஜவஹர்லால் நேரு பல்கலைக்கழகம் உள்ளிட்ட அனைத்து உயர் கல்வி நிறுவனங்களையும் தனது வானரப் படையான ஏபிவிபி மூலம் வன்முறைகளை காவல்துறையின் பாதுகாப்போடு கட்டவிழ்த்து விடுவது; எதிர்க் குரலை வன்முறையால் முடக்குவது ஒரு பக்கம்.

மறுபக்கத்தில், தொடக்க நிலை, மேல்நிலைப் பள்ளி மாணவர்கள் உண்மை வரலாற்றை கற்க விடாமலேயே, தன்னுடைய சித்தாந்தத்தை திணிப்பதற்காகக் களம் அமைப்பது. மொத்தத்தில் கல்வியை காவிமயமாக்குவது.

இந்திய அதிக இளைஞர்களைக் கொண்ட நாடு. அதுமட்டுமின்றி போன தலைமுறையை விட, இன்றைய தலைமுறை இளைஞர்கள் கூடுதல் அனுபவங்களோடும் அறிவோடும் இருக்கிறார்கள். ஆர்எஸ்எஸின் சவாலை அவர்கள் எதிர்கொள்வார்கள்; முறியடிப்பார்கள்.

### நீட் தேர்வு, புதிய கல்விக் கொள்கை எதிர்ப்பு,

# மாநில உரிமைகள் மீட்பு பயணம்!




## இரா. முத்தரசன் உரை

நீட் தேர்வு, புதிய கல்விக் கொள்கை எதிர்ப்பு, மாநில உரிமைகள் மீட்பு பரப்புரை பெரும் பயணம் பற்றிய பொதுக்கூட்டம் கள்ளக்குறிச்சியில் நடந்தது. இதில் கலந்துகொண்ட இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் மாநிலச் செயலாளர் இரா.முத்தரசன் சிறப்புரை ஆற்றியபோது பேசியதாவது:

தமிழக ஆளுநர் வழங்கிய தேனீர் விருந்தினை பெருந்தன்மையோடு அரசு புறக்கணித்தது. இந்திய கம்யூனிஸ்ட் கட்சி, மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி, இந்திய தேசிய காங்கிரஸ் கட்சி, விடுதலை சிறுத்தைகள் கட்சி என எல்லா கட்சிகளும் புறக்கணித்தது. அதேசமயம் ஒன்றிய அரசின் தொங்கு சதையாக உள்ள அதிமுக விருந்தில் பங்கேற்றது. நீட் தேர்வுக்கு எதிராக அதிமுக ஆட்சியில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. தற்போது திமுக அரசு நீட்டுக்கு எதிராக சட்டமன்றத்தில் தீர்மானம் நிறைவேற்றியதை ஆதரித்து அரசோடு இருக்கிறோம் என்று அதிமுகவினர் கையை உயர்த்தினார்கள். அந்த மசோதாவை ஆளுநர் திருப்பி அனுப்பினார். மீண்டும் சிறப்பு கூட்டம் கூடியது. ஒன்றிய அரசின் பரிந்துரையை ஏற்று ஆளுநரை ஜனாதிபதி நியமனம் செய்கிறார். ஆளுநரை நியமிப்பது தான் ஒன்றிய அரசு, ஆளுநருக்கு சம்பளம் வழங்குவது மாநில அரசு. தமிழ் மக்களின் வரிப்பணத்தில், மாநில அரசின் நிதியில் சம்பளம் பெற்றுக்கொண்டு மாளிகையில் தங்கிக்கொண்டு வாகனங்களில் செல்வது, இதற்கான செலவுகள் அனைத்தும் தமிழக அரசு செய்கிறது. ஆனால் தமிழ்நாடு அரசு அனுப்பும் மசோதாவை கிடப்பில் போடுவது முறையாகுமா? ஆளுநரை நியமிப்பது என்பது குறைந்தபட்சம் மாநிலத்தின் முதலமைச்சரோடு கலந்து பேசி இணக்கமான முறையில் நியமிப்பது தான் மரபு. இதனை மோடி ஆட்சி வந்த பிறகு பின்பற்றப்படாமல் 12 ஆர்எஸ்எஸ் காரர்களை ஆளுநர்களாக தனது அதிகார பலத்தை பயன்படுத்தி நியமிக்கிறார்கள். அது போல நீதிமன்றம் நாட்டு மக்களுக்கு மிகுந்த நம்பிக்கையை ஏற்படுத்தக்கூடிய இடம். ஒருவர் பாதிக்கப்பட்டால் நியாயம் கேட்டு போராடும் இடம். இங்கு நீதிபதிகள் மோடி அரசுக்கு ஆதரவாக இருக்கிறார்கள். ராமஜென்ம பூமி வழக்கில் சாதகமாக தீர்ப்பு வழங்குகிறார்கள். ஓய்வு பெற்ற நீதிபதிகள் ராஜ்யசபா உறுப்பினராகவும், ஆளுநராகவும் நியமிக்கப்படுகிறார்கள். மோடி அரசு நீட் அறிவிப்பால் அரியலூர் அனிதா உள்பட 25 மாணவ மாணவிகள் தற்கொலை செய்து கொண்டார்கள். என்னை பொருத்தமட்டில் தற்கொலை செய்துகொண்டார்கள் என நான் சொல்ல மாட்டேன் மோடியால் கொல்லப்பட்டார்கள் என்று தான் சொல்வேன். 12 ம்வகுப்பு முடித்த மாணவர்கள் மருத்துவர் சேர்க்கையை பெற வேண்டும் என்பதுதான் எங்களது கோரிக்கை. 12ம் வகுப்பில் பெற்ற மதிப்பெண்கள் அடிப்படையில் மருத்துவ மாணவர்களாக சேர்க்கப்பட வேண்டும். மோடி சொல்கிறார், சிறந்த மருத்துவர்களை உருவாக்க வேண்டும், சிறந்த மருத்துவர்களை உருவாக்க இப்படி தனித்தேர்வு நடத்த வேண்டும் அப்போதுதான் மக்களுக்கு சிறந்த மருத்துவம் தர முடியும் என்று சொல்லுகிறார்கள். இப்போது இந்தியாவிலேயே தமிழ்நாட்டில் மிகச் சிறப்பாக சிறந்த முறையில் தனியார் மற்றும் அரசு மருத்துவமனைகளில் புகழ்மிக்க அளவில் பணிபுரிந்து வருகிறார்கள். இவர்கள் எந்த நீட் தேர்வு எழுதி பாஸ் ஆனார்கள்? இது பொதுமக்களுக்குத் தெரிய வேண்டும், அப்போதுதான் மோடியின் உள்நோக்கத்தை புரிந்து கொள்ள முடியும். பிற்படுத்தப்பட்ட, மிகவும் பிற்படுத்தப்பட்ட, ஒடுக்கப்பட்ட மாணவர்கள் இப்போதுதான் ஐ.ஏ.எஸ்., ஐ.பி.எஸ்., தாசில்தார், மருத்துவர்கள் என பொறுப்புக்கு வருகிறார்கள். இதை தடுக்க வேண்டும் என்பதுதான் மோடியின் திட்டம். சென்னை மாகாணமாக இருந்த போது 1952 ஆம் ஆண்டு முதல் பொதுத் தேர்தல் நடந்தது. இந்திய கம்யூனிஸ்ட் கட்சி தலைமையில் பல கட்சிகள் இணைந்து ஐக்கிய முன்னணி அணி அமைத்து தேர்தலில் போட்டியிட்டது. அப்போது தந்தை பெரியார் தமிழ்நாடு முழுவதும் பிரச்சாரம் மேற்கொண்டு ஐக்கிய முன்னணி அரசு வெற்றி பெற செய்தார். அதன் மூலம் இந்திய கம்யூனிஸ்ட் கட்சி ஆட்சி பொறுப்பேற்க இருந்தது. இதனை அறிந்த தினமணி முதலாளி கோயங்கா அதன் ஆசிரியர் ஏ.எம் சிவராமன் இரண்டு பேரும் ராஜாஜியை சந்தித்தனர். ராஜாஜி அப்போது காங்கிரசிலிருந்து கருத்து வேறுபாடு ஏற்பட்டு ஒதுங்கி இருந்து ஓய்வெடுத்த நேரம், ராஜாஜியின் காலில் விழுந்து நாட்டை காப்பாற்ற வேண்டும் கம்யூனிஸ்ட் கட்சி ஆட்சி ஏற்கப் போகிறது. அவர்கள் ஆட்சிக்கு வந்தால் மிகுந்த ஆபத்து அதனை தடுத்து நிறுத்த வேண்டும். அதற்கு நீங்கள் முதலமைச்சராக வேண்டும் என்று தெரிவிக்கிறார்கள். ராஜாஜி கேட்கிறார், நேரு அனுப்பினாரா என்று இல்லை உங்களைப் பார்த்து விட்டு தான் நேருவை பார்க்க இருக்கிறோம் என்று தெரிவித்தனர். சட்டமன்ற உறுப்பினர், மேலவை உறுப்பினர் பொறுப்பு எதுவுமில்லாத ராஜாஜி ஐக்கிய முன்னணியை உடைத்து 2 கட்சிகளை வெளியேற செய்து முதலமைச்சர் ஆகிறார். 5 ஆண்டுகள் ஆட்சி செய்ய வேண்டிய ராஜாஜி ஆறுமாத காலத்திலேயே ராஜினாமா செய்தார். அதற்கு காரணம் ராஜாஜி கல்விக் கொள்கை கொண்டு வந்ததனால் பாதி நேரம் மாணவர்கள் பள்ளியில் படிக்க வேண்டும். பாதி நேரம் அப்பா செய்த தொழிலை செய்ய வேண்டும் என்ற மசோதாவை நிறைவேற்றினார். திராவிட இயக்கங்கள், கம்யூனிஸ்ட் கட்சி குலக்கல்வி முறையை எதிர்த்து போராடியது. அப்போது பெருந்தலைவர் காமராஜர் காங்கிரஸ் கட்சியில் இருந்தாலும், கம்யூனிஸ்ட் திராவிட இயக்கத்திற்கு ஆதரவு தெரிவித்து, ராஜாஜியின் குலக்கல்வியை எதிர்த்தார். ராஜாஜி ராஜினாமா செய்தார். ஆனால், தற்போது விவசாயிகள் நடத்திய போராட்டத்தில் பின்வாங்கிய மோடி ராஜினாமா செய்யவில்லை. அதே கல்விக் கொள்கையை மோடி தற்போது கொண்டு வந்து சாதாரண அடித்தட்டு மக்கள் கிராமப்புற மக்கள் முன்னேறி விடக்கடாது என்பதில் உறுதியாக உள்ளது. வர்ணாசிரம அடிப்படையில் நெற்றியில் பிறந்தவர்தான் கற்றுக் கொள்ளவும், கற்பிக்கவும் உரியவர்கள் என தனது அதிகாரத்தை தனக்குள்ள வாய்ப்பை மிருகத்தனமான பலத்தை பயன்படுத்தி பிற கட்சிகளின் ஆதரவு தேவை இல்லாததால் சொந்த கொள்கையை புகுத்துகிறார்கள். இதற்கெல்லாம் மூளையாக இருந்து இயக்குவது ஆர்எஸ்எஸ் அமைப்பு.

மதச்சார்பின்மை கொள்கையை அரசியலமைப்பு சட்டத்தின் மூலம் கொண்டுவந்த அம்பேத்கரின் பிறந்தநாளை கொள்கை ரீதியாக போற்றிக் கொண்டாடுகிறோம். அதே வேளையில் மதச் சார்புள்ள பிஜேபியும் கொண்டாடுகிறது இந்தியாவில் இந்து மதம் கிறிஸ்துவ மதம் சீக்கிய மதம் பௌத்த மதம் என பல மதங்கள் உண்டு. 4600 சாதிகள் உடைய இந்தியாவில் உடையால் உணவால் வழிபாட்டால் வேறுபடலாம். ஆனால் வேற்றுமையில் ஒற்றுமை கொண்ட தேசம் இந்தியா. இங்கு வகுப்புவாத சக்திகளுக்கு எதிராக திராவிட கழகம் நடத்தும் பிரச்சார பயணம் நாகர்கோவில் முதல் சென்னை வரை நடைபெறுவதில் மாநில உரிமைகள் காக்கப்படவேண்டும். இந்த பிரச்சார பயணம் வெற்றி பெற வேண்டும் எனப் பேசினார். இந்தக் கூட்டத்திற்கு திராவிட கழக மாவட்ட தலைவர் சுப்பிரமணியன் தலைமை தாங்கினார். மாவட்ட செயலாளர் சுந்தரராசன் வரவேற்றார். இதில் திராவிடர் கழக தலைவர் கி.வீரமணி, சங்கராபுரம் தொகுதி திமுக சட்டமன்ற உறுப்பினர் உதயசூரியன், கம்யூனிஸ்ட் கட்சி மாவட்ட செயலாளர் கே. அப்பாவு உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

தத்துவார்த்தம் 26



எஸ். தோதாத்ரி




# பாதையில் பதிந்த அடிகள்

**இன்றைக்கு சமுதாயப் பிரச்சினை குறித்து தீர்வு காண பல வழிகளைக் கூறுகின்றனர். அம்பேத்கரியம்தான் தீர்வு என்று ஒரு சாரார் கூறுகின்றனர். பெரியாரியம்தான் தீர்வு என்று வேறு சிலர் கூறுகின்றனர். வைணவம் தீர்வு என்று சிலர் கூறுகின்றனர். சைவம் தீர்வு என்று வேறு சிலர் கூறுகின்றனர். இஸ்லாமும், கிறிஸ்தவமும் தீர்வு என்று வேறு சிலர் கூறுகின்றனர். இந்த இயக்கங்கள் அனைத்திலும் முற்போக்கான அம்சங்களும் உண்டு; பிற்போக்கான அம்சங்களும் உண்டு.**

இந்த இயக்கங்கள் அந்தந்த காலகட்டத்தில் சில சமூகப் பிரச்சினைகளுக்கு பதிலளிக்கும் முறையில் இருந்தன. ஆனால், அடிப்படை பிரச்சினைகளுக்கு இவை தீர்வு அளிக்க வில்லை. ஏனென்றால் இவை அனைத்தும் கருத்துமுதல்வாத பின்புலத்தைக் கொண்டவை. அதன் காரணமாக கருத்துக்கு மாற்றமான கருத்துக்களை முன்வைத்தனவே அன்றி, தீர்வு எதையும் அளிக்கவில்லை. இவற்றால் சமுதாய அமைப்பில் எந்த பெரிய மாறுதலையும் கொண்டு வரமுடியவில்லை. சிதிலமடைந்த வீட்டில் ஓட்டைகளை சரி செய்து வெளிப்பார்வைக்கு மாறுதல் ஏற்பட்டது என்ற தோற்றத்தை மட்டுமே இவை அளித்தன.

இவற்றிற்கு மாறாக அடிப்படையான மாறுதல்களை முன்னெடுத்துச் சென்றவர்கள் பொதுவுடைமைவாதிகளே ஆவர். ஏனென்றால் அடிப்படை மாறுதல் நிகழும் பொழுது சிந்தனை வடிவங்களும் மாறும் என்பது மார்க்சியம்.

அடிப்படை மாறுதலுக்காக தமிழ்நாட்டில் தஞ்சை மாவட்டத்தில் மிகப் பெரிய போராட்டங்கள் நடந்துள்ளன. 1930 களிலிருந்து 1953 வரை உள்ள காலகட்டத்தில் தஞ்சை மாவட்டத்தில் வர்க்கப் போராட்டம் மிகத் தீவிரமாக நடைபெற்றது. இது பிற மாவட்டங்களிலும் உண்டு. இந்த நிகழ்ச்சிகளைப் பதிவு செய்த மூன்று நாவல்களில் காலம்சென்ற ராஜம் கிருஷ்ணன் அவர்களின் ''பாதையில் பதிந்த அடிகள்'' என்பது ஒன்று. மற்ற இரு நாவல்களும் சுபாஷ் சந்திர போஸ் எழுதிய ''வாட்டக்குடி இரணியன்'', சாம்பவானோடை சிவராமன்'' என்பன ஆகும்.

ராஜம் கிருஷ்ணன் அவர்கள் இடதுசாரி சிந்தனை வயப்பட்ட எழுத்தாளர். ஏராளமான நாவல்களுக்கு சொந்தக்காரர். ஒரு பெண்ணியவாதி. நேரடியாகச் சென்று விவரங்களை சேகரிக்காமல் அவர் எதையும் எழுத மாட்டார். அப்படி சேகரித்து அதன் விவரங்களை கொண்டு எழுதப்பட்ட நாவல் தான் இது. ஏ.எம்.கோபு, காத்தமுத்து ஆகியோர்கள் அளித்த தகவல்களையும், இந்த நாவலில் கதாநாயகி மணியம்மை பற்றிய நாட்டார் பாடல்களிலும் மையமாகக் கொண்டு எழுதப்பட்டது இந்த நாவல்.

மணியம்மை பிராமண குடும்பத்தைச் சார்ந்தவர். தஞ்சை மாவட்டத்திலுள்ள மூவாலூர் பட்டா மணியம் குடும்பத்தைச் சார்ந்தவர். இந்த குடும்பம் பெரும் பண்ணையார் குடும்பமாகும். இளமையில் மணி நாகப்பட்டினத்தை சேர்ந்த 45 வயதைக் கடந்த ஒரு வழக்கறிஞருக்கு திருமணம் செய்து வைக்கப்பட்டார். ஆனால் அவர் இறந்து விடவே இளமையிலேயே விதவையாகி விடுகிறாள். அந்தக் காலத்தில் ஒரு பிராமணர் குடும்பத்தில் விதவைகள் பட்ட கஷ்டத்திற்கு அளவே கிடையாது. ஆனால் மணியம்மை சற்று தைரியமானவள். அவரது உறவினர் ஒருவர் காங்கிரஸ்காரர். காந்தியடிகளின் போதனைகளைப் பின்பற்றுபவர். இதில் ஈடுபாடு உடைய மணியம்மை ஹரிஜனங்களுக்கு சேவை செய்ய வேண்டும் என்ற எண்ணத்திற்காக வீட்டில் இருந்து வெளியேறி விடுகிறார். அப்படி வெளியேறும் போது பூஜைக்கான ''சாளக்கிராமம்'' என்ற கல்லை ஒரு பெட்டியில் வைத்து ஒரு தாழ்ந்த ஜாதிக்காரன் தலையில் வைத்து தூக்கிக் கொண்டு வருமாறு கூறுகிறாள். இதுவே சனாதன தர்மத்திற்கு அவர் கொடுத்த முதல் அடியாகும். அவள் பங்குக்கு வந்த நிலத்தில் விவசாய வேலைகளில் அவளே நேரடியாக நிர்வாகம் செய்ய செல்லுகிறார். அங்கு ''நடுவாள்'' என்ற முறையில் உழைக்கும் விவசாயிகள் கசக்கிப் பிழியப்பட்டனர். மகசூலில் பெரும்பகுதி பண்ணைக்குக் கொடுத்த பிறகு நடுவாள் தன் பங்குக்கு எடுத்துக்கொண்ட பிறகு மிஞ்சி இருப்பது தான் உழைக்கும் விவசாயிகளுக்கு கிடைக்கும். இந்த முறையை தன்பங்கு நிலத்தில் மணியம்மை மாற்றி அமைக்கிறார். நடுவாளை நீக்கிவிட்டு தானே நேரடியாக நின்று மேற்பார்வை செய்து நியாயமாகக் கிடைக்க வேண்டிய பங்கை உழைக்கும் விவசாயிகளுக்கு கொடுக்கிறாள்.

காந்தியடிகளின் போதனையைப் பின்பற்றி சேரிக்கே சென்று அந்த மக்களோடு உறவாடுகிறாள். அங்குள்ள குழந்தைகளுக்கு எழுதப் படிக்க கற்று கொடுக்கிறாள். இதனால் பண்ணையார்கள் அவளை எதிர்க்கத் தொடங்கினார்கள். இவளது சொந்தக்காரரான காங்கிரஸ்காரர் கூட இவளுக்கு உதவ முன்வரவில்லை. இப்பொழுது மணியம்மை கிராப் வெட்டிக் கொள்கிறாள். இடுப்பில் வேட்டி, மேலே ஒரு ஜிப்பா, தோளில் ஒரு ஜோல்னா பை ஆகியவையுடன் அவள் பல இடங்களுக்கு செல்கிறாள். எதிரிகளின் தாக்குதலை சமாளிக்க சிலம்பம் கற்றுக் கொள்கிறாள்.

காங்கிரஸ் இயக்கத்தின் மீது அவளுக்கு வெறுப்பு ஏற்படுகிறது. காரணம் அதில் பண்ணையார்களும், மிட்டாதாரர்களும் சேர்ந்தது ஆகும். இதன் விளைவாக அக்காலத்தில் இயங்கி வந்த காங்கிரஸ் சோஷலிஸ்ட் கட்சியில் தன்னை இணைத்துக் கொள்கிறாள். இது மறைமுகமான கம்யூனிஸ்ட் கட்சியாகும். 1936, 37, 38 ஆகிய ஆண்டுகளில் மணியம்மை கம்யூனிச நூல்களை பலருக்கு விநியோகம் செய்தார். அதில் கிடைக்கக் கூடிய சொற்ப பணத்தை வங்கியில் போட்டு வைக்கிறாள். இந்தக் கட்டத்தில் தன்னை ஒரு கம்யூனிஸ்ட்டாகவே காட்டிக் கொள்கிறாள். அவளுடைய ஊரில் கிசான் சங்கம் என்ற ஒன்றை வைத்து சேரிவாழ் மக்கள் கூலி உயர்வு, வேலை நேரக் கட்டுப்பாடு போன்றவற்றிற்காக போராடவும் செய்தாள். அந்த வட்டாரத்து மக்கள் செங்கொடி கட்சி என்றால் அதனை மணியம்மை கட்சி என்றே அழைத்தார்கள். சாணிப்பால் புகட்டுவது, சவுக்கால் அடிப்பது ஆகியவற்றிலிருந்து எங்களை விடுவித்த தாயே என்று பாடல்கள் பாடினர்.

நாகப்பட்டினம் ஸ்டீல் ரோலர் தொழிலாளர்களுக்காக போராடி பல சலுகைகளை வாங்கிக்கொடுத்தார். இதுபோன்ற தொழிலாளி வர்க்கம் சார்பான போராட்டங்களிலும் தீவிரமாக ஈடுபட்டதன் காரணமாக இவரது சொந்தக்காரர்கள் இவள்மீது பல பொய் வழக்குகளை போட்டனர். இருப்பினும் மணியம்மை இறுதியாக கைது செய்யப்பட்டார். வேலூர் மத்திய சிறையில் அவள் இருந்தாள். மணியம்மையோடு அதே சிறையில் கே.பி.ஜானகி அம்மாள், கொடிகாத்த சிவப்பி ஆகியோர் இருந்தனர். விடுதலையாகி வெளியே வந்த காலகட்டத்தில் சீனிவாசராவ் தலைமையில் தஞ்சை மண்ணில் மிகப் பெரிய போராட்டங்கள் நடந்தன. சில விதிமீறல்கள் என்ற காரணத்தைக் காட்டி கட்சியானது மணியம்மையை ஒதுக்கி வைத்திருந்தது. இருப்பினும் நாகப்பட்டினம் கட்சி மாநாட்டில் கலந்துகொண்டு சோவியத் நூல்களை விற்றார். 1953 வரை மணியம்மை இருந்தார். முதல் தேர்தலில் கட்சிக்காக உழைத்தார். இவ்வளவு செல்வாக்கு கண்டு பண்ணையார்கள் கொதித்துப் போய் இருந்தார்கள். அவளது ஊருக்கு சென்று திரும்புகையில் பண்ணையிலிருந்த கொம்புள்ள கலைமான் ஒன்று அவளது முதுகில் முட்டிக் கிழித்தது. பக்கத்தில் உள்ள மக்கள் அவளை திருவாரூர் மருத்துவமனைக்கு எடுத்துச் சென்றார்கள். ஆனால் எந்தப் பலனும் இல்லை. அவள் இறந்த அன்று அவளது இறுதி ஊர்வலத்தில் ஏராளமான மக்கள் கலந்து கொண்டனர்.

மணியம்மை இறந்த பிறகு அவரைப் பற்றிய தகவல்கள் பல தெரியாமலேயே இருந்தன. அந்தக் கால ஜனசக்தியில் ''தஞ்சை மாவட்டத்தில் நடப்பது என்ன?'' என்று ஒரு கட்டுரை வெளியாகி இருந்தது. அதில் மணியம்மை சீனிவாசராவின் முன்னோடி என்று பதிவு செய்துள்ளார்கள். இதையொட்டி ஒரு நிகழ்ச்சியை எடுத்துக் காட்டியுள்ளார். கட்சி தடை செய்யப்பட்ட காலத்தில் பல ரகசிய கூட்டங்கள் நடந்து கொண்டிருந்தது. அத்தகைய ஒரு கூட்டத்தை மணியம்மை நடத்தினார். அது ஒரு தோப்பு, விளக்கை வைத்துக் கொள்ள கூடாது. மணியம்மை பேசுவதற்கு முன்னால் வந்தவர்கள் அவர்களது குரல் மூலம் அவர்களை பதிவு செய்து கொண்டார்கள். அதில் சீனிவாசராவும், களப்பாள் குப்புவும் இருந்தார்கள். அவர்களது குரல்களை வைத்து தெரிந்துகொண்ட மணியம்மை கூட்டத்தில் பேசினார். இது 1943 க்கு முன்னால் நடந்தது. இது போன்ற பல நிகழ்ச்சிகளை ராஜம் கிருஷ்ணன் அவர்கள் பதிவு செய்துள்ளார். மணியம்மையினுடைய வாழ்க்கையைப் பற்றி அதிகம் பேசாமல் இருப்பதற்கு காரணம் அவள் ஒரு பெண் என்பதால் தானோ? என்ற கேள்வியையும் இந்த நாவலில் முன்வைத்துள்ளார். இது சிந்தனைக்குரியது. மணியம்மையின் இந்த வரலாறு சாதிகளுக்கு அப்பாற்பட்டது. இது போன்ற அடிப்படை மாறுதலுக்கான போராட்டங்களில் ஈடுபட்ட பல பெண்கள் இருந்திருக்கிறார்கள். அவர்களைப்பற்றி நாம் ஆராய வேண்டியது அவசியம். இவர்களைப் போன்றதொரு போராட்டம்தான் சாதிக் கட்டமைப்பை தகர்த்தது, நிலப்பிரபுக்களின் ஆதிக்கத்தை எதிர்த்தது. அடிப்படையான பொருளாதார விடுதலையை கொண்டு வந்ததாகும்.

தொடர்புக்கு: 98947 83657

# தஞ்சை மாநகரில் வீடு இல்லாதவர்களுக்கு அடுக்குமாடி குடியிருப்புவீடு வழங்குக

## இந்திய இந்திய கம்யூனிஸ்ட் கட்சி கோரிக்கை

இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் தஞ்சை மாநகர 23 வது மாநாடு தஞ்சாவூர் கீழ ராஜவீதி பி.கிருஷ்ணமூர்த்தி நினைவரங்கில் வீ.கலியமூர்த்தி, எம்.பானுமதி ஆகியோர் தலைமையில் நடைபெற்றது. கட்சிக்கொடியினை ஆர்.பக்கிரிசாமி ஏற்றிவைத்தார். மாவட்ட செயலாளர் முத்து உத்திராபதி, துணைச் செயலாளர் வீ. கல்யாண சுந்தரம், மாவட்ட நிர்வாக குழு உறுப்பினர் சி.சந்திரகுமார், மாநில கட்டுப்பாட்டு குழு உறுப்பினர் ஜி.கிருஷ்ணன், ஆர்.கே.செல்வகுமார், வெ.சேவையா உள்ளிட்டோர் வாழ்த்துரை வழங்கினர். தஞ்சை மாநகரில் வீடு இல்லாத அனைவருக்கும் வீட்டு வசதி ஏற்படுத்தும் நோக்கில் அடுக்குமாடி குடியிருப்பு கட்டி வீடு இல்லாத அனைவருக்கும் வழங்க வேண்டும், தஞ்சை சாந்த பிள்ளை கேட் மேம்பாலம் நான்கு வழி சாலையாக மாற்றி அமைத்திட வேண்டும், தஞ்சையில் சட்டக்கல்லூரி அமைத்திட வேண்டும், திலகர் திடல் மார்க்கெட்டில் மின்வசதி குடிநீர் கழிவறை வசதி ஏற்படுத்திட வேண்டும் என்பது உள்ளிட்ட தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன. மாநகர செயலாளராக ஆர்.பிரபாகரன் ஒருமனதாக தேர்வு செய்யப்பட்டார். ஆர்.செந்தில்நாதன் வரவேற்புரை நிகழ்த்த எம்.சங்கிலி முத்து நன்றியுரை கூறினார்.



### பீமா கொரேகான் வழக்கில் குற்றம்சாட்டப்பட்டு இரண்டு ஆண்டுகளாக மும்பை சிறையில் உள்ள ஆனந்த் டெல்டும்டே அவர்களின் இணையர், பாபாசாகேப் அம்பேத்கரின் பேத்தி,

# ரமா டெல்டும்டே

### பொது மக்களுக்கு எழுதியுள்ள கடிதம்...

## 2022 ஏப்ரல் 11

1983ஆம் ஆண்டுநவம்பர் 19 ஆனந்துக்கும் எனக்கும் திருமணம் நடந்தது. அது நிச்சயிக்கப்பட்ட திருமணம்தான். இருவருக்கும் நண்பராக இருந்த ஒருவரின் முயற்சியால் சாத்தியப்பட்டது. கடந்த 37 ஆண்டுகள் நான் வீட்டுப் பணிகளை மேற்கொண்டும், எங்களின் இரு பெண்களை வளர்த்து ஆளாக்கியும் குடும்பத் தேவைகளை அறிந்து நிறைவேற்றியும் வந்துள்ளேன்.

ஆனந்த் சுதந்திரமாக இயங்க, அவரின் தொழில் நிமித்தமான பணிகளிலும், அவருக்கு முக்கியமானதாக இருந்த சமுதாய அக்கறைகளை முன்னெடுத்துச் செல்லும் பணிகளிலும் கவனம் செலுத்துவதற்கு ஏதுவாக நான் அவருக்கு உதவி புரிந்து வந்தேன். ஒரு முழுநேர வேலையைப் பார்த்துக் கொண்டும், களப்போராளியாகவும் இருந்து வந்துள்ளார்.

எனக்கு 66 வயது ஆகிவிட்டது. என் வயதையொத்த பெண்கள் பணி ஓய்வுபெற்று அமைதியான வாழ்க்கையை எதிர்நோக்கியும் அல்லது பணி ஓய்வுபெற்ற கணவருடன் அமைதியை நோக்கிப் பயணிக்கவும் தயாராக இருப்பார்கள். ஆனால், என் வாழ்க்கையோ முற்றிலும் வேறான பாதையில் திசை திருப்பப்பட்டுள்ளது. எனக்குள் இருந்த வேறொரு பெண்ணை நான் இனங்காண நேர்ந்தது. அத்தகைய ஒரு பெண் எனக்குள் இருந்தாள் என்று நான் நினைக்கவில்லை.

கோவாவில் உள்ள எங்களின் வீட்டை, நாங்கள் அங்கு இல் லாத சமயமாகப் பார்த்து, காவல்துறையினர் சோதனையிட்ட னரோ அன்று தொடங்கியது விதியின் விசித்திரம். என் குடும்பத் தினருக்கு ஆதரவாக இருக்க நான் எதையும் வெளியில் காட்டிக் கொள்ளவில்லை என்றாலும் உள்ளுக்குள் சலனம், கவலை. தொலைக்காட்சித் திரைகளில் எங்கள் வீடு, கணவர், காட்சிப் பொருட்களாக. மும்பையில் என் கணவர், மகள்கள் இருக்க... நான் விமானம் மூலம் கோவா சென்றேன். எந்தவோர் அறிவிப்பும் இன்றி எங்களின் வீட்டுக்குள் அயலவர்கள் நுழைந்து சோத னையிட்ட பிறகு எங்களுக்கான வெளி, அந்தரங்க வெளி என்று ஏதேனும் விட்டு வைக்கப்பட்டுள்ளதா என்பதை அறியவே இந்தப் பயணத்தை மேற்கொண்டேன். எங்களுக்குத் தெரிந்த வழக்கறிஞரின் துணையுடன் காவல் நிலையத்தில் புகார் ஒன்றைப் பதிவும் செய்தேன்.

காவல் நிலையத்துக்கு நான் சென்ற அந்த நாள், தொடர்ந்து நடைபெற்று வரும் கடினமான, முடிவு ஏதும் புலப்படாத, நீண்ட சட்டப் போராட்டத்தின் தொடக்கம்தான் என்பதை அன்று நான் அறிந்திருக்கவில்லை.

அந்த சம்பவத்துக்குப் பிறகு நாங்கள் கற்பனைகூட செய்து பார்க்க முடியாத அளவுக்கு எங்களின் வாழ்க்கையில் மாற்றங்கள் ஏற்பட்டன. ஒரு மணித்துளியைக்கூட வீணாக்க ஆனந்த் விரும்ப மாட்டார். அவரின் குடும்பத்தாரும் அவ்வாறே இருக்க வேண்டும் என்றும் எதிர்பார்த்தார். வழக்கம்போல தனது பணிகளைத் தொடர்ந்தார். வகுப்பறையில் உரைகளை நிகழ்த்துதல், மாணவர்களின் தேவைகளை பூர்த்தி செய்தல்... அவரை அச்சுறுத்த மேற்கொள்ளப்பட்ட அந்த செயல் நடந்து ஒரு சில நாட்களே ஆகியிருந்தாலும், அதைப் பொருட்படுத்தாது எப்பவும்போல அவர் செயல்பட்டதை நான் ரசிக்கவே செய்தேன்.

காவல் துறையினரிடம் அவர் சரணடைந்த நாளுக்கு முந்தின நாள் வரை அவர் வேலை செய்து கொண்டிருந்தார். எத்தனை நாட்களுக்குத்தான் காவலில் வைக்கப்பட்டிருக்கக்கூடும் என்பதை அறிய முடியாத நிலையில், காவல் காலம் எல்லையற்றதாக இருக்க வாய்ப்பிருக்கும் என்ற சூழலில் தனது மாணவர்கள், சக ஆசிரியர்கள் ஆகியோர் எந்த வகையிலும் கஷ்டப்படக் கூடாது என்பதற்காக முடிந்த அத்தனை வேலைகளையும் செய்து முடித்தார்.

நாங்கள் எப்பவும்போல வாழ நினைத்தாலும் எங்களின் வாழ்க்கையில் பல புதிய விஷயங்களுக்கு நாங்கள் இடமளிக்க வேண்டியிருந்தது. எந்த தேதிகளில் நீதிமன்றத்துக்குச் செல்ல வேண்டும் என்பதை குறித்துவைத்துக் கொள்ள வேண்டியிருந்தது. தனக்கு எதிராகப் புனையப்பட்ட அருவருக்கத்தக்க வழக்கையும் பொய் குற்றச்சாட்டுகளையும் எதிர்த்து ஆனந்த் வழக்கு தொடுத்திருந்தார். யுஏபிஏ **(UAPA)**வின் கீழ் ஜனநாயகத்துக்கு எதிரான வகையிலும் மிக மூர்க்கத்தனமாகச் செயல்படுத்தப்படும் சட்டத்தின் கீழ் அவருக்கு எதிராக வழக்கு தொடுக்கப்பட்டுள்ளது என்பதை என்னால் ஏற்றுக்கொள்ள முடியவில்லை. அது அவமானகரமானதாக இருந்தது.

**வன்முறையைக் கையாளும் தீவிரவாதிகளைக் கட்டுப்படுத்த இயற்றப்பட்ட சட்டத்தின்கீழ் குற்றம் சாட்டப்பட்டது ஆழ்ந்த வருத்தத்தை ஏற்படுத்தியது.**

2020 ஏப்ரல் 14 பற்றி என் மனதில் தங்கியுள்ள உணர்வுகளை விவரிக்க சொற்கள் இல்லை. ஒரு வகையில் பார்த்தால் அன்று என்ன நடந்தது என்பதை தெளிவாகச் சொல்ல முடியவில்லை. அதேசமயம், அந்த நாளின் நினைவு ஒவ்வொரு நாளும் என்னை வாட்டி எடுக்கிறது. 2020 ஆண்டுக்கு முன் ஏப்ரல் 14 என்றால் அது மகிழ்ச்சிக்கான நாள். எனது பாட்டனார் டாக்டர் பி. ஆர்.அம்பேத்கர் பிறந்த தினம். மும்பையில் நான் வாழ்ந்த காலத்தில் அந்த நாளில் சைத்திய பூமிக்குச் சென்று, ஒரு மெழுகுவத்தியை ஏற்றி, தான் வாழ்ந்த வாழ்க்கையால், சாதித்தவற்றால், இந்தியாவில் மட்டுமின்றி,




உலகெங்கிலும் கோடானுகோடி மக்களின் வாழ்க்கையைத் தொட்ட அந்த மாமனிதரின் திருவுருவச் சிலைக்கு முன் தலைதாழ்த்தி வணங்காமல் இருந்ததில்லை.

2020ஆம் ஆண்டு நள்ளிரவு மணி அடித்தவுடன் வெள்ளை ஆடைகளை உடுத்தி ராஜகிருகாவில் உள்ள நினைவிடத்தில் ஆனந்த் எனக்காகக் காத்திருந்தார் எப்பவும் போல, சிரித்த முகத்துடன். மெழுகுவத்தியை ஏற்றி, அம்பேத்கரின் அஸ்தியைத் தாங்கிய குடத்துக்கு தலைவணங்கினார். நானும் அவ்வாறே செய்தேன். ஆனால், என் மனம் இனி நடக்கவிருந்த சம்பவங்களை நினைத்த வண்ணம் இருந்தன.

2020 ஏப்ரல் 14ஆம் தேதி நடந்த நிகழ்வுகள் கடந்த ஆண்டு களின் ஏப்ரல் நினைவுகளைக் காணாமல் போட்டு விட்டன. அடுத்தடுத்து வந்த ஏப்ரல் மாதங்கள் எங்கள் மீது திணிக்கப்பட்ட பெரும் வலியை, இன்றும் எங்களை அலைக்கழிக்கும் வேதனையை நினைவூட்டுவனவாக அமைந்து விட்டன. அன்று நான் அவருடன் தேசிய புலனாய்வு முகமையின் **(National Investigation Agency)** அலுவலகத்துக்குச் சென்றேன். நீதிமன்றக் கட்டளையை ஏற்று அவர் அங்கு சரணடைந்தார். அவர் நிதானமாகவே இருந்தார்... அங்கு நடந்து செல்லும்போதுகூட. தன்னை பற்றி அவர் கவலைப்படவில்லை.

**அன்று நடந்தது என் கணவர் குரூரமான அநீதிக்கு ஆளான காலக்கட்டத்தின் தொடக்கம் மட்டுமே. ஒவ்வொரு நாளும் நானும் என் மகள்களும் துயரத்தை அனுபவித்து வருகிறோம். காலம் செல்ல செல்ல அது தாங்கிக்கொள்ள முடியாததாக ஆகி வருகிறது.**

கோவிட் 19 பெரும் தொற்றானது இதுவரை நாம் சந்தித்திராத நெருக்கடிக்கு ஒட்டுமொத்த மனித குலத்தையும் ஆட்படுத்தியது. கற்பனைகூட செய்து பார்க்காத பல்முனைப் போராட்டங் களுக்கு நான் முகம்கொடுக்க வேண்டியிருந்தது. நான் தனித்துவிடப்பட்டிருந்தேன். என் கணவர் சிறையில், என் மகள்கள் வெகு தொலைவில். கோவிட் கால தடைகள் அமலில் இருந்ததால் அவர்களால் இந்தியாவுக்குப் பயணிக்க முடியவில்லை. ஆனந்த் சரணடைந்ததற்குப் பிற்பாடு தனியாக வாழ்ந்து வந்ததுடன், அவர் அனுபவித்து வரும் அநியாயமான வேதனையை எவ்வளவு சீக்கிரம் குறைக்க முடியுமோ அத்தனை சீக்கிரம் குறைக்க என்னால் ஆனவற்றை செய்து வருகிறேன் அவ்வப்போது எதை எதையோ நினைத்து அச்சப்பட்டாலும்.

சமுதாய இடைவெளி, ஊரடங்கு ஆகியன அமல்படுத்தப்பட்டும் புதிய வகை தொற்றுகள் நாட்டை நாசம் செய்து வர, என்னால் தொலைக்காட்சியில் செய்திகளைப் பார்க்க முடியவில்லை. ஒருவர் இருக்க வேண்டிய இடத்தில் மூன்று பேர் இருக்கும் நெரிசலான சிறைச்சாலையில் ஆனந்த் அடைக்கப்பட்டிருந்தார்.

உலகம் முழுக்க தனிமைப்படுத்தப்பட்டவர்களின் நிலை, அவர்களின் மனவளம் பாதிக்கப்படுவது ஆகியன குறித்து பலரும் பேசிய நிலையில் ஆனந்தின் உடல்நலம் எப்படியுள்ளதோ என்ற கவலையும், எங்களின் நிலை குறித்த கேள்விகளும் என்னை வாட்டின. ஆனந்துக்கு ஆஸ்துமா இருப்பதால் அவருக்கு சில நேரங்களில் மூச்சுத்திணறல் ஏற்படுவதுண்டு. பெருந்தொற்று காலத்தில் அவர் என்ன பாடுபடுகிறாரோ என்ற எண்ணி கலங்கினேன்.

இந்தக் காலகட்டத்தில் சிறையிலுள்ளவர்களை அவர்களின் குடும்பத்தார் சந்திக்க இயலாது போனதால் எங்களுக்கு விட்டுவைக்கப்பட்ட அந்த சிறு கருணையும்கூட இல்லாமல் போனது. அதற்கு பதிலாக வாரம் ஒருமுறை வாட்ஸ்அப் மூலம் வீடியோ கால் போட்டு பேச அனுமதி வழங்கப்பட்டிருந்தது.

ஆனந்துடன் பேச எனக்கு இருந்த அந்த வாய்ப்பை தவறவிடக் கூடாது. அவருடன் பேசிய பிறகு மகள்களுக்கு போன் செய்து பேசிய விவரங்களைப் பகிர்ந்து கொள்வேன்.

வீடியோ கால் என்ற இந்த வசதியை நான் மட்டுமே பயன்படுத்திக்கொள்ள முடிந்தது. பிறர் கடிதங்கள் மூலமே அவருடன் தொடர்புகொள்ள வேண்டியிருந்தது. ஆனால், குடும்பத்தார் எழுதிய கடிதங்கள் அவர் கைகளுக்குப் போய் சேர பல நாட்கள் ஆகிவிடுகின்றன. அவை அவருக்கான அந்தரங்க கடிதங்களாக இருந்தபோதிலும், அவற்றை படித்துவிட்ட பிறகுதான் காவல் துறையினர் அவருக்கு அவற்றை அனுப்பி வைப்பர்.

நிலைமை இப்படி இருந்தாலும் இதையுமே எங்களுக்கு விட்டுவைக்கப்பட்டுள்ள கருணை என்று எண்ணி எங்களை நாங்களே தேற்றிக் கொள்கிறோம்.

ஒருவர் 70–72 வயதை எட்டியவுடன் அவரின் குழந்தைகள் அவரைப் பராமரிக்க வேண்டும், சுற்றம் சூழ அவர் வாழ வேண்டும். ஆனால், ஆனந்தின் நிலை, எனது நிலை இன்று அவ்வாறானதாக இல்லை. எங்களுக்கு நேர்ந்துள்ள இந்த கதிக்கு காரணம் நீதிமன்றத்தில் தேசிய புலனாய்வு முகமை (முமிகி) ஜோடனை செய்து சமர்ப்பித்த வழக்கு. வழக்கில் கூறப்பட்டுள்ளவை உண்மையா, இல்லையா என்பது விசாரிக்கப்பட்டு இனிதான் நிரூபணம் செய்யப்படவிருக்கின்றன.

பெருந்தொற்று குறித்த கட்டுப்பாடுகள் தளர்த்தப்பட்ட பிறகு வாரம் ஒருமுறை ஆனந்தைச் சந்திக்க முடிகிறது. இந்தச் சந்திப்பு 10 நிமிடங்களே நீடிக்கும். எங்கள் வீட்டிலிருந்து சிறைச்சாலைக்கு வந்து சேர ஒரு மணி நேரம் ஆகிவிடுகிறது. பிறகு பெயர் பதிவுக்காக வரிசையில் நிற்க வேண்டும். அதற்குப் பிறகு அவரைச் சந்திக்கக் காத்திருக்க வேண்டும். சில சமயங்களில் 2 முதல் 4 மணி நேரம்கூட காத்திருக்க வேண்டும். ஆனால், இதை நான் பொருட்டாகக் கருதுவதில்லை. சகித்துக் கொள்கிறேன். காரணம், ஆனந்தை கண்ணால் பார்க்க முடியும்.

தூசிப் படிந்த பைரக்ஸ் திரையினூடாக பார்த்துக் கொள்வோம். இன்டர்காம் வழியாக பேசிக் கொள்வோம். உள்ள வாய்ப்பைப் பயன்படுத்திக் கொள்ள வேண்டும் என்ற ஆர்வத்தில் வயதால் மெலிந்துவிட்ட எங்களின் குரல்களை உயர்த்திப் பேசுவோம் பிற சிறைவாசிகளின் பேச்சு, அவர்களின் சுற்றத்தாருடன் அவர்கள் நடத்தும் உரத்த உரையாடல்கள், சிறைக் காவலர்களின் குரல்கள், இவற்றுக்கு நடுவேதான் நாங்கள் பேசிக்கொள்வோம்.

ஆனந்தும் நான் அவரைச் சந்திக்க வரும் அந்த நாளுக்காகக் காத்திருப்பார். நன்கு பழகிய, தெரிந்த முகத்துக்காக, இரண்டு ஆண்டுகளாகத் தொடர்பு கொள்ள இயலாத வெளி உலகம், அவர் உறவு கொள்ள முடியாதபடிக்கு வலுக்கட்டாயமாக அவரிடமிருந்து துண்டிக்கப்பட்ட அந்த வெளி உலகம் பற்றிய செய்திகளைக் கொண்டு வரும் முகத்துக்காக... பலரைப் போல சிறைச்சாலை சந்திப்பு என்றால் எப்படி இருக்கும் என்பதற்கு சினிமா காட்சிகளை மட்டுமே உதாரணங்களாகக் கொண்டிருந்தேன்.

ஆனால் சிறையில் சந்திக்கும் இருவரும் அனுபவிக்கும் அவமானம், துயரம் ஆகியவற்றை வெகு சௌகரியமாக சினிமாக்கள் காட்டாமல் விட்டு விடுகின்றன.

2020 மார்ச் வரை ஆனந்தும் நானும் ஆரவாரமற்ற, கண்ணி யமான வாழ்க்கை வாழ்ந்து வந்தோம். ஒவ்வொரு வாரமும் இப்படி சந்தித்துப் பேசிக் கொள்வோம் என்று கனவில்கூட நாங்கள் நினைத்ததில்லை. நாங்கள் சந்திக்கையில் கரம் தொட்டு பேச முடியாது, கைகோத்துக் கொள்ள முடியாது, ஒருவரை ஒருவர் அணைத்துக் கொள்ள முடியாது... ஆனால் ஒன்று, அந்த பத்து நிமிடங்களில் எங்களுக்குள் இருக்கும் வலியைக் காட்டிக்கொள்ளாமல் இருப்பதில் இருவருமே தேர்ந்து விட்டோம்.

எங்கள் மகள்கள் வாரா வாரம் அப்பாவுக்குக் கடிதம் எழுது கிறார்கள். அவரும் உடனுக்குடன் பதில் எழுதி விடுகிறார். 2020 ஏப்ரல் 14 அன்று அவர்களுடன் கடைசியாக தொலைப்பேசியில் பேசியபோது அவர்களுக்கு தைரியமூட்டி பேசினாற்போல்தான் இந்தக் கடிதங்களிலும் அவர்களுக்கு தைரியம் சொல்கிறார். அவர்களைத் தேற்றுகிறார்.

நாட்கள் நம்மைக் கடக்கின்றன. நீதிமன்றத்தில் வழக்கு விசாரிக்கப்படுகிறது, அதன் விளைவாக மற்றொரு வழக்கு விசாரணை நடக்கிறது.

எங்களின் இந்த நிலைமைக்கு காரணமான அநீதி, எங்களை இங்கு கொண்டு வந்து நிறுத்திய சம்பந்தமற்ற நிகழ்வுகள் பற்றி யாரும் புரிந்துகொண்டதாகத் தெரியவில்லை. இத்தகைய ஒன்று அவர்களுக்கும் நேரலாம் என்பதை அவர்கள் ஒருவேளை அறியாமல் இருக்கலாம்.

மொழியாக்கம்: **வ.கீதா,** நன்றி: மின்னம்பலம்



# சங்கே முழங்கு!

நாடாளுமன்றத்தில்

பெரும்பான்மையான மசோதாக்கள்

## விவாதிக்காமலேயே நிறைவேற்றம்

### இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி எம்.பி. பினாய் விஸ்வம் புகார்

ஆவடி படை உடை தொழிற்சாலை ஊழியர்கள் சங்க வைர விழாவின் 5வது தொடர் கருத்தரங்கம் ஆவடி ஒசிஎப் ஒர்க்கர்ஸ் யூனியன் பொன் விழா அரங்கில் நடைபெற்றது.

'இந்திய நாடளுமன்றத்தில் என்ன நடக்கிறது' என்ற தலைப்பில் நடைபெற்ற இந்த கருத்தரங்கம், ஆவடி படை உடை தொழிற்சாலை ஊழியர்கள் சங்கத்தின் செயல் தலைவர் என்.ஜெ. ராமன் தலைமையில் நடைபெற்றது. இதில், அனைத்திந்திய பாதுகாப்புத் துறை ஊழியர் கூட்டமைப்பின் பொதுச் செயலாளர் ஸ்ரீகுமார் அறிமுக உரையாற்றினார். இதில், இந்திய கம்யூனிஸ்ட் கட்சி எம்.பி. பினாய் விஸ்வம் பேசும்போது, "நாடாளுமன்றத்தில் பெரும்பான்மையான மசோதாக்கள் விவாதத்துக்கு அனுமதிக்காமலேயே நிறைவேற்றப்படுகின்றன. கடந்த காலங்களில் 70 சதவீத மசோதாக்கள் நிலைக்குழுவுக்கு அனுப்பப்படும். ஆனால் இப்போது எந்த மசோதாவும் அனுப்பப்படுவதில்லை. இது அரசியல் அமைப்பு சட்டத்துக்கு எதிரானது" என்றார்.

இந்திய கம்யூனிஸ்ட் எம்.பி. சுப்பராயன் பேசும்போது, "நாடாளுமன்றம், கடந்த 8 ஆண்டுகளாக சிலுவையில் அறையப்பட்ட நிலையில் உள்ளது. ஜனநாயக அமைப்புக்குள் இருந்து கொண்டே அதை அழிக்கும் பணியை பாஜக மேற்கொண்டு வருகிறது" என்றார்.

திமுக எம்.பி. டி.கே.எஸ்.இளங்கோவன் பேசும்போது, "நாடாளுமன்றத்தில் மக்களுடைய பிரச்சனைகள் குறித்து எதிர்க்கட்சி உறுப்பினர்கள் பேச அனுமதிக்கப்படுவதில்லை. விதிகள் அனுமதிக்கும் உரிமைகள் கூட மறுக்கப்படுகின்றன. உயிர்த் தியாகம் செய்து பெற்ற, தொழிலாளர்களின் உரிமைகள் பறிக்கப் படுகின்றன. ஒன்றிய அரசு எதில் தலையிட வேண்டுமோ அதில் தலையிடுவதில்லை. எதில் தலையிட வேண்டாமோ அதில் தலையிட்டுக் கொண்டிருக்கிறது" என்றார்.

இந்திய தேசிய காங்கிரஸ் எம்.பி. திருநாவுக்கரசர் பேசும்போது, "ஜவஹர்லால் நேரு காலத்தில் பொதுத்துறை நிறுவனங்கள் உருவாக்கப்பட்டன. வேலைவாய்ப்புகள் பெருகின. ஆனால் தற்போதைய ஆட்சியாளர்கள் பொதுத்துறை நிறுவனங்களை விற்றுக் கொண்டிருக்கிறார்கள். தனியார் ஒரு நிறுவனத்தை நஷ்டமில்லாமல் நடத்த முடியும், அரசால் நடத்த முடியாது என்றால் அது அரசுக்கு அவமானமல்லவா?" என்றார்.

மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி எம்.பி. சு.வெங்கடேசன் பேசும் போது, "நாடாளுமன்றத்தில் பிரதமர் நரேந்திர மோடி உறுப்பினர்களின் கேள்விகளை செவிமடுத்து கேட்பதில்லை, அதற்கு பதிலளிப்பதும் இல்லை. எந்த விவாதமும் இன்றி 4 நிமிடங்களில் 15 மசோதாக்கள் நிறைவேற்றப்படுகின்றன.

17வது மக்களவையில் ஒரு மசோதா மட்டுமே நிலைக் குழுவுக்கு அனுப்பப்பட்டுள்ளது. தற்போது நாடாளுமன்றத்தில் பண்பாட்டுத் தன்மையை, மொழித் தன்மையை சீர்குலைத்து வருகிறார்கள். ஆங்கிலத்தில் கடிதம் எழுதினால் இந்தியில் பதில் அனுப்புகிறார்கள். ஆங்கிலத்தை அகற்றி விட்டு இந்தியை திணிக்க முயற்சிக்கிறார்கள். ஜனநாயக மாண்புகள் முற்றிலுமாக சீர்குலைக்கப்படுகின்றன" என்றார்.

இக்கருத்தரங்கில் இந்திய நாட்டின் உழைக்கும் மக்கள் நலனுக்காக நாடாளுமன்றத்தில் மிகச் சீறிய முறையில் பங்காற்றி வரும் பினாய் விஸ்வம் உள்ளிட்ட இந்த ஐந்து எம்.பி.க்களை அங்கீகரிக்கும் விதமாக, ஆவடி படை உடை தொழிற்சாலை ஊழியர்கள் சங்க வைர விழா அமைப்புக்குழு, 'மக்கள் நாடாளுமன்றவாதி விருது' வழங்கி சிறப்பித்தது.

விலைவாசி உயர்வைக் கட்டுப்படுத்த கோரி

## மே 17ல் மாநிலம் முழுவதும் ஆர்ப்பாட்டம்

### மாதர் சங்க மாநில குழு தீர்மானம்

விருதுநகர் சிபிஐ மாவட்ட அலுவலகத்தில், இந்திய மாதர் தேசிய சம்மேளனத்தின் மாநில நிர்வாகக்குழு, மாநிகுழு கூட்டம் ஏப்ரல் 18, 19 தேதிகளில் நடைபெற்றது. மாநில தலைவர் ப.பத்மாவதி எக்ஸ் எம்.எல்.ஏ. தலைமை வகித்தார். மாநில செயலாளர் ஜி.மஞ்சுளா வேலை அறிக்கை சமர்ப்பித்து பேசினார். சிபிஐ மாநில செயலாளர் இரா.முத்தரசன் எதிர்கால கடமைகள் குறித்த பேசினார். சிபிஐ மாநில நிர்வாகக்குழு உறுப்பினர் தி.இராமசாமி எக்ஸ் எம்எல்ஏ, மாவட்ட செயலாளர் பி.லிங்கம், மாவட்ட துணை செயலாளர் எஸ்.பழனிக்குமார், மாநில குழு பாலமுருகன் ஆகியோர் வாழ்த்திப் பேசினார்கள். மாநில நிர்வாகிகள் சுந்தரவள்ளி, ராஜலட்சுமி, கண்ணகி, நிஷா, டி.பி.லதா உள்ளிட்ட மாநில குழு உறுப்பினர்கள் கலந்து கொண்டனர். கடுமையான விலைவாசி உயர்வை கட்டுப்படுத்தாத ஒன்றிய அரசை கண்டித்தும், விரை வில் கட்டுப்படுத்த கோரியும், மே17ல் தமிழகம் முழுவதும் ஆர்ப்பாட்டம் நடத்துவது, மதுபான உற்பத்தி ஆலைகளை மூடுவது, செவிலியர் இரண்டாமாண்டு பாடப்புத்தகத்தில் வரதட்சணைக்கு ஆதரவாக கருத்து உள்ளது. அதைக்கண்டிப்பதுடன் பாடப்புத்தகத்திலி ருந்து நீக்க வேண்டும் உள்ளிட்ட தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

பேராசை மதம் - சந்தைதான் கோவில் - லாபமே கடவுள்!

# மதம் என்பது இவர்களுக்கு முகமூடி தான்!

## பினாய் விஸ்வம் எம்.பி. பேட்டி

**இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் தேசிய செயலாளரும், நாடாளுமன்ற உறுப்பினருமான பினாய் விஸ்வம், சென்னை பாலன் இல்லத்தில் ஏப்.25 அன்று பத்திரிகைகளுக்கு பேட்டி அளித்தார். அதன் விவரம் வருமாறு:**



பெட்ரோலிய பொருட்களின் விலை படுவேகமாக உயர்ந்து செல்கிறது. ஜிஎஸ்டி வரி அதிக எண்ணிக்கையிலான பொருட்களுக்கு விரிவாக்கப்படுகிறது. சதவீதமும் அதிகமாக உயர்த்தப்படுகிறது. மக்கள் எவ்வாறுதான் வாழ்வார்கள் என இந்த அரசு எதிர்பார்க்கிறது?

எல்லோருக்குமான வளர்ச்சி முன்னேற்றம் என்பதெல்லாம் வெறும் ஏமாற்று. மக்களுடன் ஒன்றிய அரசு நிற்கவில்லை; மாறாக இந்தியச் செல்வத்தைக் கொள்ளையிடுகிற அம்பானி, அதானி ஆகியோருக்கு ஆதரவாக இயங்குகிறது. பணக்காரர்களின் பேராசையை நிறைவு செய்வதை தனது கடமையாகக் கொள்கிறது.

எப்போதும் மதத்தைப் பற்றியே அவர்கள் பேசிக் கொண்டிருக்கிறார்கள். ஆனால் உண்மையில் அவர்கள் ஒரு புதிய மதத்தை இப்போது உருவாக்கிவிட்டார்கள். பேராசை என்பது அந்த மதத்தின் பெயர். ஒரு புதிய கடவுளையுமா கண்டறிந்திருக்கிறார்கள்? லாபம்தான், பணம்தான் அவர்களது கடவுள். மார்க்கெட் எனப்படும் சந்தை அவர்களது கோவில்.

மக்களால் வணங்கப்படும் கடவுள்களையும் மதங்களையும் அவர்கள் காட்டிக்கொடுத்து துரோகம் செய்து விட்டார்கள். அவலமான வாழ்க்கையின் உண்மையான பிரச்சினைகளிலிருந்து மக்களை திசை திருப்புவதற்கு, நாட்டை எப்போதும் பதட்ட நிலையில் வைத்திருக்க விரும்புகிறார்கள்

அவர்களுக்கு இணையாக சிறுபான்மையினர் வகுப்பு வாதமும் வளர்ந்து வருகிறது. இவர்கள் ஒருவருக்கொருவர் ஆதரவாக நிற்கிறார்கள். கை குலுக்கிக் கொள்கிறார்கள்.

இந்தியாவின் பெரும்பான்மை மக்கள் கடவுள் நம்பிக்கை கொண்டவர்கள்தான். அது எந்த மதத்தைச் சார்ந்தவர்களாகவும் இருக்கலாம். நேற்று புதுச்சேரிக்கு வந்த அமித்ஷா அங்கு அரவிந்தர் ஆசிரமத்தில் "வேதங்கள் காட்டும் வழி என்பது எந்த எல்லையையும் கொண்டதல்ல. அது உலகம் முழுக்க பொதுவானது" என்று பேசியிருக்கிறார். ஆனால் உண்மையில் இதை அவர்கள் நம்புகிறார்களா? அதற்கு நேர் எதிராக அல்லவா நடந்து கொள்கிறார்கள்!

ஒரே மொழி, ஒரே ரேஷன் கார்டு, ஒரே தேர்தல் என்று எல்லாவற்றையும் ஒரே மயமாக்குவது தானே இங்கு நடந்து கொண்டிருக்கிறது! இந்நாட்டின் பன்மைத்துவத்துக்கு எதிராக, பாரம்பரியத்திற்கு எதிராக நடந்துகொள்ளும் அவர்கள் மக்களிடம் மன்னிப்பு கேட்க வேண்டும்.

2024ம் ஆண்டு இந்த நாட்டுக்கு மிக மிக முக்கியமானதாகும். தேச விரோத மக்கள் விரோத ஆர்எஸ்எஸ் – பிஜேபி கூட்டத்தைத் தோற்கடிக்க வேண்டும். அதற்காக ஒரு விரிவான கூட்டு உருவாகவேண்டும். இதில் தமிழ்நாடு, கேரளா ஆகிய மாநிலங்கள், இந்தப் போராட்டத்தில் மிகப் பெரும் பங்கு வகிக்கவிருக்கின்றன.

இந்திய கம்யூனிஸ்ட் கட்சி உள்ளிட்ட இடதுசாரிகள், திராவிட முன்னேற்றக் கழகம் ஆகியவற்றுக்கு இதில் பங்குள்ளது. அனைத்து மாநில அரசுகளையும், கூட்டாட்சி முறைமையையும் முற்றாக சிதைத்து விட பிஜேபி விரும்புகிறது. ஒன்றிய அரசின் கருவிகளாக ஆளுநர்கள் மாற்றப்படுகிறார்கள். ஒவ்வொரு மாநிலத்தில் உள்ள ராஜ்பவன் எனப்படும் ஆளுநர் மாளிகை, பிஜேபியின் மாநிலக் கிளை அலுவலகங்களாகச் செயல்படுகின்றன. அரசியலமைப்பு சட்டத்திற்கு விரோதமான இந்த வெட்ககரமான செயலை அவர்கள் மிகுந்த பெருமிதத்தோடு செய்து வருகிறார்கள்.

அரசாங்கத்தின் தலைவர் என்ற முறையில் அந்தந்த மாநில அரசுகள் உருவாக்கி வைத்திருக்கும் பல்கலைக்கழகங்களுக்கு ஆளுநரை வேந்தர் என்று அழைத்தார்கள். முன்னெப்போதும் இல்லாத வகையில் வேந்தர் என்ற பெயரைப் பயன்படுத்திக் கொண்டு, துணைவேந்தர்களை அரசியல் நியமனம் செய்வது அநியாயமானது.

பிஜேபி மாநில ஆளுநர்களை தன்னுடைய ஏஜெண்டுகளாக மாற்றிவிட்டது.

சென்னையில் அனைத்திந்திய மாணவர் பெருமன்றம் ஒரு தேசிய கருத்தரங்கை நடத்த போகிறது. அதில் புதிய தேசிய கல்வி கொள்கை விவாதிக்கப்பட இருக்கிறது. ஒன்றிய அரசின் கல்விக் கொள்கை அறிவியலுக்கு விரோதமானது; ஒரு புதிய இந்தியாவை உருவாக விடாமல் தடுப்பது. நாடு முழுவதிலும் இருந்து நூற்றுக்கணக்கான மாணவர் பிரதிநிதிகள் அந்த மாநாட்டுக்கு வருகிறார்கள். மாநாடு வெற்றிபெற இந்திய கம்யூனிஸ்ட் கட்சி வாழ்த்துகிறது.

டெல்லியில், ஜஹாங்கீர்பூரில் நடந்த கொடுமையான தாக்குதலுக்கு பின்னர், இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் பொதுச் செயலாளர் டி.ராஜா, நான் உள்ளிட்ட பிரதிநிதிகள் குழு 2 நாட்களுக்கு முன்பு அங்கு சென்றோம். அந்த மக்களை சந்திக்க முயன்றோம். நூற்றுக்கணக்கான வீடுகள், கடைகள் புல்டோசர் கொண்டு இடித்து நொறுக்கப்பட்டுள்ளன. அனுமான் பூஜை என்ற பெயரில் ஊர்வலங்கள் நடத்தி இஸ்லாமியர் வீடுகளையும் கடைகளையும் குறிவைத்து நொறுக்கியிருக்கிறார்கள்.

நாங்கள் அங்கு மக்களைப் பார்ப்பதற்காகத் தான் போனோம். ஆனால் நூற்றுக்கணக்கான காவல்துறையினர் எங்களை உள்ளே நுழைய விடாமல் தடுத்து நிறுத்தினர். டெல்லியில் கொதிக்கும் வெயிலில் மூன்று மணி நேரத்திற்கு மேலாக நாங்கள் சாலையிலேயே அமர்ந்திருந்தோம். டெல்லி போலீஸ் டெல்லி மாநில அரசின் கட்டுப்பாட்டில் இல்லை. ஒன்றிய அரசின் உள்துறை அமைச்சகத்தின் கட்டுப்பாட்டில் இருக்கிறது

இந்திய அரசியல் சாசனத்தின் 20ஆவது பிரிவின்படி மக்களுக்கு வாழ்கிற உரிமையிருக்கிறது. வீடுகளில் வசிக்கிற உரிமையும் இருக்கிறது. இது அவர்களுடைய நாடு. பிஜேபி–ஆர்எஸ்எஸ் உங்கள் அனுமதியைப் பெற்றுக்கொண்டு அவர்கள் வாழ வேண்டிய அவசியமில்லை. ஜகாங்கீர்பூர் மட்டுமல்ல; இந்தியா முழுமையிலும் அனுமன் பூஜை, ராமநவமி, விநாயகர் சதுர்த்தி என்று வெவ்வேறு மத கொண்டாட்டங்களை, இதுவரை இல்லாத புதிய வடிவத்தில் உருவாக்கி, அதில் மாற்று மதத்தவரை தாக்கி அச்சுறுத்துகிறார்கள்.

தம்மைக் கடவுள் நம்பிக்கையாளர்கள், மத நம்பிக்கையாளர்கள் என்று கூறிக் கொள்வதெல்லாம், தங்களுடைய தீய எண்ணங்களை மறைத்துக் கொள்வதற்காக பயன்படுத்தும் முகமூடிகள் மட்டுமே.

இவற்றினால் எல்லாம் அனைத்து மக்களும் ஏமாந்து இவர்களிடம் சரணடைய மாட்டார்கள். இவர்களைக் காட்டிலும் கடினமான, கொடூரமான ஆட்சியாளர்களை இந்த நாடும் உலகமும் சந்தித்துள்ளன. இறுதி வெற்றி மக்களுக்கே தான்

தமிழ்நாட்டில் மதச்சார்பற்ற ஜனநாயகக் கட்சிகளின் விரிவான ஒற்றுமை கட்டப்பட்டதால், இங்கு தேர்தல் வெற்றி பெற முடிந்தது. இதேபோன்ற ஒன்றிய அரசின் மக்கள் விரோத தேச விரோத கொள்கைகளுக்கு எதிரான புதிய சிந்தனைப் போக்கு இந்தியா முழுமையும் எழுகிறது. தற்போது தெலுங்கானா இந்த வரிசையில் இருக்கு வந்து சேர்ந்திருக்கிறது.

**2024-ம் ஆண்டு நீண்ட தூரத்தில் இல்லை. சிறந்த மாற்று இங்கு தேவைப்படுகிறது. தமிழ்நாடு, கேரளா, டெல்லி, பஞ்சாப், எங்களுக்கு மாறுபட்ட கருத்து இருந்த போதிலும் கூட, மேற்கு வங்காளம் ஆகிய மாநிலங்களில் எல்லாம் மாற்று சக்திகள் இருந்ததனால், மக்கள் பிஜேபிக்கு எதிராக அவர்களைத் தேர்வு செய்தார்கள். அண்மையில் மத்திய பிரதேசம், வங்காளம் உள்ளிட்ட ஐந்து தொகுதிகளில் வாக்கெடுப்பு நடந்தது. எல்லாவற்றிலும் பிஜேபி தோற்கடிக்கப்பட்டு இருக்கிறது. மேற்குவங்காளத்தில் 15 பா.ஜ.க. நாடாளுமன்ற உறுப்பினர்கள் தோற்கடிக்கப்பட்டார்கள்.**

முன்பு பாஜகவில் இருந்து இப்போது எதிர்நிலையில் இருக்கக்கூடிய சத்ருகன் சின்கா போட்டியிட்டு பல லட்சக்கணக்கான வாக்கு வித்தியாசத்தில் வெற்றி பெற்றார். ஆகவே எதிர்காலம் வெளிச்சமானதாகவே இருக்கிறது. நாங்கள் எந்தத் தனி மனிதர்களுக்கும் எதிரானவர்கள் அல்ல. அதேபோல ஒரு தனி நபரை இப்போது முன்னெடுக்க வேண்டியது அவசியம் இல்லை. இப்போது தேவைப்படுவது ஒரு மாற்று அரசியல். இந்திய கம்யூனிஸ்ட் கட்சி விரிவடைந்த கூட்டணியை உருவாக்க தன்னாலான அத்தனை முயற்சிகளையும் எடுக்கும்.

பேட்டியின்போது இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் மாநில செயலாளர் முத்தரசன், செயற்குழு உறுப்பினர் டி.எம்.மூர்த்தி ஆகியோர் உடனிருந்தனர்.


## டாக்டர் அம்பேத்கர், பி.சி.ஜோஷி பிறந்தநாள் விழா

டாக்டர் அம்பேத்கர், பி.சி.ஜோஷி ஆகியோரின் பிறந்த தினத்தை முன்னிட்டு தமிழ்நாடு ஒடுக்கப்பட்டோர் வாழ்வுரிமை இயக்கத்தின் சார்பில் இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் கோவை மாவட்ட அலுவலகம் ஜீவா இல்லத்தில் படங்கள் வைத்து மரியாதை செலுத்தப்பட்டது.

தமிழ்நாடு ஒடுக்கப்பட்டோர் வாழ்வுரிமை இயக்கத்தின் மாவட்ட தலைவர் பி.முருகன் தலைமையில் நடைபெற்ற பிறந்தநாள் நிகழ்வில் இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் மாவட்டச் செயலாளர் வி.எஸ்.சுந்தரம், அமைப்பின் மாவட்டத் துணைத் தலைவர் கே.புருஷோத்தமன், இளைஞர் பெருமன்ற மாவட்டச் செயலாளர் வே.வசந்தகுமார், மாணவர் பெருமன்ற மாநிலத் தலைவர் மௌ.குணசேகர் ஆகியோர் உரையாற்றினர். அமைப்பின் மாவட்ட செயலாளர் அ.அசரப் அலி சமத்துவ நாள் உறுதிமொழியை வாசித்தார். இந்திய கம்யூனிஸ்டு கட்சியின் மாவட்ட துணைச் செயலாளர் ஆர்.தேவராஜ், அமைப்பின் மாவட்டப் பொருளாளர் பி.சற்குணம் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர். வெங்கிட்டாபுரம் பூபேஷ்குப்தா நினைவு படிப்பகம் முன்பாக அம்பேத்கர் படம் வைத்து மரியாதை செலுத்தப்பட்டது.

தமிழ்நாடு ஒடுக்கப்பட்டோர் வாழ்வுரிமை இயக்கத்தின் மாவட்ட செயலாளர் அ.அசரப் அலி தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் மாவட்ட துணைத் தலைவர் கே.புருஷோத்தமன் சிறப்புரையாற்றினார்.

# கேரளா 1957 : முதல் கம்யூனிஸ்ட்



- அனில் ரஜீம்வாலே



**நாட்டிலும் கேரள மாநிலம் முழுவதும் இது கொண்டாட்டங்களின் தருணம், 1957ல் கேரளாவில் கம்யூனிஸ்ட் அரசு ஆட்சிக்கு வந்த சரித்திர நிகழ்வின் 65வது ஆண்டு விழா. பொதுத் தேர்தல் வாக்களிப்பு மூலம் ஒரு கம்யூனிஸ்ட் அல்லது மார்க்ஸிய அரசு ஆட்சி அதிகாரத்திற்கு வருவதென்ற அது, முதன் முறையாக இந்தியாவிலும் உலகின் இரண்டாவதுமான ஒரு சரித்திர நிகழ்வு. அந்நிகழ்வு ஒவ்வொருவரையும் எதிரிகள் மற்றும் கம்யூனிஸ்ட் அல்லாதவர் முதல் கம்யூனிஸ்ட் தோழர்கள் வரையிலும்கூட வியப்பில் ஆழ்த்தியது.**

1947 இந்தியா விடுதலை அடைவதற்கு முன் கேரளா மூன்று பெரும் பகுதிகளாகப் பிரிக்கப்பட்டிருந்தன: திருவிதாங்கூர், கொச்சி மற்றும் மலபாரின் சில பகுதிகள். திருவிதாங்கூரும் கொச்சியும் சமஸ்தானங்கள்.

திருவிதாங்கூர் மாநிலத்திற்கான பொதுத் தேர்தல்கள் 1951டிசம்பர் முதல் 1952 ஜனவரி வரை நடத்தப்பட்டன.

புதிய கேரள மாநிலம் 1956 நவம்பர் 1ல் உதயமானது; அம்மாநிலம், மெட்ராஸ் மாநிலத்தின் மலபார் மாவட்டத்தைத் திருவிதாங்கூர் மாநிலத்துடன் இணைக்கப்பட்டதன் விளைவால் உருவானது. மலபார் மாவட்டம் என்பது கொச்சி கோட்டை மற்றும் இலட்சத் தீவுகளையும் உள்ளடக்கியது. மறுசீரமைக்கப்பட்ட மாநிலத்தில் தெற்கு கனரா மாவட்டத்தின் காசர்கோடு தாலுக்கா மற்றும் அந்தமான் தீவுகளின் சில பகுதிகளும் இணைக்கப்பட்டன. திரு கொச். மாநிலத்தின் தெற்குப் பகுதிகள் மெட்ராஸ் மாகாணத்திற்கு மாற்றப்பட்டன.

மறு சீரமைப்புக்குப் பிறகு சட்டமன்றத் தொகுதிகள் எண்ணிக்கை 1954ம் ஆண்டின் 106லிருந்து 114ஆக அதிகரிக்கப் பட்டன. பொதுவாகத் தொகுதிகளின் எண்ணிக்கை போலவே சட்டமன்ற உறுப்பினர் எண்ணிக்கையும் இருக்கும். ஆனால் 12 தொகுதிகளில் 12இரட்டை உறுப்பினர் தொகுதிகளும் இருந்ததால், தொகுதிகளின் எண்ணிக்கைக்கும் உறுப்பினர் இடங்களின் எண்ணிக்கைக்கும் வேறுபாடு வருகிறது.

**‘ஐக்கிய கேரளா’ இயக்கமும் சிபிஐ கட்சியும்**

மாநிலங்கள் மறுசீரமைப்புக் கேள்விகளையும் தேசிய இனப் பிரச்சனைகளையும் சிபிஐ தீவிரமாகவும் பெரிய அளவிலும் எடுத்துக் கொண்டது. மலையாள மொழி பேசும் பகுதிகளை இணைப்பதன் அடிப்படையில் கேரளா மாநிலம் அமைக்க வேண்டும் என்பதற்காக கேரளாவில் மாபெரும் இயக்கங்களை நடத்தியது.

1956ல் ‘ஒன்றுபட்ட ஜனநாயக மற்றும் வளமான கேரளா’ அமைப்பதற்கான அந்த இயக்கம் ‘ஐக்கிய கேரளா’ இயக்கம் என வழங்கப்படுகிறது. மலையாள மொழிபேசும் மெட்ராஸ் மாகாணத்தின் பகுதியான மலபார், திருவிதாங்கூர் மாநிலத்துடன் இணைக்கப்பட வேண்டும் என அந்த இயக்கம் கோரியது. சிபிஐ அந்த இயக்கத்தில் முன்நிற்க, அதுவே ஏகாதிபத்திய எதிர்ப்பு மற்றும் நிலவுடைமை எதிர்ப்பு ஜனநாயகப் போராட்டத்தின் பகுதியாகவும் மாறியது.

இதுதான் 1957ல் சிபிஐ ஆட்சி அதிகாரத்திற்குப் பெருவாரியாய் இட்டுச் சென்ற முக்கியமான காரணங்களில் ஒன்றாகும். நவம்பர் முதல் தேதி கேரளாவுக்கு முக்கியமான நாள்.

1956 ஜூன் 22 முதல் 24 வரை திருச்சூரில் நடைபெற்ற மாகாண மாநாட்டில் ‘ஜனநாயக மற்றும் வளமான கேரளாவுக்காக’ என்ற தலைப்பில் சிபிஐ நிறைவேற்றிய தீர்மானம் ஐக்கிய கேரளாவை அமைப்பதற்கான திட்டங்களையும் வகுத்து இறுதி செய்தது.

அடுத்து வந்த பொதுத் தேர்தலில் மாநிலத்தின் இடது மற்றும் ஜனநாயக சக்திகளை ஒன்றிணைக்க சிபிஐ அனைத்து முயற்சிகளையும் செய்தது. குறிப்பாக அந்த முன்னணியில் பிரஜா சோஷலிஸ்ட் கட்சி (PSP) மற்றும் வேறு சில கட்சிகளையும் ஓரணியில் கொண்டு வர முயன்றது. 1957 ஜனவரி 1 முதல் 3 வரை ஆல்வேவில் நடைபெற்ற சிபிஐ கேரள மாநிலக் குழுவின் ப்ளீனரி கூட்டத்தில் சிபிஐ பிஎஸ்பி கட்சிகளின் ஒத்துழைப்புக் குறித்து ஆழமாக விவாதிக்கப்பட்டது.

ஆனால் ஆர்எஸ்பி மற்றும் பிஎஸ்பி கட்சிகளுடன் தேர்தல் கூட்டுக்கான முயற்சிகள் தோல்வியில் முடிய, இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி தனித்தே தேர்தலில் போட்டியிட்டது.

**1957 தேர்தல்**

1957ல் இந்திய நாட்டின் பொதுத் தேர்தல்களோடு கேரள மாநிலச் சட்டமன்றத்திற்கும் தேர்தல் நடத்தப்பட்டது. கேரளாவில் சிபிஐ கட்சியின் தேர்தல் அறிக்கை, மாநிலத்திற்கான சமூகப் பொருளாதாரத் திட்டங்கள் மற்றும் அரசியல் சீர்திருத்தத்திற்கு ஆக்கபூர்வமான திட்டங்களை அளித்த தனித்துவமான ஆவணமாகும்.

அந்த ஆவணமே சிபிஐ வெகுவாக முதிர்ச்சி அடைந்ததைக் காட்டுகிறது. தேர்தல் அறிக்கையின் முதல் பகுதி ஐக்கிய கேரளா உருவாக்குவதில் சிபிஐ கட்சியின் பங்களிப்புகளை விவரித்தது. இந்திய அரசு எடுத்த முற்போக்கான நடவடிக்கைகளைப் பாராட்டி, அதற்காக நேருவையும் அனைத்திந்திய காங்கிரஸ் கமிட்டியையும் புகழ்ந்துரைத்தது. அதே நேரத்தில், காங்கிரஸின் பல மக்கள் விரோதக் கொள்கைகளுக்காக அதனைக் கூர்மையாக விமர்சித்தது. அறிக்கையின் இறுதி பகுதி கேரள மாநிலத்தின் வளர்ச்சிக்கான 14 அம்ச திட்டத்தைச் சுருக்கமாக விவரித்தது.

மலபார் மாவட்ட போர்டு மற்றும் பல முனிசிபாலிடிகளைச் சிபிஐ செம்மையாக நடத்திய நிர்வாகத் திறமைக்காகப் பிரதமர் நேருவிடமிருந்து விருதுகள் வென்ற சாதனைகளை அறிக்கை மேற்கோளாகச் சுட்டிக்காட்டியது.

அனைத்து 126 இடங்களுக்கான சட்டமன்றத் தேர்தல்கள் 1957 பிப்ரவரி 28 முதல் மார்ச் 11 வரை நடைபெற்றது. பெரும்பான்மைக்கு 64 இடங்களை வென்றாக வேண்டும்.

124 இடங்களுக்குப் போட்டியிட்ட காங்கிரஸ் சுமார் 22லட்சத்து 9ஆயிரம் வாக்குகளை (37.45 சதவீதம்) பெற்று 43 இடங்களை வென்றது. கம்யூனிஸ்ட் கட்சி தனித்து 101 இடங்களுக்குப் போட்டியிட்டு (34.98 சதவீதம்) 20லட்சத்து 59ஆயிரம் வாக்குகள் பெற்று 60 இடங்களை வென்றது. பிஎஸ்பி 9 இடங்களை வென்றது, ஆர்எஸ்பி ஓரிடத்திலும் வெற்றிபெறவில்லை, அவை 28 இடங்களுக்குப் போட்டியிட்டன. 14 சுயேச்சைகள் வெற்றி பெற்றிருந்தனர்.

சிபிஐ ஆதரவுடன் வெற்றிபெற்ற 5 சுயேச்சைகளின் ஆதரவுடன் இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி ஆட்சி அமைத்தது. இ.எம்.எஸ். நம்பூதிரிபாட் இந்தியாவின் முதல் கம்யூனிஸ்ட் முதலமைச்சரானார்.

ஒரு வரலாற்று நிகழ்வு : கொள்கை மற்றும் நடைமுறையில் அதன் பாடங்கள்:

வாக்குச் சீட்டு தேர்தல் மூலம் கேரளாவில் முதல் கம்யூனிச

# உரத்தட்டுப்பாட்டால் விவசாயிகள் தவிப்பு!

## நடவடிக்கை எடுக்க தமிழ்நாடு விவசாயிகள் சங்கம் கோரிக்கை

தமிழ்நாடு விவசாயிகள் சங்கத்தின் தஞ்சை மாவட்ட நிர்வாக குழு கூட்டம் சங்கத் தலைவர் வீரமோகன் தலைமையில் நடைபெற்றது.

மாவட்ட செயலாளர் பா.பாலசுந்தரம் முன்னிலை வகித்தார். தமிழ்நாடு விவசாயிகள் சங்கத்தின் மாநில பொதுச்செயலாளர் பி.எஸ்.மாசிலாமணி விவசாயிகளின் பிரச்சினைகள் குறித்து பேசினார்.


இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி தெற்கு மாவட்ட செயலாளர் முத்து உத்திராபதி, வடக்கு மாவட்ட செயலாளர் மு.அ.பாரதி, விவசாயிகள் சங்கதேசிய செயற்குழு உறுப்பினர் அ.பன்னீர்செல்வம் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

கூட்டத்தில் எதிர்பாரா மழை பாதிப்பாலும், இரசாயன உரங்கள் கிடைக்காமலும் கடந்த இருமாதங்களாக விவசாயிகள் பரிதவித்து வருகின்றனர்.

யூரியா மற்றும் டிஏபி இரசாயன உரங்கள் தொடர் தட்டுப்பாடாக உள்ளது. குறைந்த அளவில் வரும்போது அந்த உரங்களை உரிய விலைக்கு பில் கொடுத்துவிட்டு விற்பனையாளர்கள் கூடுதல் பணம் கேட்கிறார்கள், அல்லது விவசாயிகளுக்கு தேவையில்லாத வேறு இடுப்பொருட்களை வாங்கினால் தான் உரம் எனக் கட்டாயப் படுத்தப் படுகின்றனர்.

உரக் கம்பெனிகளே அவர்களின் பிற தயாரிப்புகளை உரங்களுடன் சேர்த்து கட்டாய விற்பனை செய்கிறது.

உரிய காலங்களில் அதற்கு உரிய உரங்களை போட்டால் தான் மகசூல் எடுக்கவும் முடியும் என்ற சூழ்நிலையில் விவசாயிகள் நிர்ப்பந்திக்கப் படுகின்றனர். எனவே அரசு தலையிட்டு உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும் என்பன உள்ளிட்ட பல்வேறு தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.



**அரசியல் சுதந்திரம், கூட்டம் நடத்தும் சுதந்திரம், சங்கம் அமைக்கும் சுதந்திரம், பத்திரிகை சுதந்திரம் இவையாவும் நம்முடைய ஆயுதங்கள்.**

**– எங்கெல்ஸ்**

# 2022 மே தின விழாவில்

| எண் | மாவட்டம் | ஏஐடியூசி | சிஐடியு |
|---|---|---|---|
| 1 | வ.சென்னை | இரா.முத்தரசன் | ஏ.கே.பத்மநாபன் |
| 2 | ம. சென்னை | சி.மகேந்திரன் | அ.சவுந்தரராஜன் |
| 3 | தெ.சென்னை | வகிதா நிஜாம் | கே.பாலகிருஷ்ணன் |
| 4 | காஞ்சிபுரம் | கே.இரவி | எஸ்.ராஜேந்திரன் |
| 5 | செங்கல்பட்டு | டாக்டர் ஜி.ஆர்.ரவீந்திரநாத் | வி.குமார் |
| 6 | திருவள்ளூர் | சி.ஸ்ரீகுமார் | பி.சம்பத் |
| 7 | வேலூர் | மு.வீரபாண்டியன் | ஏ.கிருஷ்ணமூர்த்தி |
| 8 | தி.மலை | கே.நடராஜன் | கே.விஜயன் |
| 9 | விழுப்புரம் | டி.மணிவாசகம் | டி.ரவீந்திரன் |
| 10 | கள்ளக்குறிச்சி | மௌ.குனசேகரன் | ஆர்.பத்ரி |
| 11 | கடலூர் | த.லெனின் | ஜி.சுகுமாரன் |
| 12 | நாகை | பி.எஸ்.மாசிலாமணி | என்.குணசேகரன் |
| 13 | மயிலாடுதுறை | எம்.செல்வராசு | எஸ்.வாலண்டினா |
| 14 | திருவாரூர் | த.இந்திரஜித் | நாகை மாலி |
| 15 | தஞ்சாவூர் | பி.பத்மாவதி | எம்.தனலட்சுமி |
| 16 | புதுக்கோட்டை | சி.சந்திரகுமார் | மதுக்கூர் ராமலிங்கம் |
| 17 | அரியலூர் | திருச்சி எம்.செல்வராஜ் | |
| 18 | பெரம்பலூர் | வி.ஞானசேகரன் | பி.சிங்காரன் |
| 19 | திருச்சி மாநகர் | க.மாரிமுத்து | கே.கனகராஜ் |
| 20 | திருச்சி புறநகர் | வெங்கடேஷ் வேம்புலி | எம்.சின்னதுரை |

# அரசின் வரலாற்று முக்கியத்துவம்



## கம்யூனிஸ்ட் ஆட்சியின் 65 வது ஆண்டு விழா கொண்டாட்டம்

அரசு அமைந்து ஒரு வரலாற்று நிகழ்வு. அது, கம்யூனிஸ்ட் அல்லாதவர்கள் மற்றும் கம்யூனிஸ்ட்கள் இருசாராரிடமும் நிலைகொண்டிருந்த பல கோட்பாட்டு கருத்துகளைப் புரட்டிப் போட்டது.

அதுவரையில் கம்யூனிஸ்ட்கள் ஆட்சி அதிகாரத்திற்குத் தேர்தல்கள் மூலம் வரமுடியாது என்பதே பொதுவான எண்ணமாக இருந்தது. அப்படியும் 'ஏதேச்சையாக' அவர்கள் வந்து விட்டாலும், 'முதலாளித்துவ' அமைப்பில் அவர்களால் பெரிதாக எதுவும் செய்துவிட முடியாது என்றே கருதினர்.

இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி அப்போதுதான் 'பிடிஆர் பாதை' காலத்திலிருந்து (1948–50) வெளியே வந்திருந்தது. அந்தக் காலத்தின்போது ஆயுதப் போராட்டத்தின் மூலம் புரட்சிக்குத் தயாரிப்பதில் மும்முரமாக இருந்ததால், முதலாளித்துவ 'பூர்ஷ்வா' தேர்தல்களில் பங்கேற்பதில்லை என அப்போது கட்சி முடிவெடுத்திருந்தது.

இந்தக் குழுப் போக்கு மற்றும் சாகசப் பாதை அதனது வீரியத்தை வெகு விரைவிலேயே ஓடி முடித்து விட்டதால், 1950 – 51ல் அது மாற்றி அமைக்கப்பட்டது; ஆனால் அதற்கு முன்னதாகவே கம்யூனிஸ்ட் இயக்கத்தில் கடுமையான சேதாரத்தை ஏற்படுத்திவிட்டது. இந்நிலையில் சிபிஐ கட்சியை மீண்டும் இயல்பு நிலை பாதைக்குக் கொண்டுவருவதில் 1957 கேரளத் தேர்தல் முடிவுகள் நீண்ட கால அளவில் உதவியது.

அஜாய் கோஷ் 1951ல் பொதுச் செயலாளர் ஆனார்; அவருடைய வழிகாட்டலில் அமைந்த புதிய தலைமை மெல்ல மெல்ல பயணத்தின் பாதை மாற்றத்தை, கட்சி அணுகுமுறை போக்கைச் சரிசெய்வதில் புகழ்பெற்ற மூவர் அஜாய் கோஷ், டாங்கே மற்றும் காட்டே மூவரின் கடிதங்கள் முக்கியப் பங்காற்றின.

1952 பொதுத் தேர்தலில் கட்சி தீவிரமாகப் பங்கேற்கும் என சிபிஐ அறிவித்தது; அந்த வரலாற்றுப் புகழ்மிக்க முக்கிய முடிவு கட்சியை நாடாளுமன்றத்தில் முக்கிய எதிர்கட்சியாக அமர்த்தியது. புதிய அணுகுமுறை கேரளாவில் கம்யூனிஸ்ட் அரசையும், இந்தியாவில் இ.எம்.எஸ். அவர்களை முதலாவது கம்யூனிஸ்ட் முதலமைச்சராயும் மலர்ந்ததில் நிறைவுற்றது.

**பரந்த தொலைநோக்கு கண்டோட்டம்**

பொதுவாகக் கூறுமிடத்து, இரண்டாவது உலகப் போருக்கு முன், தேர்தல்களில் பங்கேற்பது என்பது பிரச்சாரத்திற்கான வழிமுறை என்று மட்டுமே பார்க்கப்பட்டது. மாறாக, வேறு உதாரணங்களும் உள்ளன: பிரான்சு மற்றும் ஸ்பெயினில் பாசிச எதிர்ப்பு மக்கள் முன்னணிகளில் கம்யூனிஸ்ட்கள் பிற முற்போக்குக் கட்சிகளுடன் இணைந்து தேர்தல்களில் போட்டியிட்டதும் அரசுகளை அமைத்ததும் உண்டு. ஆனால் ஒட்டு மொத்தமாக, தேர்தல்கள் ஒரு தற்காலிக நிகழ்வாக, புரட்சியுடன் தொடர்பில்லாத, அதற்கு உதவியாய் எதுவும் செய்ய முடியாத நிகழ்வாகவே பார்க்கப்பட்டன.

இரண்டாம் உலகப் போருக்குப் பிந்தைய சூழ்நிலை நாடாளுமன்ற முறை வடிவிலான போராட்டங்கள் மூலம் ஜனநாயக மாற்றத்திற்கான புதிய சாத்தியப்பாடு வாய்ப்புக்களைத் திறந்தது; பரந்துபட்ட ஏகாதிபத்திய எதிர்ப்பு ஜனநாயக முன்னணி நிலைமைகளில் அந்தப் போராட்டங்கள் பெருந்திரள் இயக்கத்தின் ஆதரவைப் பெற்றது. உலகக் கம்யூனிஸ்ட் கட்சி கூட்டங்கள் மற்றும் மாநாடுகளில் இந்த நிகழ்வுப் போக்கு பிரச்சனைகள் பரந்த அளவில் விவாதிக்கப்பட்டன.

இந்தக் கண்ணோட்டத்தில் கேரளாவின் வெற்றி கோட்பாட்டளவிலும் நடைமுறையிலும் பெரிய பங்களிப்புக்களையும் செய்தது.

**1957, கேரளாவில் கம்யூனிஸ்ட் அரசு**

சிபிஐ பொதுச் செயலாளர் அஜாய் கோஷ் தேர்தல்களுக்கு முன் தேசத்திற்கு விடுத்த ஒரு வேண்டுகோளில் ஜனநாயகத் திட்டத்தை மக்கள் முன் வைத்து, சிபிஐ புதிய வாய்ப்புக்களைப் பயன்படுத்தி சீர்திருத்தங்களை முன்னெடுத்துச் செல்லும் என உறுதி அளித்தார். கேரள மாநிலச் சிபிஐயும் தங்கள் பங்கேற்புடன் மக்களுக்கு ஆதரவான நடவடிக்கைகளை எடுக்க உறுதி அளித்தது. இது ஒரு புதிய அணுகுமுறை.

இஎம்எஸ் நம்பூதிரிபாத் தலைமையிலான கம்யூனிஸ்ட் அரசு 1957 ஏப்ரல் 5ல் பதவிப் பிரமாணம் செய்து வைக்கப்பட்டது. அந்த அமைச்சரவையில் டிவி தாமஸ், சி அச்சுத மேனன், கேஆர் கௌரி, கேசி ஜார்ஜ், பேராசிரியர் ஜோசப் முண்டச்சேரி, டாக்டர் ஏஆர் மேனன், கேபி கோபாலன், வி ஆர் கிருஷ்ணய்யர், டிஏ மஜீத் மற்றும் பிகே சேத்தன் இடம் பெற்றனர். அச்சுத மேனன் அப்போது சிபிஐ மாநிலக் குழு செயலாளராகவும் கட்சியின் மத்தியக் குழு உறுப்பினராகவும் இருந்தார். அவர் கொச்சி மாநில மக்கள் இயக்கத்தின் புகழ்பெற்ற தலைவராகவும் இருந்துள்ளார். அவர்தான் கம்யூனிஸ்ட் அரசுகள் நிலச் சீர்திருத்தங்களை மேற்கொள்ள வேண்டும் என்ற அலுவல் பூர்வமல்லாத தீர்மானத்தை முதன் முதலாக முன்மொழிந்தார். ஆர்வத்திற்குரிய ஒரு செய்தியாதெனில், 1964ல் சிபிஐ பிளவுக்குப் பின் கேரளாவில் சிபிஐ தலைமையிலான கூட்டணி அரசின் முதலமைச்சராக இருந்தவர் சி அச்சுதமேனன்.

அமைச்சரவையில் இடம்பெற்ற 11 உறுப்பினர்களும் தலைசிறந்த ஆளுமைகள். முதலமைச்சர் இஎம்எஸ் சட்டமன்ற கம்யூனிஸ்ட் குழுத் தலைவர், சிபிஐ பொலிட் பீரோ உறுப்பினர், வேளாண்மை, விவசாயிகள் மற்றும் தேசிய இனங்கள் குறித்த பிரச்சனையில் அவர் ஒரு விற்பன்னர், முடிந்த முடிவைச் சொல்லும் ஆளுமையாளர், விவசாயிகள் மற்றும் பிற இயக்கங்களின் தலைவர் சி.அச்சுத மேனன் கொச்சி பிரஜா மண்டலம் நிறுவனத் தலைவர்களில் ஒருவர் மற்றும் மேற்குறிப்பிட்ட பங்களிப்புக்களை ஆற்றிய சிறப்புக்களுக்கும் உரியவர். கேசி ஜார்ஜ் திருவிதாங்கூர் மக்கள் இயக்கத்தின் தலை சிறந்த தலைவர், முதலில் மத்தியக் குழு உறுப்பினராகவும் பின்னர் மத்திய கட்டுப்பாட்டுக் குழு உறுப்பினர் ஆகவும் இருந்தவர். கேபி கோபாலன் மலபார் தொழிற்சங்க இயக்கத் தலைவர், மெட்ராஸ் சட்டமன்ற உறுப்பினர், தொழிலாளர் வர்க்கத்தின் புகழ்மிக்க தலைவர். திருவிதாங்கூர் தொழிற்சங்க இயக்கத்தின் தலைவரான டிவி தாமஸ், முந்தைய திருவிதாங்கூர் மாநிலச் சட்டமன்ற எதிர்கட்சித் தலைவர், ஆலப்பே முனிசிபாலிட்டி தலைவர். கேஆர் கௌரி சேர்த்தலை ஆலம்புழா தாலுக்காக்களின் என்றும் மறையாத தொழிலாளர் வர்க்க இயக்கத்தின் தலைவர். பலரும் 'சேத்தன் மாஸ்டர்' என அன்போடு அழைக்கும் பிகே சேத்தன் புலய மகாஜன சபாவின் தலைவர் மற்றும் அமைச்சரவையில் ஓர் அரிஜனப் பிரதிநிதி, திருவிதாங்கூர் மாநிலத்தின் மூன்று பொதுத் தேர்தல்களிலும் வர்க்கலாவில் வெற்றிபெற்ற டிஏ மஜீத், ஓர் இலக்கியவாதியும் கல்வியாளருமான பேராசிரியர் ஜோசப் முண்டச்சேரி கூட்டுறவு இயக்கத்தின் தலைவர்; டாக்டர் ஏ.ஆர்.மேனன், சிபிஐ ஆதரவில் வெற்றிபெற்ற சுயேச்சை, முன்னாள் காங்கிரஸ் உறுப்பினர் மற்றும் அமைச்சர் வி ஆர் கிருஷ்ணய்யர் சிபிஐ ஆதரவளித்த மற்றொரு சுயேச்சை, மெட்ராஸ் சட்டமன்ற உறுப்பினர் மற்றும் குத்தகை மசோதாக்களை முன்பு நிறைவேற்றியதற்காகப் புகழோடு அறியப்பட்டவர்.

அத்தகைய உயர்ந்த தனிப் பெரும் சிறப்புக்களைப் பெற்றது முதலாவது கம்யூனிஸ்ட் அமைச்சரவை.

**இவ்வாறு, ஒரு மாநில அரசு மற்றும் நிர்வாகத்தை நடத்துவது கம்யூனிஸ்ட்களுக்கு ஒரு புதிய அனுபவம் குறிப்பாக, அந்தக் காலத்தில் தனித்துவமானதும்கூட. நடைமுறை மற்றும் கொள்கை ரீதியான பல பாடங்கள் கற்கப்பட்டன, பிரச்சனைகள் தெளிவுபடுத்தப்பட்டன. கம்யூனிஸ்ட் அரசு பல சீர்திருத்தங்களை அமலாக்க முயன்றது. இந்தப் புது அனுபவத்தில் அவர்களது புரிதல் செழுமைப்பட்டது. தற்போது இருக்கும் அரசியலமைப்புச் சட்டம் மற்றும் தேர்தல் முறைக்குள்ளேயே பல சீர்திருத்தங்களைக் கொண்டுவர முடியும், வர்க்க அதிகாரச் சமநிலையில் ஒரு மாற்றத்தை ஏற்படுத்தவும் இயலும் என்பதை அவர்களது அனுபவம் காட்டியது.**

வெற்றிக்குப் பிறகு அரசில் சேருமாறு பிரஜா சோஷலிஸ்ட் கட்சிக்குச் சிபிஐ விடுத்த அழைப்புக்குப் பதில் இல்லை.

சிபிஐ அரசு அமைத்தது வெறும் அதிகார விளையாட்டு அல்லது எண்கள் விளையாட்டின் காரணமாகவோ அல்ல. அது பெருந்திரள் மக்கள் போராட்டங்கள் மற்றும் தியாகங்களின் வரலாறு. எனவே அதற்குப் பின்னால் மாபெரும் மக்களின் ஆதரவை அது பெற்றிருந்தது. மொழி அடிப்படையில் மொழிவாரி மாநில மறுசீரமைப்புக்கான போராட்டத்தை அது தலைமையேற்று நடத்தியது. வளர்ச்சிக்கான திட்டங்கள், நிதி ஆதாரங்கள், தொழிற்சாலைகள், வேளாண் சீர்திருத்தங்கள், மக்களுடன் உறவு முதலியவற்றைக் கையாள்வது பற்றி சிபிஐ "கொள்கை அறிகை" வெளியிட்டது.

ஒரு சில சீர்திருத்தங்களை அமலாக்கியது, மேலும் அமலாக்க முயன்றது; ஆனால் சுயநல குறுகிய நோக்கம் உடையவர்கள் மற்றும் காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்த சிலர் உள்ளிட்ட வலதுசாரிகள் கம்யூனிஸ்ட் அரசை அதன் முழு பதவிக் காலமும் நடத்தவிடவில்லை. அரசு 1959ல் பதவி நீக்கம் செய்யப்பட்டு கலைக்கப்பட்டது.

இருப்பினும், கேரளாவின் முதல் கம்யூனிஸ்ட் அனுபவங்கள் நீண்ட காலம் நீடிக்கக் கூடிய நடைமுறை மற்றும் கோட்பாட்டு முக்கியத்துவம் உடையது. அடுத்து அமைந்த இடதுசாரி அரசுகளுக்கு அந்த அனுபவம் பெரிதும் உதவியது.

நன்றி: நியூஏஜ் , தமிழில்: **நீலகண்டன்**

## ங்கேற்கும் தலைவர்கள்


| | | | |
|---|---|---|---|
| 21 | சிவகங்கை | எஸ்.குணசேகரன் | கே.சாமுவேல்ராஜ் |
| 22 | ராமநாதபுரம் | வி.அழகர்சாமி | எம்.சந்திரன் |
| 23 | தூத்துக்குடி | எஸ்.காசி விஸ்வநாதன் | கே.சி.கோபிகுமார் |
| 24 | கன்னியாகுமரி | எஸ்.இசக்கிமுத்து | கே.ஆறுமுகநயினார் |
| 25 | தென்காசி | டி.இசக்கிதுரை | பி.சுகந்தி |
| 26 | திருநெல்வேலி | டி.எம்.மூர்த்தி | ஐடாஹெலன் |
| 27 | விருதுநகர் | கோ.பழனிச்சாமி | கே.பாலபாரதி |
| 28 | மதுரை மாநகர் | க.சந்தானம் | மாலதி சிட்டிபாபு |
| 29 | மதுரை புறநகர் | ஜி.மஞ்சுளா | பி.டில்லி பாபு |
| 30 | தேனி | ம.இராதாகிருஷ்ணன் | எம்.என்.எஸ்.வெங்கட்ராமன் |
| 31 | திண்டுக்கல் | எம்.கண்ணகி | எம்.மகாலட்சுமி |
| 32 | கரூர் | க.பாரதி | ஏ.ஜானகிராமன் |
| 33 | நாமக்கல் | என்.பெரியசாமி | ஜி.ராமகிருஷ்ணன் |
| 34 | சேலம் | சீ.தினேஷ் | எஸ்.கண்ணன் |
| 35 | ஈரோடு | எஸ்.சின்னச்சாமி | பி.சண்முகம் |
| 36 | திருப்பூர் | கே,சுப்பராயன் | எஸ்.கே.மகேந்திரன் |
| 37 | கோவை | எம்.ஆறுமுகம் | ஆர்.சிங்காரவேலு |
| 38 | நீலகிரி | ஏ. பெள்ளி | ஏ.ராதிகா |
| 39 | தருமபுரி | ஆர். ஆறுமுகம் | இ.பொன்முடி |
| 40 | கிருஷ்ணகிரி | டி,ராமச்சந்திரன் | ஆர்.வெங்கடபதி |
| 41 | புதுச்சேரி | ஏ,எம்,சலீம் | கே.திருச்செல்வன் |

## கொள்முதல் நிலையங்களில்
# ஆயிரக்கணக்கான மூட்டைகள் மழையில் நனைந்து வீணாகிறது

### உடனடியாக நடவடிக்கை எடுக்க ஏஐடியூசி கோரிக்கை!

தமிழ்நாடு நுகர்பொருள் வாணிப கழக தொழிலாளர் சங்கம் மற்றும் சுமைதூக்கும் தொழிலாளர் சங்கங்களின் நிர்வாக குழு கூட்டம் சுமைசங்க மாநிலத் தலைவர் அ. சாமிக்கண்ணு, தொழிலாளர் சங்க மாநில துணைத் தலைவர் எஸ். சிவானந்தம் ஆகியோர் தலைமையில் நடைபெற்றது. மாநில பொதுச் செயலாளர் சி.சந்திரகுமார், இணைப் பொதுச் செயலாளர் ஜெ.குணசேகரன், பொருளாளர் தி.கோவிந்தராஜன் மற்றும் நிர்வாகக்குழு உறுப்பினர்கள் பங்கேற்றனர். கூட்டத்தில் நெல் கொள்முதலில் திருவாரூர் மாவட்டம் மன்னார்குடி, திருத்துறைப்பூண்டி உள்ளடக்கிய பகுதிகளில் அரசியல் பின்புலத்துடன் உள்ள ஊழல் அதிகாரிகளின் நடவடிக்கைகளால் முறையாக இயக்கம் செய்யாமல் பெருமளவிற்கு நட்டம் ஏற்பட்டுள்ளது. சில கொள்முதல் நிலையங்களில் லஞ்சம் பெற்றுக்கொண்டு விரைந்து இயக்கம் செய்வதும், சில கொள்முதல் நிலையங்களில் மாதக்கணக்கில் இருப்பு இருப்பதுமான நிலை இருக்கிறது. இது குறித்து விரிவான விசாரணை செய்து சம்பந்தப்பட்ட ஊழல் அதிகாரிகள் மீது கடுமையான நடவடிக்கை எடுக்க வேண்டும்.

கிடங்குகளில், சேமிப்பு நிலையங்களில் ஏற்றுக்கூலி மெட்ரிக் டன்னிற்கு நிர்ணயிக்கப்பட்டு வழங்கும் முறையை கைவிட்டு மூட்டைக்கு ரூபாய் ஐந்து என கூலி நிர்ணயித்து வழங்க வேண்டும் என்பன உள்ளிட்ட தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.




**தொழிலாளி வர்க்கம் தனது விடுதலைக்காக முதலாளித்துவத்தை எதிர்த்து நடத்தும் போராட்டத்தில் ஜனநாயகம் அளவு கடந்த அளவுக்கு முக்கியத்துவம் பெறுகிறது. – மார்க்ஸ்**

# துணைவேந்தர்களை நியமிக்க சட்டசபையில் சட்டமுன் வடிவு

## இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி பாராட்டு

தமிழக அரசு கொண்டுவந்துள்ள துணைவேந்தர்கள் நியமனம் குறித்த சட்ட மசோதாவை இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பில் டி.ராமச்சந்திரன் ஆதரித்து பேசியபோது...



மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாநில உரிமைகளை பாதுகாப்பதில் இந்தியாவில் உள்ள முதல்வர்களில் முதல் முதல்வராக நம்முடைய மாண்புமிகு முதல்வர் அவர்கள் இருக்கிறார் என்பதை நிரூபிக்கும் வகையில், இன்றைக்கு உயர் கல்வித்துறையில் பல்கலைக் கழகத்தினுடைய துணைவேந்தர்கள் நியமனத்தை வருங்காலத்தில் தமிழக அரசு நியமிக்கும் என்று கொண்டு வந்திருக்கின்ற சட்ட முன்வடிவை இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பில் மனமார வரவேற்கிறேன்.

கடந்த காலங்களில் துணைவேந்தர்கள் எவ்வாறு நியமிக்கப் பட்டார்கள் என்பதை இந்த அவை நன்கு அறியும். வெளிமாநிலத்தவரையும் வலதுசாரி சிந்தனை கொண்டவர்களையும் துணை வேந்தராக நியமிக்கப்பட்டு வந்த நிலையில், வருங்காலத்தில் தமிழகத்திலுள்ள 13 பல்கலைக்கழகங்களிலும் தமிழக அரசால் நியமிக்கப்படும் என்ற அறிவிப்பை வரவேற்று அதேபோல இன்றைக்கு மாநில ஆளுநர் துணைவேந்தர்கள் மற் றும் பேராசிரியர்களுக்கான 2 நாள் மாநாட்டை இன்றைக்கு ஊட்டியில் துவங்கி இருக்கிறார். மாநிலத்துடைய இணை வேந்தராக நம்முடைய உயர்கல்வித்துறை அமைச்சர் இருக்கிறார். உயர்கல்வித்துறை அமைச்சருடைய ஒப்புதலோ, அழைப்போ இல்லாமல் இன்றைக்கு மக்களாட்சி கோட்பாட்டிற்கு எதிராக ஆளுநருடைய செயல்பாடு என்பது இருந்து வருகிறது. இந்த வகையில் வருங்காலத்தில் மற்ற மாநிலங்களில் கேரளா, குஜராத், கர்நாடகா போன்ற மாநிலங்களில் எவ்வாறு நியமிக்கப்படுகிறார்களோ அதேபோல இனி வருங்காலத்தில் இந்தியாவிற்கே தமிழ்நாடு வழிகாட்டியாக இருக்கும் வகையில் தமிழக அரசு கொண்டுவந்துள்ள இந்த சட்ட முன்வடிவை மீண்டும் இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பாக வரவேற்கிறேன்.

தளி தொகுதியில் துணை மின் நிலையம் அமைத்து தர கோரி டி.ராமச்சந்திரன் பேசிய போது...

சட்டசபையில் என்னுடைய தளி தொகுதி கடல் மட்டத்திலிருந்து 3500 அடி உயரத்தில் இருப்பதால் ஆண்டு முழுவதும் சீதோசன நிலை நிலவுகிறது. அதனால் இப்பகுதி விவசாயிகள் பசுமைகுடில் அமைத்து மலர் சாகுபடி செய்து வருகிறார்கள். தளி, ஜவளகிரி, மதக்கொண்டபள்ளி பகுதிகளில் ஏராளமான விவசாயிகள் பசுமைக்குடில் அமைத்து மலர் சாகுபடி செய்கிறார்கள். ஆண்டுக்கு 700 கோடி ரூபாய் அன்னிய செலவாணி ஈட்டி வருகிறார்கள். இந்த விவசாயிகளுடைய மின் பம்ப் செட்டுகளுக்கு குறைந்த மின் அழுத்தம் காரணமாக மோட்டார்கள் இயங்கவில்லை. ஆகவே தளியில் 110 கே.வி. துணை மின் நிலையம் அமைத்துத்தர அமைச்சர் அவர்கள் ஆவன செய்வாரா? என தளி சட்டமன்ற உறுப்பினர் டி.இராமச்சந்திரன் கேள்வி எழுப்பினார்.

# போட்டி அரசு நடத்தும் ஆளுநர் நடவடிக்கை

## இந்தியக் கம்யூனிஸ்ட கட்சி கடும் கண்டனம்

தமிழ்நாடு ஆளுநர் ஆர்.என்.ரவி, தமிழ்நாடு அரசுடன் தொடர்ந்து மோதல் போக்கை கடைப்பிடித்து வருகிறார். முந்தைய ஆளுநர் மாற்றலாகி, புதிய ஆளுநராக ஆர்.என்.ரவி அறிவிக்கப்பட்ட நேரத்தில், அவர் சாகசக்காரராக பரபரப்பான செய்திகள் வெளியாகியது.

நீட் தேர்வு முறையில் இருந்து தமிழ்நாட்டிற்கு விதிவிலக்கு அளிக்க வேண்டும் என்று சட்டப் பேரவையில் நிறைவேற்றி அனுப்பிய மசோதாவை நீண்டகாலம் கிடப்பில் போட்டு, திருப்பி அனுப்பினார். இதன் தொடர்ச்சியாக சட்டப் பேரவையில் அந்த சட்ட மசோதாவை மீண்டும் ஒரு முறை தீர்மானமாக நிறைவேற்றி அனுப்பிய பிறகும் எந்த முடிவும் எடுக்காமல் தாமதித்து வருகிறார்.

இந்த நிலையில் சட்ட மரபின் படியும், பதவி வழி முறையிலும் பல்கலைக் கழகங்களின் "வேந்தராக" செயல்படும் ஆளுநர் வரும் 25.04.2022 மற்றும் 26.04.2022 தேதிகளில், ஆளுநர் மாளிகையில் (ராஜ்பவன்) "வளர்ந்து வரும் உலகில் இந்தியாவின் பாத்திரம்" மற்றும் "2047 ஆம் ஆண்டில் உலகின் தலைவராகும் இந்தியா" என்ற பொருளில் பல்கலைக் கழகங்களின் சிறப்பு மாநாடு கூட்டியுள்ளார். இதில் ஒன்றிய, மாநில அரசுகளின் பல்கலைக் கழகங்கள், தனியார் பல்கலைக் கழகங்களின் துணை வேந்தர்களும், பேராசிரியர்களுடன் கலந்து கொள்ள வேண்டும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

தமிழ்நாடு அரசின் உயர்கல்வித் துறை அமைச்சர் "பல்கலைக் கழகங்களின் "இணை வேந்தர்" பொறுப்பை வகித்து வருகிறார். ஆளுநர் மாளிகை அறிவிப்பில் அமைச்சர் பங்கேற்பு குறித்து எந்தத் தகவலும் இடம் பெறவில்லை. ஆனால் பன்னாட்டு தொழில்நுட்ப தனியார் நிறுவனமான சூ ஹோ கழகத்தின் நிறுவனரும், முதன்மை நிர்வாக அலுவலருமான திரு ஸ்ரீதர் வேம்பு" முக்கிய உரையாற்றுவார் என குறிப்பிடப்பட்டுள்ளது.

அரசியலமைப்பு அதிகாரத்தை பெற்றுள்ள ஆளுநர், மாநில சட்ட மன்றம் மற்றும் அமைச்சரவையின் ஆலோசனையை ஏற்று செயல்பட வேண்டிய கடமைப் பொறுப்பில் உள்ளவர்.

மக்களாட்சியின் அடிப்படை கோட்பாடுகளை நிராகரித்தும், தமிழ்நாட்டு மக்கள் ஒட்டு மொத்த உணர்வுக்கு எதிராகவும் செயல்படும் ஆளுநர் ஆர்.என். ரவியின் நடவடிக்கை அரசியல் அமைப்புச் சட்ட அத்துமீறல் என்பதுடன், மக்கள் பிரதிநிதி ஆட்சி முறைக்கு எதிரான தலையிட்டு, போட்டி அரசை நடத்தும் அதிகபட்ச அத்துமீறலாகும். தமிழ்நாட்டில் ஒரு அசாதாரண சூழலை உருவாக்க வேண்டும் என்ற வன்மத்துடன் செயல்படும் ஆளுநர் நடவடிக்கையை இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி கடுமையாக கண்டிக்கிறது.

அரசியல் அமைப்புச் சட்டம் மாநில அரசுக்கும், மக்களாட்சிக்கும் வழங்கியுள்ள சட்ட உரிமைகளுக்கு எதிராக ஆளுநர் கூட்டியுள்ள பல்கலைக் கழக துணை வேந்தர்கள் மாநாட்டை உடனடியாக ரத்து செய்ய வேண்டும். சட்டமிறலில் ஈடுபடும் ஆளுநரின் மாநாட்டை துணை வேந்தர்களும், பேராசிரியர்களும் புறக்கணிக்க வேண்டும் என்று இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் தமிழ்நாடு மாநில செயற்குழு கேட்டுக் கொள்கிறது.

இவ்வாறு மாநில செயற்குழு சார்பில் மாநிலச் செயலாளர் இரா.முத்தரசன் வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறியுள்ளார்.

# பாஜக தலைவர் கே.அண்ணாமலை மலிவான செயலை நிறுத்திக் கொள்ள வேண்டும்

## இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி எச்சரிக்கை

தமிழ்நாடு ஆளுநர், தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை நிறைவேற்றி அனுப்பியுள்ள, நீட் தேர்வுக்கு விதிவிலக்குக் கோரும் மசோதா உட்பட பல மசோதாக்களை கிடப்பில் போட்டு வைத்துள்ளார். இதனால் பாதிக்கப்படும் பகுதியினர் ஆளுநர் அரசியலமைப்புச் சட்டத்தின் கடமைப் பொறுப்புகளை நிறைவேற்ற வேண்டும் என வலியுறுத்தி ஜனநாயக வழி முறையில் போராடி வருகிறார்கள்.

இதன் ஒரு பகுதியாக கடந்த சில நாட்களுக்கு முன்னர் ஆளுநர் திருவாவடுதுறை மடத்திற்கு செல்லும் வழியில் மயிலாடுதுறையில் சில அமைப்பினர் அமைதியாக ஜனநாயக முறையில் எதிர்ப்புத் தெரிவித்துள்ளனர். ஆளுநரின் பயண வழியில் எந்தவொரு சிறு இடையூறும் ஏற்படாமல் தமிழ்நாடு அரசு முழு பாதுகாப்பு ஏற்பாடுகளை செய்திருந்தது. ஆளுநர் பாதுகாப்பில் எந்தவித சமரசத்துக்கும் இடமில்லை என்பதை முதலமைச்சர் சட்டப் பேரவையில், விரிவாக விளக்கி தெளிவுபடுத்தியுள்ளார். ஆனால், பாஜகவின் தமிழ்நாடு தலைவர் கே.அண்ணாமலை ஏதோ பெரிய விபரீதம் ஏற்பட்டுவிட்டது போல் கூக்குரல் எழுப்பி வருகிறார். அவரது ஆதரவாளர்கள் செயற்கையான பதற்றத்தை ஏற்படுத்தி வருகின்றனர். ஒன்றிய அரசின் உள்துறை அமைச்சரிடம் நேரில் புகார் கொடுத்து, என்ன செய்கிறோம் பார்! என மிரட்டி வருகிறார்.

பாஜகவின் மதவாத, சனாதானாக் கொள்கைக்கு எதிராக மதச்சார்பற்ற ஜனநாயக சக்திகளை அணி திரட்டும் பணியில் திமுகழகத் தலைவர், முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் முனைப்புடன் செயலாற்றி வருவதால், நாடு முழுவதும் ஜனநாயக சக்திகள் எழுச்சி கொண்டு வருவதால் பாஜகவினர் அஞ்சி நடுங்கி வருகின்றனர். அவர்களது அச்சத்தை மறைத்துக் கொள்ள தமிழ்நாடு அரசை மிரட்டும் வாய்ச்சவடால் அரசியலில் கே.அண்ணாமலை ஈடுபட்டு வருகிறார் என்பதை மக்கள் நன்கு அறிவார்கள். முன்னாள் காவல்துறை அலுவலர் சட்டம் அறிந்து செயல்பட வேண்டும்.

தமிழ்நாடு முழுவதும் மோதலையும், கலவரத்தையும் ஏற்படுத்தும் மலிவான அரசியலில் ஈடுபடுவதை பாஜக தலைவர் நிறுத்திக் கொள்ள வேண்டும் என இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் தமிழ்நாடு மாநில செயற்குழு எச்சரிக்கிறது. கே.அண்ணாமலையின் சட்ட அத்துமீறலை கண்டித்து ஜனநாயக சக்திகள் களம் இறங்கி போராடும் என்பதை தெரிவித்துக் கொள்கிறது.

இவ்வாறு மாநில செயற்குழு சார்பில் மாநிலச் செயலாளர் இரா.முத்தரசன் வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறியுள்ளார்.

# கச்சா பட்டுவிலை உயர்வை கட்டுப்படுத்துக

கச்சா பட்டு விலை உயர்வை கட்டுப்படுத்த கோரி ஜவுளி உற்பத்தியாளர்கள், தொழிற்சங்க அமைப்புகள், ஜவுளி வர்த்தகர்கள், கோரா வர்த்தகர்கள், கூட்டுறவு சங்கத் தலைவர்கள் பங்கேற்ற கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட தீர்மானம் வருமாறு:

கச்சா பட்டு விலை உயர்வை கட்டுப்படுத்து, ஒரு கிலோ பட்டு ரூ.3320 முதல் ரூ.6800 வரை விலை உயர்வால் நெசவு தொழில் அழியும் அபாயம் ஏற்பட்டுள்ளது. 12 மாத காலத்தில் 100% விலை உயர்ந்துள்ளது. இது எப்போதும் காணாத விலை உயர்வு. ஜிஎஸ்டி வரி 5%. மல்பரி இலை, தழை விவசாயத்தில் ஏற்பட்டுள்ள உற்பத்தி வீழ்ச்சி. இறக்குமதியில் ஏற்பட்டுள்ள தடைகள். உள்நாட்டு உற்பத்தி 30% பற்றாக்குறை. தேவையான அளவு பட்டு இருப்பு பற்றாக்குறை. ஒன்றிய அரசு பதுக்கல் செய்யும் பட்டு கச்சாப் பொருள் தனியார் வசம் உள்ளதே விலை ஏற்றத்திற்கு காரணம். சுமார் இரண்டு லட்சம் தொழிலாளர்கள் பாதிக்கப்பட்டுள்ளனர். எனவே 3.5.2022 அன்று தமிழகம் முழுவதும் கைத்தறி பட்டு நிறுவனங்கள், கூட்டுறவு சங்கங்கள், கும்பகோணம், திருபுவனம், ஆரணி, தஞ்சை, பவானி, காஞ்சிபுரம் உள்ளிட்ட பட்டு நெசவு உற்பத்தியாளர்கள், கைத்தறி நெசவாளர்கள் சுற்று சங்கங்கள் உள்ளிட்ட சங்கங்கள் சார்பில் ஒருநாள் கடையடைப்பு, மனித சங்கிலி போராட்டம் நடத்துவது என்று முடிவு செய்யப்பட்டது. கூட்டத்தில் சிஐடியு இ.முத்துக்குமார், ஏஐடியூசி ஆ. மூர்த்தி, எல்.பி.எஃப். கே.எ.இளங்கோவன் க.தங்கவேல், பட்டீஸ்வரம் ராமமூர்த்தி, உற்பத்தியாளர் சங்கம் பெருமாள், பாலாஜி சில்க், கிருஷ்ணா சில்க்ஸ், எம்.பி.சில்க்ஸ் உள்ளிட்ட பல நிறுவனங்கள் கூட்டுறவு சங்க பொறுப்பாளர்கள் கலந்து கொண்டனர்.

# 143 பொருட்களின் மீது ஜிஎஸ்டி வரியை உயர்த்த ஒன்றிய அரசு முயற்சி

## இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி கண்டனம்

கடந்த இரண்டாண்டுகளாக அனைத்து அத்தியாவசியப் பொருட்களின் விலைகளும் கடுமையாக உயர்ந்துள்ளன. குறிப்பாக பெட்ரோல், டீசல், சமையல் எரிவாயு விலைகள் தொடர்ந்து உயர்த்தப்பட்டு வருவதால் மக்கள் வாழ்க்கை நிலை பாதிக்கப்பட்டு வருகின்றன.

இந்த நிலையில் வெல்லம், அப்பளம், சாக்லெட் மற்றும் வீட்டு உபயோகப் பொருள்கள் உட்பட 143 பொருட்களின் மீதான ஜிஎஸ்டி வரியை, ஒன்றிய அரசு பத்து சதவீதம் உயர்த்துவதாக செய்திகள் வெளியாகியுள்ளன. ஏற்கனவே, கொரோனா நோய்த் தொற்று பரவல் நெருக்கடியால் இயல்பு வாழ்க்கை நிலைகுலைந்த நிலையில், ஒன்றிய அரசின் ஜிஎஸ்டி வரி உயர்வு திட்டம் வெந்த புண்ணில் வேல்பாய்ச்சும் செயலாகும். மேலும் மாநில அரசின் நிதியாதாரத்தை பாஜக ஒன்றிய அரசு சட்டபூர்வமாக அபகரித்துக் கொள்வதால், தமிழ்நாட்டிற்கு பெரும் நிதியிழப்பு ஏற்பட்டு வருகிறது. இதன் காரணமாக தமிழ்நாட்டிற்கு வழங்க வேண்டிய இழப்பீட்டு தொகையை வழங்காமல் இழுத்தடித்து, வஞ்சித்து வருகிறது. இழப்பீடு வழங்கும் காலத்தை மேலும் நீடிக்க வேண்டும் என்ற மாநில அரசின் கோரிக்கை மீது ஒன்றிய அரசு மௌனம் காத்து வருகிறது.

தாங்க முடியாத சுமையாக விலைவாசி உயர்வு தொடரும் நிலையில், அதனைக் கட்டுப்படுத்த வேண்டிய ஒன்றிய அரசு, பெரும் பன்னாட்டு நிறுவனங்களுக்கு உதவும் வகையில் மக்கள் தலையில் வரிச்சுமை ஏற்றுவதை கடுமையாக கண்டிக்கிறோம். ஒன்றிய அரசின் வரி உயர்வு எவ்வகையிலும் ஏற்கத்தக்கதல்ல என்பதை சுட்டிக்காட்டி, ஜிஎஸ்டி வரி உயர்வு திட்டத்தை முற்றிலுமாக கைவிட வேண்டும் என இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் தமிழ்நாடு மாநில செயற்குழு பிரதமரையும், ஒன்றிய அரசையும் வலியுறுத்திக் கேட்டுக் கொள்கிறது.

இவ்வாறு மாநில செயற்குழு சார்பில் மாநிலச் செயலாளர் இரா.முத்தரசன் வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறியுள்ளார்.

# செய்தி ஆசிரியர் பார்த்திப மகாராஜன் மறைவு

## இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி இரங்கல்

மூத்த பத்திரிகையாளரும், தினமலர் நாளிதழ் செய்தி ஆசிரியருமான பார்த்திப மகாராஜன் (58) மதுரையில் காலமானார் என்ற துயரச் செய்தி கேட்டு ஆழ்ந்த வேதனை அடைந்தோம். முப்பதாண்டுகளுக்கு மேலாக பத்திரிகை துறையில் சிறப்பாக பணியாற்றிய பார்த்திப மகாராஜன், திண்டுக்கல் மாவட்டம், பட்டிவீரன்பட்டியை சேர்ந்தவர். சில மாதங்களாக உடல்நலம் பாதிக்கப்பட்டிருந்தார். சமூக அக்கறை கொண்ட செய்தியாளரை இழந்து விட்டோம். அன்னாரின் மறைவுக்கு இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் தமிழ்நாடு மாநிலக்குழு ஆழ்ந்த இரங்கலை தெரிவித்துக் கொள்கிறது. அவரைப் பிரிந்து வாடும் அவரது வாழ்விணையர் திருமதி.ரேவதி, மகள் காவ்யா ஆகியோருக்கும், ஊடக நண்பர்களுக்கும் ஆறுதலை தெரிவித்துக் கொள்கிறது. இவ்வாறு மாநிலக்குழு சார்பில் மாநிலச் செயலாளர் இரா.முத்தரசன் வெளியிட்டுள்ள இரங்கல் செய்தியில் கூறியுள்ளார்.

# அரசு மருத்துவக் கல்லூரி மாணவர்கள் கோரிக்கையை ஏற்க வேண்டும்

## இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி வேண்டுகோள்

சிதம்பரம் ராஜா முத்தையா மருத்துவக் கல்லூரி, பல் மருத்துவக் கல்லூரி ஆகியவை 2013ஆம் ஆண்டு முதல் அரசு பல்கலைக் கழகத்தின் கீழ் செயல்பட்டு வருகின்றன. இந்தக் கல்லூரிகள் முன்னர் தனியார் நிர்வாகத்தில் இருந்தது. இங்கு பயிலும் மாணவர்கள் சேரும் போது இளநிலை மருத்துவப் படிப்புக்கு ரூ.5.44 லட்சம், பல் மருத்துவ படிப்புக்கு ரூ.3.59 லட்சம் என கட்டணம் வசூலிக்கப்பட்டது. கல்லூரிகள் அரசுடைமை ஆக்கப்பட்ட பிறகும் அதே கட்டணம் வசூலிக்கப்படுவதற்கு எதிர்ப்பு தெரிவித்து மாணவர்கள் போராடி வருகின்றனர்.

பிற அரசு கல்லூரிகளில் வசூலிக்கப்படும் அளவிற்கு கல்விக் கட்டணத்தை குறைக்க வேண்டும் என்று வலியுறுத்தி வருகின்றனர். இது தொடர்பாக மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர், சட்டமன்றத்தில் பேசும் போது, ஏற்கனவே தனியார் நிர்வாகத்தில் கல்லூரிகள் செயல்பட்ட காலத்தில், நிர்ணயிக்கப்பட்ட கட்டணத்தை செலுத்த மாணவர்கள் ஒப்புதல் தெரிவித்துள்ளனர். அப்படி சேர்ந்த மாணவர்களிடம் பழைய கட்டணமும், புதிதாக சேர்ந்துள்ள மாணவர்களிடம் அரசுக் கல்லூரிகளில் வசூலிக்கப்படும் கட்டணமும் வசூலிக்கப்படுகிறது என்று விளக்கம் கூறியுள்ளார். தவிர்க்க முடியாத நிர்பந்தத்தில் மாணவர்கள் கல்விக் கட்டணம் செலுத்த ஒப்புக் கொண்டதை அரசு நியாயப்படுத்தக் கூடாது. மாணவர்களின் ஏழ்மை நிலையை கருதி அரசின் முடிவை மறுபரிசீலனை செய்து முன்னர் சேர்ந்த பழைய மாணவர்களின் கல்விக் கட்டணத்தையும் அரசு நிர்ணயித்துள்ள கட்டணமாக குறைத்து வசூலிக்க வேண்டும் என்று இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் தமிழ் மாநில செயற்குழு தமிழ்நாடு அரசை வலியுறுத்திக் கேட்டுக் கொள்கிறது.

இவ்வாறு மாநில செயற்குழு சார்பில் மாநிலச் செயலாளர் இரா.முத்தரசன் வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறியுள்ளார்.

## பல்வேறு கோரிக்கைகளை வலியுறுத்தி

# கட்டுமானத் தொழிலாளர்கள் தமிழகம் முழுவதும் ஆர்ப்பாட்டம்







கட்டுமானத் தொழிலாளர் நலவாரியத்தை தன்னாட்சி அதிகாரம் கொண்ட முத்தரப்பு அமைப்பாக செயல்படுத்து, 14.12.2021 தேதிய நலவாரிய கூட்ட முடிவுகளை ஏற்று அரசாணை வெளியிடு, 28.02.2011 தேதிய அரசாணை எண் 36ஐ முன்தேதியிட்டு செயல்படுத்தி, 60 வயது நிறைவடைந்த அனைவருக்கும் நிபந்தனையின்றி ஓய்வூதியம் வழங்கு,

வாரியப் பதிவுக்கு வி.ஏ.ஓ. பரிந்துரை கோருவதை கைவிடு! ஆன் லைன் மூலம் பதிவு செய்தல், புதுப்பித்தல், கேட்பு மனுக்கள் சமர்பித்தலில் உள்ள குறைபாடுகளைப் போக்கு, சொந்த வீடில்லாத அனைத்து கட்டுமானத் தொழிலாளர்களுக்கும் வீட்டு வசதி ஏற்படுத்திட திட்டமியற்று,

தமிழ்நாடு நகர்புற வாழ்விட மேம்பாட்டு திட்டங்களின் கீழ் அமைக்கப்படும் வீடுகளில் கட்டுமானத் தொழிலாளர்களுக்கு முன்னுரிமை அடிப்படையில் ஒதுக்கீடு செய், கட்டுமானத் திட்ட மதிப்பீட்டில் 1% ஆக நிர்ணயிக்கப்பட்டுள்ள நலநிதியை 5% ஆக உயர்த்து,

விபத்து மரண இழப்பீட்டை ரூ.10 லட்சமாகவும் இயற்கை மரண உதவித்தொகையை ரூ.5 லட்சமாகவும் உயர்த்து, ஓய்வூதியத்தை மாதம் ரூ.6,000 ஆக உயர்த்து, பெண் தொழிலாளர்களுக்கு 50 வயதில் ஓய்வூதியம் வழங்கு,

கட்டுமானத் தொழிலாளர் குழந்தைகளின் கல்விச் செலவு முழுவதையும் வாரியமே ஏற்க வேண்டும் அல்லது அதற்கு இணையான அளவுக்கு கல்வி உதவித்தொகை வழங்க வேண்டும், திருமண உதவித் தொகையை ஒரு லட்சம் ரூபாயாக உயர்த்தி வழங்கு, மகப்பேறு காலத்தில் 6 மாதம் சம்பளத்துடன் விடுப்பு அல்லது 60 ஆயிரம் மகப்பேறு உதவித்தொகை வழங்கு, கட்டுமானத் தொழிலாளர்களுக்கு பி.எப், இ.எஸ்.ஐ. திட்டங்களை செயல்படுத்த நடவடிக்கை எடு என்பன உள்ளிட்ட கோரிக்கைகளை வலியுறுத்தி தமிழ்நாடு ஏஐடியுசி கட்டடத் தொழிலாளர் சங்கத்தின் சார்பில் தமிழ்நாடு முழுவதும் ஆர்ப்பாட்டமும், முதல்வருக்கு மனு அனுப்பும் போராட்டமும் நடைபெற்றது.

**ஈரோடு:** ஈரோடு, சூரம்பட்டி நால்ரோட்டில் மாநிலச் செயலாளர் எஸ்.சின்னசாமி தலைமையில் ஆர்ப்பாட்டம் நடைபெற்றது. தமிழ்நாடு ஏஐடியுசி கட்டடத் தொழிலாளர் சங்க ஈரோடு வடக்கு மாவட்ட செயலாளர் எஸ். கந்தசாமி, ஈரோடு தெற்கு மாவட்ட செயலாளர் சி.சுந்தரம், தெற்கு மாவட்ட பொருளாளர் எம்.குணசேகரன், வடக்கு மாவட்ட தலைவர் கே.ஆர்.கிருஷ்ணமூர்த்தி ஆகியோர் கோரிக்கைகளை விளக்கிப் பேசினர். இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் ஈரோடு தெற்கு மாவட்டப் பொருளாளர் எஸ்.டி.பிரபாகரன், ஏஐடியுசி மாவட்டச் செயலாளர் வி.செல்வராஜன், ஏஐடியுசி மாவட்ட துணைத் தலைவர் டி.ஏ.செல்வம் ஆகியோர் போராட்டத்தை வாழ்த்திப் பேசினர்.

மாவட்ட ஆட்சியர் அலுவலகம் சென்று, அங்கு மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (பொது) ஆர்.பாலாஜி அவர்களிடம் கோரிக்கை மனு வழங்கப்பட்டது.

**தருமபுரி:** தருமபுரி மாவட்ட ஆட்சியர் அலுவலகம் முன்பு நடைபெற்ற ஆர்ப்பாட்டத்திற்கு மாவட்ட தலைவர் குழந்தைவேலு தலைமை வகித்தார். கட்டுமான சங்க மாவட்ட செயலாளர் ஆர்.சுதர்சனன், ஏஐடியுசி மாவட்ட பொதுச்செயலாளர் கே.மணி, மாவட்ட துணைத்தலைவர் ஆர்.நடராஜன், உள்ளாட்சி பணியாளர் சம்மேளன மாவட்ட தலைவர் என்.மனோகரன் ஆட்டோ தொழிலாளர் சங்க மாவட்ட செயலாளர் கே.பி.கந்தசாமி, விசைத்தறி தொழிலாளர் சங்க மாவட்ட செயலாளர் வி.பி.சாமிநாதன், கட்டுமான சங்க மாவட்ட பொருளாளர் விஜயா, மாநிலக்குழு உறுப்பினர்கள் மணி, முனியம்மாள், மாதையன் ஆகியோர் கோரிக்கைகளை விளக்கி பேசினர்.

**திருச்சி:** திருச்சி மாவட்ட செயலாளர் சி.செல்வகுமார் தலைமையில், திருச்சி வெஸ்ட்ரி பள்ளியில்ருந்து ஊர்வலம் துவங்கி மாவட்ட ஆட்சியர் அலுவலகம் அருகில் ஆர்ப்பாட்டம் நடத்தி மாவட்ட ஆட்சியரிடம் கோரிக்கை மனு வழங்கப்பட்டது.

ஆர்ப் பாட்டத்தை துவக்கி வைத்து மாநில துணைத் தலைவர் மாமன்ற உறுப்பினர் க.சுரேஷ் உரையாற்றினார். ஆர்ப்பாட்டத்தை விளக்கி அமைப்புசாரா சங்க மாவட்ட தலைவர் ஏ.கே.திராவிடமணி, ஏஐடியூசி மாவட்ட தலைவர் வி.நடராஜா, வங்கி சங்க மாவட்ட பொது செயலாளர் ஜி. ராமராஜ், தரைகடை சங்க தலைவர் எஸ்.சிவா, கட்டட சங்க மாநில குழு உறுப்பினர் எம்.ஆர்.முருகன், மாணவர் மன்ற மாவட்ட செயலாளர் கே.இப்ராகிம் உள்ளிட்ட பல்வேறு தலைவர்கள் ஆர்ப்பாட்டத்தை விளக்கி சிறப்புரையாற்றினர். ஆர்ப்பாட்டத்தில் மாவட்ட துணைத் தலைவர் மருதாம்பாள், மாவட்ட துணை செயலாளர் ஓவியர் வீராச்சாமி, பெண்கள் சங்க மாநிலக்குழு நிர்மலா உள்ளிட்ட 300க்கும் மேற்பட்டோர் ஆர்ப்பாட்டத்தில் கலந்து கொண்டனர்.

**மதுரை:** மதுரையில் நடந்த ஆர்ப்பாட்டத்தில் மதுரை மாவட்ட ஏஐடியூசியின் தலைவரும், இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் மாவட்ட செயலாளருமான எம்.எஸ்.முருகன், கட்டட சங்க மாநில பொருளாளர், மதுரை மாவட்ட செயலாளர் இரா.முருகன், துணை செயலாளர்கள் அலெக்ஸ், நாராயணன், மணிமேகலை, இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் மதுரை மேற்கு பகுதி செயலாளர் ஜனசக்தி என்.ஜீவா பஞ்சாலை சங்கத்தின் லோகநாதன், விளாங்குடிமணி, ரத்தினவேலு உட்பட கட்டட சங்கத்தை சார்ந்த பெண் தொழிலாளர்கள் பலர் கலந்துகொண்டனர்.

**விருதுநகர்:** தமிழ்நாடு ஏஐடியுசி கட்டிட தொழிலாளர்கள் சங்கம் சார்பில் கோரிக்கைகளை வலியுறுத்தி நடை பயணமாக புறப்பட்டு மாவட்ட ஆட்சியர் அலுவலகம் முன்பு ஆர்ப்பாட்டம் செய்தார்கள். மாவட்ட செயலாளர் எம் .நடராஜன் தலைமை வகித்தார். மாவட்ட தலைவர் எ.தங்கராஜ் முன்னிலை வகித்தார். கோரிக்கைகளை விளக்கி சிபிஐ மாநில நிர்வாகக்குழு உறுப்பினர் தி.இராமசாமி எக்ஸ் எம்எல்ஏ, மாவட்ட துணை செயலாளர் எஸ்.பழனிக்குமார், மாநில குழு உறுப்பினர் பாலமுருகன், ஏஐடியுசி மாவட்ட தலைவர் சமுத்திரம் ஆகியோர் பேசினார்கள்.

இடைக்கமிட்டி செயலாளர்கள் சக்கணன், முனியசாமி, ஜீவா, சாமிநாதன், செல்வம் ,நகர செயலாளர் முத்துக்குமார் உள்பட பெண்கள் ஏராளமானோர் கலந்து கொண்டார்கள். ஆர்ப்பாட்டம் முடிந்து நிர்வாகிகள் மாவட்ட ஆட்சியரை நேரில் சந்தித்து கோரிக்கை மனுவை கொடுத்தனர்.

**கோவை:** கோவையில் தமிழ்நாடு ஏ.ஐ.டி.யூ.சி. கட்டிட தொழிலாளர் சங்கத்தின் சார்பில் மாவட்ட ஆட்சியரிடம் மனு கொடுப்பதற்காக நூற்றுக்கணக்கானவர்கள் தங்களது வீடுகளிலிருந்து கொடிகளை பிடித்தபடி மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தை நோக்கி நடந்து வந்தனர். அவர்களை காவல்துறையினர் ஆங்காங்கே தடுத்து நிறுத்தி கைது செய்தனர்.

கோவை மாவட்ட ஆட்சியர் அலுவலகம் முன்பு மனு கொடுக்க திரண்டிருந்த சங்கத்தின் மாநில துணை பொதுச்செயலாளர் என். செல்வராஜ், மேட்டுப்பாளையம் செல்வம், வால்பாறை தனபாண்டியன், எஸ்.பி. தியாகராஜன், ஆர். பாலகிருஷ்ணன் உள்ளிட்டோர் கைது செய்யப்பட்டனர்.

சிவானந்தா காலனியில் இருந்து மனு கொடுக்க புறப்பட்ட சங்கத்தின் செயலாளர் ஜே. கலா, சுமதி, பாப்பாத்தி உள்ளிட்டோர் கைது செய்யப்பட்டனர்.

ராமநாதபுரம் பகுதியில் இருந்து மனு கொடுக்க வந்த சங்கத்தின் கௌரவத் தலைவர் சோமசுந்தரம், சீனிவசன், பரமசிவம், சண்முகம் மனோன்மணி ரத்தினம் அன்பழகி உள்ளிட்டோர் கைது செய்யப்பட்டனர்.

கோட்டை பாளையத்திலிருந்து மனு கொடுக்க புறப்பட்ட கோட்டை நாராயணன் உள்ளிட்டோர் கைது செய்யப்பட்டனர்.

நரசிம்ம நாயக்கன் பாளையத்தில் இருந்து புறப்பட்ட கல்யாணசுந்தரம் ராமகிருஷ்ணன் உள்ளிட்டோர் கைது செய்யப்பட்டனர்.

# வலுவான போராட்டம் மூலம்தான் கோரிக்கைகளை நிறைவேற்ற முடியும்

## இரா.முத்தரசன் பேச்சு

விருதுநகர் முருகன் மகாலில், தமிழ்நாடு மாநில போக்குவரத்து ஏஐடியுசி ஒர்க்கர்ஸ் யூனியன் 12வது ஆண்டுப்பேரவை நடைபெற்றது. மத்திய சங்க தலைவர் பி.இராஜேந்திரன் தலைமை வகித்தார். ஏஐடியுசி சம்மேளன பொதுச்செயலாளர் ஆர்.ஆறுமுகம் தொடக்க உரை நிகழ்த்தினார். பேரவை கூட்டத்தில் கலந்துகொண்டு இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் மாநில செயலாளர் இரா.முத்தரசன பேசியதாவது, தற்போது நடைபெற்ற பொதுவேலைநிறுத்தத்தில் 95சதவீத போக்குவரத்து தொழிலாளர்கள் கலந்து கொண்டு சாதனை படைத்த உளளீர்கள்.இவ் வேலைநிறுத்தம் மக்களையும், அரசையும் கவனிக்க வைத்துள்ளது. பத்திரிக்கைள் எல்லாம் முக்கியத்துவம் கொடுத்து செய்தி வெளியிட்டன. வலுவான இயக்கத்தின் மூலமாகத்தான் கோரிக்கைகளை நிறைவேற்ற முடியும். வலுவான இயக்கம் நடத்த வலுவான அமைப்பை நீங்கள் கட்ட வேண்டும். இவ்வாறு பேசினார்.

சிபிஐ மாநில நிர்வாகக்குழு உறுப்பினர்கள் தி.இராமசாமி எக்ஸ் எம்எல்ஏ, வி.அழகிரிசாமி, மாவட்ட செயலாளர் பி.லிங்கம் எக்ஸ் எம்பி, மாவட்ட துணை செயலாளர் எஸ்.பழனிக்குமார், ஏஐடியூசி மாவட்ட தலைவர் சமுத்திரம் உள்ளிட்டோர் வாழ்த்திப் பேசினர். வேலை அறிக்கையை பொதுச்செயலாளர் பாண்டியன் வாசித்தார். புதிய நிர்வாகிகளாக தலைவர் பி.ராஜேந்திரன், துணைத்தலைவர் களாக மாரியப்பன், பிச்சைகனி, பொதுச்செயலாளராக எஸ்.பாண்டியன், துணை பொதுச் செயலாளர்களாக மூர்த்தி, கருப்பையா ஆகியோர் ஒருமனதாக தேர்வு செய்யப்பட்டனர். தமிழக அரசே 14வதுஊதிய ஒப்பந்தத்தை உடனே தொழிலாளர்களை அழைத்துப்பேசிடு, பணியில் உள்ள தொழிலாளர்களுக்கு அகவிலைப்படி நிலுவையை உடனே வழங்கிடு, சீறுடை மற்றும் தையல் கூலியை உடனே வழங்கிடு உள்ளிட்ட தீர்மானங்கள் ஒருமனதாக நிறைவேற்றப்பட்டன.

## இந்திய வழக்கறிஞர்கள் சங்கம் சார்பில்

# ப.பா.மோகனுக்கு பாராட்டு விழா

கோகுல்ராஜ் கொலை வழக்கில் நெடிய சட்ட போராட்டம் நடத்தி வென்ற வழக்கறிஞர் ப.பா.மோகன் அவர்களுக்கு சென்னையில் இந்திய வழக்கறிஞர்கள் சங்கம் சார்பில் ஒய்.எம்.சி.ஏ. அரங்கில் பாராட்டு நிகழ்வு நடைபெற்றது.

வழக்கறிஞர் கே.தேசிங், ஆர் ரவிசேகரன், கோவை சுப்ரமணியன், மனோகரன், அசோகன், லிங்கன் , ஆர் கிருஷ்ணகுமார், ஆதிமூலம், பியூலா ஜான் செல்வராஜ் , வி அழகிரிசாமி மற்றும் குடந்தை ரெ ராமமூர்த்தி , இஸ்கப் செந்தில் , ஜேம்ஸ் ஆகியோர் கலந்து கொண்டனர்.

தோழர்கள் டாக்டர் ஜி.ஆர்.ரவீந்திரநாத், டாக்டர் ஏ.ஆர். சாந்தி, எஸ்.கே.சிவா, உசேன் பங்கேற்றனர்.

ஓய்வு பெற்ற நீதிநாயகம் அக்பர் அலி, நக்கீரன் கோபால், ஊடகவியலாளர் கார்த்திகைச்செல்வன், ஜனசக்தி த.லெனின், திராவிடர் கழக வழக்கறிஞர் அருள்மொழி ஆகியோர் சிறப்பு அழைப்பாளர்களாக கலந்து கொண்டு வாழ்த்துரை வழங்கினர். ப.பா.மோகன் ஏற்புரை வழங்கி விழாவினை சிறப்பித்தார்.

## இந்த வார தம்பிக்குறள்

### 69. அவதியுறும் பெண்

**குத்திக் கொலைசெய்யூம் கோடானு கோடிய:க்தை**
**சிந்தித்தால் சீறிவிழு மாண்.**

பெண்ணின் உள்ளத்தையும், உடலையும் குத்திக் கொலை செய்யும் ஆண்கள்பலர் உளர். இவன் (குற்றமற்ற) என்னை ஏன் அடிக்க வேண்டும் என்று நினைத்துவிட்டாலும்கூட, ஆண் சீறி விழுவான்.

**நித்தநித்தம் கொத்துகிறான் கொண்டவன் என்றாஅல்**
**நித்திய காரியமென் பர்.**

ஒவ்வொரு நாளும் கணவன் துன்புறுத்கிறானே என்று சொன்னால், இதனை உலகில் நாளும் நடப்பது தானே (இதில் என்ன குற்றம்) என்று சொல்லுவர்.

# வாசகர் டுவிட்

**ஆசிரியர் ஜனசக்தி,**

தமிழகத்தில் மார்க்சிய போக்குகள் பற்றிய தோதாத்ரி அவர்களின் கட்டுரை மார்க்சிய வெளிச்சம் பாய்ச்சுகிறது. “தொழிலாளர்களை பாதுகாப்பதற்கு சட்டப்பேரவையில் தீர்மானம் நிறைவேற்றுக” என்ற ஜனசக்தி தலையங்கம் அருமை.

– **சுந்தரேசன்,** பேரணாம்பட்டு

**ஆசிரியர் ஜனசக்தி,**

“நாளும் ஏறும் பெட்ரோல், டீசல் விலைகள், சமையல் எரிவாயு மற்றும் 800க்கும் மேற்பட்ட மருந்துகளின் விலையும் உயர்ந்துள்ளது. இவை மக்களை மேலும் நெருக்கடிக்கு தள்ளியுள்ளது. இரக்கமற்ற முறையில் மக்களைச் சுரண்டுகிறது. ஒன்றிய அரசின் இத்தகைய இரக்கமற்ற செயலை எதிர்த்து முறியடிக்க களம் காண வேண்டும்” என்று இரா.முத்தரசன் நம்மை அறைகூவி அழைக்கின்றார்.

– **ஏகாம்பரம்,** பள்ளிப்பட்டு

**ஆசிரியர் ஜனசக்தி,**

“கார்ப்பரேட் ஆதரவு, மக்கள் விரோத, தொழிலாளர் விரோத மற்றும் மதவெறி செயல்பாடுகளை எதிர்த்தும் அனைத்து ஆதிக்க நடவடிக்கைகளை எதிர்த்தும் தொழிலாளி வர்க்கம் தொடர்ச்சியாக போராட வேண்டும்” என்ற 2022ஆம் ஆண்டு மே தின சூளுரையை மீண்டும், மீண்டும் படித்து மனதில் நிறுத்த வேண்டும்.

– **பாலமுருகன்,** வைத்தீஸ்வரன் கோவில்

**ஆசிரியர் ஜனசக்தி,**

மத சம்பிரதாயங்களில் ஆத்மாவின் விடுதலைக்கு பக்தி ஒரு மார்க்கமாக இருக்கலாம். ஆனால், அரசியலில் பக்தி அல்ல தனிநபர் வழிபாடு, சீரழிவுக்கு ஒரு நிச்சயமான பாதையாகும். அத்துடன் அது இறுதியில் சர்வாதிகாரத்திற்கு இட்டுச் செல்லும் என்ற டாக்டர் அம்பேத்கர் தீர்க்கமாக கூறியதை தோழர் ஆர்.என்.கே. அவர்களின் கட்டுரை கோடிட்டு காட்டுகிறது.

– **சிங்காரவேலர்,** பாபநாசம்

# பழுதடைந்த நீர்த்தேக்க தொட்டியை அகற்றக் கோரி ஆர்ப்பாட்டம்

திருச்சி மாவட்டம், மணப்பாறை தாலுகா, வையம்பட்டி ஒன்றியம், முகவனூர் ஊராட்சி பாம்பாட்டி பட்டியில் கடந்த 23 ஆண்டுகளுக்கு முன்பு கட்டப்பட்ட மேல்நிலை நீர் தேக்கத் தொட்டி மிகவும் பழுதடைந்து மக்களுக்கு ஆபத்தான நிலையில் உள்ளதை அப்புறப்படுத்தி புதிதாக மேல்நிலை நீர் தேக்கத் தொட்டி அமைக்க கோரி முகவனூர் ஊராட்சி அலுவலகம் முன்பு இந்திய கம்யூனிஸ்ட் கட்சி சார்பில் ஆர்ப்பாட்டம் நடைபெற்றது. ஆர்ப்பாட்டத்திற்கு இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் ஒன்றிய துணை செயலாளர் தங்கராஜ் தலைமை விகித்தார். இராமசாமி, பெரியசாமி, வீரமணி, கண்ணுசாமி, பொன்னர், ஆரோக்கியம், கனகராஜ் ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

ஏ.ஐ.டி.யூ.சி மாவட்ட துணைச் செயலாளர் சுப்பிரமணி, சிபிஐ மணவை நகர செயலாளர் ஜனசக்தி உசேன், வையம்பட்டி ஒன்றிய செயலாளர் சண்முகானந்தம், ஒன்றிய துணை செயலாளர் ஸ்டீபன் சேகர் ஆகியோர் ஆர்ப்பாட்டத்தை விளக்கி உரை நிகழ்த்தினர்.

பாம்பாட்டி பட்டி கிளை மற்றும் ஒன்றிய குழு நிர்வாகிகள் கலந்துகொண்டு ஆர்ப்பாட்ட முழக்கமிட்டனர். சக்தி (எ) பழனிச்சாமி நன்றி கூறினார்.

### கெயில் நிறுவனத்தின்

# எரிவாயு குழாய் அமைப்பதை ரத்து செய்ய வேண்டும்

### விவசாய தொழிலாளர் சங்கம் கோரிக்கை

தருமபுரி மாவட்டத்தில் விவசாயிகளின் சாகுபடி நிலங்களில் கெயில் நிறுவனம் எரிவாயு குழாய் அமைக்க பத்து ஆண்டுகளாக தொடர் முயற்சி செய்து விவசாய நிலங்களை கையகப்படைத்தி வருகிறது. தருமபுரி மாவட்டம், நல்லம்பள்ளி வட்டம், பாலவாடி கிராம ஊராட்சியை சார்ந்த விவசாயி கணேசன் நிலம் 64 செண்டும் கெயில் நிறுவனத்தால் கையகப்படுத்தப்பட்டது. அதனால் கணேசன் இறந்துள்ளார். இதற்கு காரணமான கெயில் நிறுவனத்தின் மீது நடவடிக்கை எடுக்க வேண்டும். உயிரிழந்த விவசாயி குடும்பத்திற்கு ரூ.50 இட்சம் இழப்பீடு வழங்க வேண்டும், தருமபுரி மாவட்டத்தில் கெயில் நிறுவனத்தின் எரிவாயு குழாயினை விவசாயிகள் நிலத்தில் அமைப்பதை ரத்து செய்ய வேண்டும். இதனை ஒன்றிய அரசும், தமிழ்நாடு அரசும் உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று தமிழ் மாநில விவசாய தொழிலாளர் சங்க தருமபுரி மாவட்ட செயலாளர் ஜெ.பிரதாபன் தெரிவித்துள்ளார்.

### உலகப் புத்தக தினத்தை முன்னிட்டு

# கோவையில் சிறப்பு புத்தக கண்காட்சி

ஆண்டுதோறும் ஏப்ரல் 23ம் தேதி உலக புத்தக தினம் அறிவிக்கப்பட்டு கொண்டாடப்பட்டு வருகிறது. இது பொதுமக்கள் மத்தியில் வாசிப்புப் பழக்கத்தை ஏற்படுத்த ஒரு சிறந்த நடவடிக்கையாக கருதப்படுகிறது. கோவையில் மத்திய அரசு நிறுவனமான நேஷனல் புக் டிரஸ்ட் ஆஃப் இந்தியா மற்றும் நியூ செஞ்சுரி புத்தக நிறுவனம் இணைந்து, டவுன் ஹால் மாவட்ட நூலக வளாகத்தில், புத்தக கண்காட்சி நடத்தி வருகின்றனர். நிகழ்ச்சிக்கு மாவட்ட நூலகர் இரா. யுவராஜ் தலைமை தாங்கினார். நியூ செஞ்சுரி புத்தக நிறுவனத்தின் மண்டல மேலாளர் ஆர். ரங்கராஜ் வரவேற்புரை நிகழ்த்தினார். தமிழ்நாடு கலை இலக்கியப் பெருமன்றத்தின் மாவட்ட செயலாளர் ப.பா. ரமணி, எழுத்தாளர்கள் முருகவேல், சு. பாரதிதாசன், ஆசிரியர் பி. சக்திவேல், நூலகர் மணிமேகலை உள்ளிட்டோர் கலந்து கொண்டு சிறப்புரை நிகழ்த்தினார்.



# கிளை செயலாளர்கள் கூட்டம்

மதுரை யா.நரசிங்கம் ஊராட்சி சமுதாய கூடத்தில் கிளை செயலாளர்கள், துணை செயலாளர்கள் கூட்டம் நடைபெற்றது. மாநில செயற்குழு உறுப்பினர் க.சந்தானம் தலைமை வகித்தார். இந்நிகழ்வை மதுரை புறநகர் மாவட்ட செயலாளர் பா.காளிதாஸ் ஒருங்கிணைத்தார். மேலும் கிளை செயலாளர்கள், துணை செயலாளர்கள், நிர்வாகிகள் மற்றும் உறுப்பினர்கள் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

### விஷ்வா தீனதயாளன் மறைவுக்கு

# மெழுகுவர்த்தி ஏந்தி அஞ்சலி

கள்ளகுறிச்சி மாவட்டம் உளுந்தூர்பேட்டையில் விருதாச்சலம் மும்முனை சந்திப்பில் தமிழ்நாடு ஒடுக்கப்பட்டோர் வாழ்வுரிமை இயக்கம் சார்பாக நகர செயலாளர் இரா. நந்தகோபால கிருஷ்ணன் தலைமையில் தமிழ்நாட்டைச் சேர்ந்த இளம் டேபிள் டென்னிஸ் சாம்பியன் விஷ்வா தீனதயாளன் மறைவுக்கு மலர்தூவி மெழுகுவர்த்தி ஏந்தி அஞ்சலி செலுத்தப்பட்டது. இந்த நிகழ்ச்சியில் உதயகுமார், கார்த்திக், அறிவழகன், அருண்குமார், குடியரசு கிருஷ்ணமூர்த்தி உள்ளிட்ட நகர நிர்வாகிகள் கலந்து கொண்டனர். உளுந்தூர்பேட்டை இளைஞர்கள் தமிழ்நாடு ஒடுக்கப்பட்டோர் வாழ்வுரிமை இயக்கம் மாணவர் அமைப்பினர் என ஏராளமானோர் கலந்து கொண்டனர்.

## இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின்

# வட்டார மாநாடுகள்




# பட்டாசு தொழிலை பாதுகாக்க உரிய சட்ட திருத்தம் செய்திடுக!

### சிவகாசி சிபிஐ வட்டார மாநாடு தீர்மானம்

விருதுநகர் மாவட்டம் திருத்தங்கல்லில், இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் சிவகாசி வட்டார மாநாடு நடைபெற்றது. ஜெயபால், கூடலிங்கம் ஆகியோர் தலைமை தாங்கினர். கட்சிகொடியை ஏற்றிவைத்து மாநில நிர்வாகக்குழு உறுப்பினர் தி.இராமசாமி எக்ஸ் எம்எல்ஏ பேசினார். மாநாட்டை தொடங்கி வைத்து மாநில துணை செயலாளர் மு.வீரபாண்டியன் பேசினார். மாவட்ட செயலாளர் பி.லிங்கம் எக்ஸ் எம்பி, மாவட்ட துணை செயலாளர் எஸ்.பழனிக்குமார், மாவட்ட பொருலாளர் க.சமுத்திரம் ஆகியோர் பேசினர். வேலை அறிக்கையை வட்ட செயலாளர் ஆர்.ஜீவா வாசித்தார். வட்டக்குழுவிற்கு 47தோழர்கள் முடிவு செய்யப்பட்டது.

பட்டாசு தொழிலுக்கு ஏற்பட்டுள்ள நெருக்கடியிலிருந்து பாதுகாக்க உரிய சட்ட திருத்தம் செய்ய வேண்டும், திருத்தங்கல், சாட்சியாபுரம் ரெயில்வே மேம்பாலம் பணியை உடனே தொடங்க வேண்டும், ஏற்கனவே சிவகாசி வழியாக இயங்கி வந்த அனைத்து ரெயில்களையும் மீண்டும் இயக்க வேண்டும் என்பன உள்ளிட்ட தீர்மானங்கள் ஒருமனதாக நிறைவேற்றப்பட்டன.

**தென்காசி மாவட்டம்:** கீழ ஆம்பூரில் கிளை மாநாடுகள் நடைபெற்றது. மஞ்சப்பொடி தெரு கிளை மாநாடு மாடசாமி தலைமையில் நடைபெற்றது. இதில் செயலாளராக பி.சமுத்திரவேல், துணை செயலாள்களாக ப.செல்வ அந்தோணி, கிருஷ்ணமூர்த்தி ஆகியோர் ஒருமனதாக தேர்வு செய்யப்பட்டனர். கீழாம்பூர் பெரிய தெரு கிளை மாநாடு ஆர்.ஈஸ்வரன் தலைமையில் நடைபெற்றது. இதில் செயலாளராக ஜி.காசி, துணை செயலாளர்களாக எஸ்.மகேஷ், டி.முத்துப்பாண்டி ஆகியோர் ஒருமனதாக தேர்வு செய்யப்பட்டனர். கீழாம்பூர் கஸ்பா கிளை மாநாடு சட்டநாதன் தலைமையில் நடைபெற்றது. மாநாட்டில் செயலாளராக ஜி.ஹரிஹரன், துணை செயலாள்களாக ப.பாலன், ஏ.சோமசுந்தரம் ஆகியோர் ஒருமனதாக தேர்வு செய்யப்பட்டனர்.

மேற்படி மாநாடுகளில் மாநில குழு உறுப்பினர் எஸ்.வேலாயுதம், மாவட்ட நிர்வாக குழு உறுப்பினர் ஏ.பரமசிவன், மாவட்ட குழு உறுப்பினர் எம்.எஸ்.கிட்டப்பா, ஈஸ்வரன் மற்றும் சட்டநாதன் ஆகியோர் பங்கேற்று மாநாடுகளை சிறப்பாக நடத்தினர்.

**இராஜபாளையம்:** இராஜபாளையத்தில் பிஎம்ஆர் மகாலில், இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் இராஜபாளையம் 25வது நகர் மாநாடு நடைபெற்றது. விஜயலட்சுமி, கோவிந்தன் ,ரமேஷ் ஆகியோர் தலைமைக் குழுவாக தேர்வு செய்யப்பட்டனர். மூத்த தோழர் காளையப்பன் கட்சி கொடியை ஏற்றி வைத்துப் பேசினார். மாவட்ட செயலாளர் பி.லிங்கம் எக்ஸ் எம்பி மாநாட்டை தொடங்கி வைத்துப் பேசினார். மாநில செயற்குழு உறுப்பினர் பி.பத்மாவதி எக்ஸ் எம்எல்ஏ சிறப்புரையாற்றினார்.

நகர செயலாளர் வி.இரவி வேலை அறிக்கை சமர்ப்பித்தார். மாநில நிர்வாககுழு உறுப்பினர்கள் தி.இராமசாமி எக்ஸ் எம்எல்ஏ, வி.அழகிரி சாமி எக்ஸ் எம்பி, மாவட்ட துணை செயலாளர் எஸ்.பழனிக்குமார், ஏஐடியுசி முத்துமாரி, இளைஞர்மன்ற கணேசமூர்த்தி , தவிதொச வரதராஜ், மதுரை மாவட்ட துணை செயலாளர் ராஜலட்சுமி, கிழக்கு ஒன்றிய செயலாளர் இராமச்சந்திரன் ஆகியோர் வாழ்த்திப் பேசினர்.

நகர்குழுவிற்கு 29 தோழர்களும், நிர்வாக குழுவிற்கு 13தோழர்களும் அதில் செயலாளராக பி.கே.விஜயன், துணை செயலாளராக எம்.வேல்ச்சாமி, பொருலாளராக ஆர்.முருகன் ஆகியோர் ஏகமனதாக தேர்வு செய்யப்பட்டனர்.

இராஜபாளையத்தில் புறவழிச்சாலை அமைத்திடு, பாதாள சாக்கடை திட்டத்தில் பழுதடைந்த சாலைகளை செப்பனிடு, ரயில்வே மேம்பாலம் பணியை விரைந்து முடித்திடு என்பன உள்ளிட்ட தீர்மானங்கள் ஒருமனதாக நிறைவேற்றப்பட்டன.

**திருச்சி:** இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் திருச்சிராப்பள்ளி மாநகர் மேற்குப்பகுதி 4வது மாநாடு தென்னூர் அண்ணா நகர் கவிமணி அரங்கத்தில் மூத்த தோழர் தியாகராஜன் கட்சி கொடியேற்றத்துடன் துவங்கியது.

தலைமை குழுவாக துரைராஜ், சுரேஷ் முத்துசாமி ஆகியோர் செயல்பட்டனர். மாநில நிர்வாக குழு முன்னாள் உறுப்பினர் எம். செல்வராஜ் அரசியல் விளக்க உரையாற்றினார். அமைப்புநிலை மற்றும் கட்சியின் முடிவுகள் குறித்து மாவட்ட செயலாளர் திராவிடமணி ஏஐடியுசி மாவட்ட பொதுச் செயலாளர் க. சுரேஷ் சிறப்புரையாற்றினார். மேற்கு பகுதி செயலாளராக சுரேஷ் முத்துசாமி துணை செயலாளர்களாக க. இப்ராஹிம் கே.முருகன் பொருளாளராக பா. ரவீந்திரன் ஏகமனதாக தேர்வு செய்யப்பட்டனர்.

இளைஞர் பெருமன்ற மாவட்ட செயலாளர் வழக்கறிஞர் செல்வகுமார் மாதர் சம்மேளனம் புஷ்பம், மாணவர் பெருமன்ற மாவட்ட தலைவர் பாட்ஷா தமிழ்நாடு ஒடுக்கப்பட்டோர் வாழ்வுரிமை இயக்க செயலாளர் சூர்யா உள்ளிட்டோர் வாழ்த்துரை வழங்கினர்.

திருச்சி மகாத்மா காந்தி அரசு பொது தலைமை மருத்துவமனையில் மருத்துவர் பற்றாக்குறை, மருந்துகள் பற்றாக்குறை, படுக்கைகள் பற்றாக் குறை, மற்றும் சுகாதார சீர்கேடு, அசுத்தமான கழிவறைகள் போன்ற பல்வேறு பிரச்சனைகளால் அரசு பொது மருத்துவமனைக்கு சிகிச்சைக்காக வரும் பொதுமக்கள் மிகவும் சிரமப் படுகின்றனர். எனவே திருச்சி அரசு பொது மருத்துவமனையில் உள்ள குறைகளை சரி செய்ய உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டும்.

திருச்சி உறையூர் மற்றும் தில்லை நகர் பகுதிகளில் அரசு மேல்நிலைப்பள்ளி இல்லாததால் ஏழை எளிய குடும்பப் பின்னணியைச் சேர்ந்த மாணவர்கள் கல்வி தொடர முடியாத நிலை உள்ளது. எனவே உறையூர் பகுதியில் சரியான இடத்தை தேர்வுச் செய்து அரசு மேல்நிலைப் பள்ளியை அமைத்துத் தரவேண்டும் என்று கோரிக்கை முன்வைக்கப்படுகிறது.

**ஸ்ரீவில்லிபுத்தூர்:** கிருஷ்ணன் கோவில் சீனிவாசா திருமண மண்டபத்தில், இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் ஸ்ரீ வில்லிபுத்தூர் வட்ட 29வது மாநாடு நடைபெற்றது. வெள்ளைச்சாமி,பகத்சிங் ஆகியோர் தலைமைக் குழுவாக செயல்பட்டார்கள். கட்சிக் கொடியை ஏற்றி மாநாட்டை தொடங்கி வைத்தும் மாவட்ட செயலாளர் பி.லிங்கம் எக்ஸ் எம்பி பேசினார்.

மாநில நிர்வாககுழு உறுப்பினர் தி.இராமசாமி எக்ஸ் எம்எல்ஏ, மாவட்ட துணை செயலாளர் எஸ்.பழனிக்குமார், நிர்வாககுழு உறுப்பினர்கள் நடராஜன், கோவிந்தன், கணேசமூர்த்தி, தவிதொச வரதராஜன், தவிச சவுந்திரபாண்டியன் ஆகியோர் வாழ்த்தி பேசினர்.

வட்ட செயலாளராக எஸ்.பலவேசம், துணை செயலளராக டி.செல்வம், பொருளாளராக வி. பொன்னுபாண்டியன் எக்ஸ் எம் எல்ஏ ஆகியோர் ஒருமனதாக தேர்வு செய்யப்பட்டனர்.

கிருஷ்ணன் கோவில் தனி ஊராட்சியாக மாற்றிடு, மலைப்பகுதியில் ஆடு, மாடு மேய்க்க அனுமதி வழங்கிடு, வெங்காயத்தை பாதுகாக்க கிட்டங்கி அமைத்திடு, நெல் கொள்முதல் நிலையங்களை கூடுதலாக அமைத்திடு உள்ளிட்ட தீர்மானங்கள் ஒருமனதாக நிறைவேற்றப்பட்டன.

**சாத்தூர்:** இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் சாத்தூர் வட்ட 26வது மாநாடு, கே.மேட்டுப்பட்டியில் நடைபெற்றது. சா.முத்துவைரம், எஸ்.எஸ்.முத்து, எ.எஸ்.சண்முகையா ஆகியோர் தலைமை வகித்தார்கள். மாநாட்டை தொடங்கி வைத்து மாவட்ட துணை செயலாளர் எஸ்.பழனிக்குமார் பேசினார். மாநில நிர்வாககுழு உறுப்பினர் தி.இராமசாமி எக்ஸ் எம்எல்ஏ நிறைவு செய்து பேசினார். வட்டகுழுவிற்கு 19 தோழர்களும், அதில் நிர்வாககுழுவிற்கு 9தோழர்களும், செயலாளராக சா. சுவாமிநாதன், துணை செயலாளராக பி.பாண்டி, பொருலாளராக எம். ஜான்ராஜா ஆகியோர் ஏகமனதாக தேர்வு செய்யப்பட்டார்கள். சாத்தூர் முக்குலாந்தலில் கழிப்பறை வசதி, சாத்தூர் மேலகாந்தி நகரில் பாதாள சாக்கடைக்கு தோண்டிய சாலையை செப்பனிடு, கே.மேட்டுப்பட்டியிலிருந்து மேலமடை கண்மாய்கரை வழியாக நத்தத்துப்பட்டி ரவுண்டானாவரை தரமான சாலை அமைத்திடு, சின்ன ஓடைப்பட்டியில் நியாயவிலைகடை அமைத் திடு உள்பட பல்வேறு தீர்மானங்கள் ஒருமனதாக நிறைவேற்றப்பட்டன.

**விருதுநகர்:** விருதுநகர் தெற்கு ஒன்றிய இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் 2வது மாநாடு ஆர்.ஆர்.நகர் அன்னை திருமண மண்டபத்தில் நடைபெற்றது. காந்திராஜன், ராமசுப்பு ஆகியோர் தலைமை வகித்தனர். மூத்த தோழர் கணபதி கட்சிகொடியை ஏற்றி வைத்தார். மாநாட்டை தொடங்கி வைத்து மாவட்ட செயலாளர் பி.லிங்கம் எக்ஸ் எம்பி பேசினார். மாவட்ட நிர்வாககுழு உறுப்பினர் ஆர்.சக்கணன், தஓவாஇ மாநில குழு உறுப்பினர் முருகேசன், விருதுநகர் நகர செயலாளர் முத்துக்குமார் ஆகியோர் வாழ்த்திப் பேசினர். ஒன்றிய குழுவிற்கு 23தோழர்களும், நிர்வாக குழுவிற்கு 9 தோழர்களும் அதில் செயலாளராக வி.பாலமுருகன், துணை செயலாளராக எ.ராமசுப்பு, பொருளாளராக இராஜேந்திரன் ஆகியோர் ஒருமனதாக தேர்வு செய்யப்பட்டனர். அனைத்து ரெயில்களும் துலுக்கபட்டி ரயில் நிலையத்தில் நின்றுசெல்ல வேண்டும், ஆர்ஆர் நகரில் புதிய பேருந்து நிலையம் அமைத்திடு, அம்மாபட்டி ஆரம்ப சுகாதார நிலையத்திற்கு உரிய மருத்துவர்கள், செவிலியர்களை நியமித்திடு உள்ளிடட தீர்மானங்கள் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டது.

## வாகைக்குளத்தில் சிபிஐ புதிய கிளை துவக்கம்

விருதுநகர் மாவட்டம் திருச்சுழி ஒன்றியம் பரளச்சி வாகைக்குளத்தில் இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் புதிய கிளை துவங்கப்பட்டது. ஒன்றிய செயலாளர் சி.செல்வம், மாவட்ட குழு உறுப்பினர் தங்கராஜ் ,ஒன்றிய நிர்வாககுழு உறுப்பினர் சங்கரபாண்டி ஆகியோர் கட்சி அமைப்புவிதி, மார்க்சீய தத்துவத்தை விளக்கி பேசினார்கள். கிளை செயலாளராக ஞானதாஸ், துணை செயலாளராக ராமதாஸ், பொருலாளராக இருளப்பன் ஆகி யோர் ஏகமனதாக தேர்வு செய்யப்பட்டார்கள்.நியாய விலை கடை திறக்க வேண்டும், புதிதாக திறக்கவுள்ள டாஸ்மாக் கடையை மக்கள் நலன் கருதி திறக்க கூடாது உள்ளிட்ட தீர்மானங்கள் ஏக மனதாக நிறைவேற்றப்பட்டது.

# மாநில அரசே துணை வேந்தர்களை நியமிக்கும் அதிகார சட்ட திருத்தம்

அரசியலமைப்பு அதிகாரத்தின்படி, மாநிலத்தில் மக்கள் பிரதிநிதித்துவ ஆட்சியின் ஆலோசனைப்படி தான் ஆளுநர் செயல்பட வேண்டும். ஆனால் தமிழ்நாடு ஆளுநர் ஆர்.என். ரவியின் செயல்பாடு மக்கள் பிரதிநிதிகள் ஆட்சிக்கு போட்டியாக அமைந்துள்ளது.

சட்டமன்றப் பேரவை ஒரு மனதாக நிறைவேற்றி, ஆளுநரின் ஒப்புதலுக்கு அனுப்பும் மசோதாக்களை கிடப்பில் போட்டு, அரசின் செயல்பாட்டில் இடையூறு செய்யும் வகையில் செயல்பட்டு வருவது நாளுக்கு நாள் அதிகரித்து வருகிறது.

இதன் தொடர்ச்சியாக, நீட் தேர்வு முறையில் இருந்து தமிழ்நாட்டிற்கு விலக்குக் கோரும் தமிழ்நாடு அரசின் முயற்சிகளை தடுத்து, அதனை நிராகரித்து விட்டு நேரடியாக செயல்படுத்தும் முயற்சியில் ஆளுநர் துணை வேந்தர்கள் மாநாடு நடத்துவது அப்பட்டமான அதிகார அத்துமீறலாகும். இதே வழிமுறையில், தமிழ்நாடு ஒரு முகமாக நின்று, எதிர்த்து வரும் ‘‘தேசிய கல்விக் கொள்கையை’’ உயர்கல்வித் துறையில் அமலாக்க முயற்சிப்பது மக்களாட்சி கோட்பாட்டுக்கு எதிரானதாகும்.

## இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி வரவேற்பு

ஆளுநர் அதிகார வரம்பின் எல்லை தாண்டி, கட்சி அரசியல் நடவடிக்கைகளில் ஈடுபடுவதை இனியும் அனுமதிக்க முடியாது என்ற நிலையில், பல்கலைக் கழகங்களின் துணை வேந்தர்களை நியமிக்கும் அதிகாரத்தை தமிழ்நாடு அரசுக்கு வழங்கும் மசோதாவை சட்டப் பேரவையில் அறிமுகப்படுத்தி, ஒரு மனதாக நிறைவேற்றி இருப்பதை இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் தமிழ்நாடு மாநில செயற்குழு வரவேற்கிறது. சட்டப் பேரவை நிறைவேற்றிய துணை வேந்தர்கள் நியமனம் தொடர்பான மசோதாவிற்கு ஆளுநர் உடனடியாக ஒப்புதல் வழங்க வேண்டும் என வலியுறுத்துகிறது.

இவ்வாறு மாநில செயற்குழு சார்பில் மாநிலச் செயலாளர் இரா.முத்தரசன் வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறியுள்ளார்.

# கலை இலக்கியப் பெருமன்ற மதுரை மாவட்ட மாநாடு



தமிழ்நாடு கலை இலக்கியப் பெருமன்றம், மதுரை மாவட்ட அமைப்பின் 12ஆவது மாநாடு மதுரை செந்தமிழ்க் கல்லூரி வைரவிழா அரங்கில் நடைபெற்றது.

மாநாட்டை தொடக்கிவைத்து பேராசிரியர், திறனாய்வு அறிஞர் தி.சு.நடராசன் உரையாற்றினார். கலை இலக்கியப் பெருமன்றத்தின் மாட்டச் செயலாளர் பேராசிரியர் பா.ஆனந்தகுமார் வரவேற்றார்.

மாவட்டத்தலைவர் கவிஞர் மு. செல்லா தலைமை வகித்தார். செந்தமிழ் கல்லூரியின் உதவிப்பேராசிரியர் பூங்கோதை முன்னிலை வகித்தார். மதுரை புரட்சிக் கவிஞர் மன்றத்தின் தலைவர் பி.வரதராசன், தமிழ்நாடு முற்போக்கு எழுத்தாளர்கள் சங்கத்தின் மதுரை நகர் மாவட்டச்செயலாளர் அ.நா.சந்தாராம், நியூசெஞ்சுரி புத்தக நிறுவன மண்டல மேலாளர் அ.கிருஷ்ணமூர்த்தி ஆகியோர் வாழ்த்துரை வழங்கினர்.

தொடர்ந்து நடைபெற்ற கவியரங்கத்தில் கவிஞர் மு.செல்லா தலைமையில் கவிஞர்கள் மூரா, திருநாவுக்கரசன், குமாரிலட்சுமி, அசோக்குமார், அதிவீரபாண்டியன், செல்வராணி ஆகியோர் கலந்து கொண்டு கவிதை வாசித்தனர்.

பிற்பகலில் பேராசிரிய் ந.முத்துமோகன் தலைமையில் கருத்தரங்கம் நடைபெற்றது. இலக்கிய விமர்சகர் ந.முருகேசபாண்டியன், கலகல வகுப்பறை சிவா, முனைவர் மருதுபாண்டியன் ஆகியோர் உரையாற்றினர். பாந்தளூர் வெண்கோழியார் எழுதிய காக்கை விடுதூது நூலுக்கு முனைவர் கி.சிவா உரையெழுதிப் பதிப்பித்த நூல் வெளியீடு நடைபெற்றது. பேராசிரியர் ந.ரத்தினக்குமார் நூலினை வெளியிட, பேராசிரியர். பெரியசாமிராஜா பெற்றுக்கொண்டார். அதனைத் அதனைத் தொடர்ந்து ந.சேகரன் தலைமையில் விருது வழங்கும் விழா நடைபெற்றது. ‘‘நாடகச் செம்மல்’’ விருது பேராசிரியர் அ.சிவக்கண்ணன் அவர்களுக்கும், ‘‘ஓவியக் கவிஞர்’’ விருது ஸ்ரீரசா அவர்களுக்கும், ‘‘பாட்டாளி இலக்கிய விருது’’ பேராசிரியர் கோவேதசாமிநாதன் அவர்களுக்கும், ‘‘மக்களிசைப் பாடகர்’’ விருது கலா பாண்டி அவர்களுக்கும் வழங்கப் பட்டன.

மாவட்ட மாநாட்டை ஒட்டி நடத்தப்பட்ட கல்லூரி மாணக்கர் களுக்கான கவிதைப் போட்டியில் வெற்றிபெற்ற மாணவ, மாணவியருக்கு பரிசும், சான்றிதழும் வழங்கப்பட்டது. இறுதியாக, இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் மதுரை புறநகர் மாவட்டச் செயலாளர் காளிதாஸ் நிறைவுரையாற்றினார். மாவட்டப் பொருளாளர் முனைவர் கி.சிவா நன்றி கூறினார்.




### தமிழ்நாடு கலை இலக்கிய பெருமன்றத்தின்

# திருவாரூர் மாவட்ட சிறப்பு பேரவை

திருவாரூர் மாவட்டம், திருத்துறைப்பூண்டியில் தமிழ்நாடு கலை இலக்கிய பெருமன்றத்தின் மாவட்ட சிறப்பு பேரவை நடைபெற்றது. பெருமன்றத்தின் மாநில துணை தலைவர் வை.செல்வராஜ் பேர வையினை தலைமை ஏற்று நடத் தினார்.

மாநில பொதுச்செயலாளர் முனைவர் இரா.காமராசு பேரவையை துவக்கிவைத்து பேசினார்.மாவட்ட செயலாளர் நீடா ம.சந்திரசேகரன் அறிக்கையினை முன்மொழிந்தார். முன்னதாக பெருமன்றத்தின் கிளை செயலாளர் சி.ராஜேந்திரன் அனைவரையும் வரவேற்று பேசினார். மாவட்ட பொருளாளர் பி.அன்பழகன் இரங்கல் குறிப்பு வாசித்தார். கலை இலக்கிய பெருமன்றத்தின் வைர விழா ஆண்டில் நடைபெறும் திருவாரூர் மாவட்ட சிறப்பு பேரவையினை வை. சிவபுண்ணியம் எக்ஸ்.எம்.எல்.ஏ., எம்.செல்வராஜ் எம்.பி., கே. உலகநாதன் எக்ஸ்.எம்.எல்.ஏ., க.மாரிமுத்து எம்.எல்.ஏ., அ.பாஸ்கர் ஊராட்சி ஒன்றிய பெருந்தலைவர் ஆகியோர் வாழ்த்தினர். கோ.பழனிச்சாமி எக்ஸ். எம்.எல்.ஏ. பேரவையில் நிறைவுரை வழங்கினார்.

டி.பி.சுந்தர், அ.குமரேசன், கூடூர் குணா, கே.சுஜாதா, ஆர்.ஏகாம்பரம், ஏ.தாஜுதீன், மு.வெற்றிசெல்வி, சு. தமிழ்செல்வி உள்ளிட்ட ஏராளமானோர் கலந்து கொண்டனர்.

பேரவையில் செ.அண்ணாதுரை, ம.சந்திரசேகரன், பி.அன்பழகன், கே. சுஜாதா, குரு. செல்வமணி, அ. முரளி, நிலாதரன் ஆகியோர் புதிய பொறுப் பாளர்களாக ஒரு மனதாக தேர்வு செய்யப்பட்டனர்.

### கலை இலக்கிய பெருமன்ற மாநாட்டில் பங்கேற்க

# அமைச்சர் கே.கே.எஸ்.எஸ்.ஆர். ராமச்சந்திரனுக்கு அழைப்பு

விருதுநகர் மாவட்டம் சாத் தூரில் தமிழ்நாடு கலை இலக்கியப் பெருமன்றத்தின் தமிழ்நாடு மாநில 12 வது மாநாடு 2022 மே 20–22 ஆகிய தேதிகளில் நடைபெற உள்ளது.


இம் மாநாட்டில் கலந்து கொண்டு சிறப்புரையாற்றிட வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத்துறை அமைச்சர் கே.கே.எஸ்.எஸ்.ஆர். இராமச் சந்திரன் அவர்களை ஏப்.21 அன்று நேரில் சந்தித்து அழைப்பு விடுக்கப்பட்டது.

இந்த சந்திப்பில் இளைஞர் பெருமன்றத்தின் தமிழ்நாடு மாநில முன்னாள் பொதுச் செயலாளர் வி.பாலமுருகன், இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் தமிழ்நாடு மாநில நிர்வாகக்குழு உறுப்பினர் வி.அழகிரிசாமி எக்ஸ்.எம்.பி., சமூக சமத்துவத்திற்கான டாக்டர்கள் சங்கத்தின் மாநிலத் தலைவர் டாக்டர் த.அறம், பொதுச் செயலாளர் டாக்டர் ஜி.ஆர். இரவீந்திரநாத் ஆகியோர் இடம் பெற்றனர்.

### பணி நீக்கம் செய்யப்பட்ட மினி கிளினிக் பணியாளர்கள்

# இரா.முத்தரசனுடன் சந்திப்பு

பணி நீக்கம் செய்யப்பட்ட மினி கிளினிக் பல்நோக்கு மருத்துவமனை பணியாளர்களின் சங்க மாநில நிர்வாகிகள், இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் தமிழ்நாடு மாநிலச் செயலாளர் இரா.முத்தரசன் அவர்களை சென்னையில் கட்சியின் மாநில தலைமையகமான பாலன் இல்லத்தில் சந்தித்து பேசினர். சங்கத்தின் கௌரவத் தலைவர் டாக்டர் ஜி.ஆர்.இரவீந்திரநாத், தமிழ்நாடு மருத்துவத்துறை பணியாளர்கள் கூட்டமைப்பின் பொதுச் செயலாளர் டாக்டர் ஏ.ஆர்.சாந்தி ஆகியோர் உடன் இருந்தனர்.




# பெட்ரோல் டீசல் கேஸ் விலை உயர்வை கண்டித்து ஆர்ப்பாட்டம்!

தென்காசி மாவட்டம் சிவகிரியில் பெட்ரோல், டீசல், கேஸ் விலை உயர்வுக்கு காரணமான ஒன்றிய அரசை கண்டித்து சிவகிரி நகர செயலாளர் பி.பாலசுப்பிரமணியன் தலைமையில் கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெற்றது. இதில் இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் மாவட்ட செயலாளர் த.இசக்கித்துரை, ஏஐடியூசி மாவட்ட செயலாளர் சுப்பையா, விவசாய சங்கம் ராஜேந்திரன், கருப்பையா, மாவட்ட நிர்வாக குழு சிங்காரவேலு, பேரூராட்சி உறுப்பினர் அருணாசலம், விதொச வேல்சாமி, ஏஐடியூசி வேல்முருகன், கண்ணன், மாதர் சங்க சண்முகவடிவு மற்றும் ஏராளமான தோழர்கள் கலந்து கொண்டு கண்டன உரையாற்றினர்.

### பீடித் தொழிலாளர்களுக்கு விரைவில்

# புதிய ஊதிய ஒப்பந்தம்!

## ஏஐடியுசி வலியுறுத்தல்

கொங்கு மண்டல ஐக்கிய பீடித் தொழிலாளர் சங்க (ஏஐடியுசி) விரிவுபட்ட நிர்வாகக்குழு கூட்டம் ஈரோட்டில் சங்க துணைத் தலைவர் கே.எம்.யூசுப் தலைமையில் நடைபெற்றது.

கூட்டத்தில் சங்க பொதுச் செயலாளரும், ஏஐடியுசி மாநிலச் செயலாளருமான எஸ்.சின்னசாமி உரையாற்றினார். இக்கூட்டத்தில் பின்வரும் தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன:

தமிழக பீடித் தொழிலாளர்களின் ஊதிய ஒப்பந்தம் கடந்த 14. 05.2019 தேதியோடு காலாவதி ஆகிவிட்டது. மூன்றாண்டுகள் ஆகியும் நாளதுவரை புதிய ஊதிய ஒப்பந்தம் ஏற்படவில்லை. இதனால் லட்சக்கணக்கான பீடித் தொழிலாளர்கள் ஊதிய இழப்புக்கு ஆளாகி பாதிக்கப்பட்டு வருகின்றனர். எனவே சென்னையில் தொழிலாளர் துறை அதிகாரிகள் முன்னிலையில் நடைபெற்றுவரும் பேச்சு வார்த்தையை விரைவில் முடித்து ஊதிய ஒப்பந்தம் ஏற்படுத்த தமிழக அரசு உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டும்.

இக்கூட்டத்தில் சங்கத் துணைத் தலைவர்கள் எஸ்.மெகரூன், ஏ.ஜிலானி, செயலாளர்கள் கே.எச்.அசரப் அலி, எம்.ராஜவேல் உள்ளிட்ட நிர்வாகிகள் பங்கேற்றனர்.

### மணப்பாறை மையப்பகுதியில்

# அரசு கலை அறிவியல் கல்லூரி அமைத்திடுக!

## இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி கோரிக்கை

மணப்பாடு கோவில்பட்டி சாலையில் உள்ள ஆர்.வி.பி. மன்றத்தில் இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் மணப்பாறை ஒன்றியம், வையம்பட்டி ஒன்றியம், மருங்காபுரி ஒன்றியம், மணப்பாறை நகரம் ஆகிய இடைக் குழுக்கள் கூட்டம் நடைபெற்றன.

இக்கூட்டத்திற்கு இந்திய கம்யூனிஸ்ட் கட்சி நகர்மன்ற உறுப்பினர் தங்கமணி தலைமை வகித்தார். நகர செயலாளர் ஜனசக்தி உசேன், ஒன்றிய செயலாளர் தங்கராசு, வையம்பட்டி ஒன்றிய செயலாளர் ஏ.டி.சண்முகானந்தம், மருங்காபுரி ஒன்றிய செயலாளர் வெள்ள கண்ணனு ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

திருச்சி புறநகர் மாவட்ட செயலாளர் த.இந்திரஜித் மே தின அரசியல் உரை நிகழ்த்தினார்.


மணப்பாறை தொகுதிக்கு அரசு அறிவித்துள்ள கலை அறிவியல் கல்லூரி மணப்பாறை மையப் பகுதியில் அமைக்க வேண்டும். இந்த ஆண்டு கல்லூரியை மணப்பாறை அரசு மேல்நிலைப் பள்ளியில் தொடங்கிட வேண்டும் என்பன உள்ளிட்ட பல்வேறு தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

புறநகர் மாவட்ட துணை செயலாளர் ஆர். பழனிச்சாமி, மாவட்ட குழு உறுப்பினர்கள், மற்றும் அனைத்து இடைக்குழு நிர்வாகிகளும் கலந்து கொண்டனர்.

## நான் இந்துவல்ல நீங்கள்...?

யார் இந்து என்கிற ஒரு கேள்வி எழுமானால், யார் இஸ்லாமியர்கள் அல்லவோ, யார் கிறிஸ்தவர் அல்லவோ,யார் பார்சி அல்லவோ அவர்கள் அனைவரும் இந்துக்கள். என இந்துக்கள் பற்றி அரசியல் சாசனம் வரையறுக்கப்படுகிறது.

யார் மனிதர்கள் என்கிற கேள்விக்கு, இன்னார்தான் மனிதர் என்று சொல்லாமல். யார் ஆடு அல்லவோ, யார் மாடு அல்லவோ, யார் குதிரை அல்லவோ அவை எல்லாம் மனிதர்கள் என்று சொல்வதை போல் உள்ளது. இப்படித்தான் இந்தியாவில் இருக்கிற பலரும். இந்து என்ற ஜாடிக்குள் அடைக்கப்படுகிறார்கள். இந்து என்ற சொல். இந்தியாவிலேயே பிறந்த வேதங்களிலோ, உபநிடதங்களிலோ, உபநிஷதங்களிலோ, பிரமாணங்கள் என்று சொல்லக்கூடிய வேறு வகையான பழைய இலக்கியங்களிலோ இல்லை, இதிகாசங்களிலும் கிடையாது. இந்த சொல் பதினெட்டாம் நூற்றாண்டின் நடுப்பகுதியில் ஐரோப்பாவில் அதாவது கீழ்த்திசை நாடுகளை பற்றி ஆராய வந்தவர்கள் பயன்படுத்திய சொல். இந்திய மொழிகளில் எந்த மொழியிலும் இந்து என்ற சொல்லுக்கு வேர்ச் சொல்லே கிடையாது.




இதைத்தான் மறைந்த சங்கராச்சாரியார் “வெள்ளைக்காரன் வந்து நமக்கு இந்து என்று பொதுப்பெயர் வைத்தானோ இல்லையோ, நாம் பிழைத்தோம்“ என்று தெய்வத்தின் குரல் என்னும் நூலில் சொல்கிறார். நம்முடைய நாட்டிலே என்ன வகையான பழைய இனப்பாகுபாடு எனக்கேட்டால். ஆரிய என்ற ஒரு சொல் இருக்கிறது. திராவிட என்று ஒரு சொல் இருக்கிறது.இந்த சொற்கள் இரண்டும் இரண்டு மொழி குடும்பங்களை சார்ந்த மக்களை குறிப்பிடுவதாகும் .

தமிழ்நாட்டில் மதச் சிறுபான்மை சமூகங்களுடைய உருவாக்கும் என்ன?.வட இந்தியாவை போல அல்ல இங்கே, மிகப்பெரிய கலைச்செல்வங்கள் உடைய கோவில்கள் இருக்கின்றனவே, இவற்றின் மீது இவற்றை உருவாக்கி விட்டு இன்றைக்கு வேறு மதத்திற்கு போன மக்களுக்கு ஒரு பங்கு இருக்கிறது அல்வா?அப்படியானால் அவர்கள் இதையெல்லாம் விட்டுவிட்டு ஏன் போனார்கள். அவர்கள் போகவில்லை அவர்கள் துரத்தப்பட்டார்கள் என்பதுதான் உண்மை. இந்து என்கிற பண்பாட்டு மாயையிலிருந்து நமக்கு விடுதலை கிடைத்தால். அவரவர் தெய்வங்களை அவரவர் நிம்மதியாக வணங்கி விட்டுப் போவார்கள் என தொ. பரமசிவன் தனது நேர்காணலில் குறிப்பிட்டிருக்கிறார் இதுவே இந்நூலின் சாரமாகும். இன் நூலை அனைவரும் வாங்கிப் படிக்கவும்.

**– சமரன்**

**நூலாசிரியர் : தொ. பரமசிவன்**
**வெளியீடு : நியூ செஞ்சுரி புக் ஹவுஸ், 41–பி, சிட்கோ இன்டஸ்ட்ரியல் எஸ்டேட், அம்பத்தூர், சென்னை 50**
**பக்கங்கள் : 20 விலை : ரூ.20**

# நூல் நயம்

## தோழர் தா.பாண்டியனின் தன் வரலாற்றுக் குறிப்புகள்

இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் முதுபெரும் தலைவர் தோழர் தா.பாண்டியன் அவர்கள் பல்வேறு சந்தர்ப்பங்களில், பல நூல்களில் எழுதிய, பேசிய தன் வரலாற்று குறிப்புகளை அம்மாசத்திரம் சரவணன் அவர்கள் தொகுத்துள்ள நூல் இது. கேட்போரை பினிக்கும் வகையில் ஆற்றொழுக்கான பேசும் வல்லமை உடையவர் தோழர் தா.பாண்டியன் அவர்கள். அவரது பேச்சின் இனிமை போலவே, படிப்போரை கவர்ந்திழுக்கும் காந்த தன்மையுடன் கூடிய எழுத்து ஆற்றல் படைத்தவர். மதுரை மாவட்டம் உசிலம்பட்டி அருகில் உள்ள வெள்ளைமலை ப்பட்டி என்கிற குக்கிராமத்தில் பிறந்து. தமிழ்நாட்டு அரசியலில் சிகப்பு சூறாவளியாக பரிணமித்தவர் தோழர் தா. பாண்டியன்.




அவரது முதல் பேச்சில் “பாருக்குள்ளே நல்ல நாடு பாரத நாடு. இந்த நாட்டை அந்நியர்கள் அடிமைப்படுத்தி ஆண்டதை எதிர்த்து வாளெ டுத்து போராடி மடிந்தார்கள் பூலித்தேவனும், கட்ட பொம்மனும். அதே மண்ணில் தமிழ்நாட்டில் பிறந்த புரட்சிக் கவிஞர் பாரதியார் வாளினும் கூரான கவிதை படைத்து வெள்ளையர் படைகளை உடைக்க எட்டயபுரத்தில் பிறந்தார்” எனப் பேசி அனைவரின் பாராட்டுகளைப் பெற்றார்.

காரைக்குடியில் கட்சி கூட்டத்தில் பேச வந்திருந்தார் ஜீவா. அப்பொழுது அவர் தமிழ்நாடு சட்டமன்ற உறுப்பினர். 1953 இல் காரைக்குடியில் நடந்த அந்தக் கூட்டத்தில்தான் ஜீவாவை அறிமுகம் செய்து வைக்கிறார்கள் தோழர்கள் . இந்தக் கூட்டம் தான் இவரை தமிழ்நாடு கலை இலக்கியப் பெருமன்றத்தின் மாநிலச் செயலாளராக பொறுப்பு ஏற்க அச்சாரம் இடுகிறது. “எல்லா நூல்களையும் கசடறக் கற்று. முழுமையாக உள்வாங்கிக் கொண்டு மிகச் சிறந்த நூலை எழுத வேண்டும் என்று நீ நினைத்தால் அது என்றைக்குமே சாத்தியமாகாது. ஆகவே, இதுவரை கற்று என்ன புரிந்துக் கொண்டாயோ, அதை இதுவரை உன்னைப்போல் கற்க வாய்ப்பில்லாத,கோடான கோடி மக்கள் இருக்கிறார்களே அவர்களுக்காக. அவர்களுக்கு புரியும்படி நீ எழுத வேண்டும் வேண்டும்“ என அவரது அண்ணன் பேராசிரியர் செல்லப்பாவின் அறிவுரைக் கிணங்க எளிமையாகவும், இனிமையாகவும் எழுதத் தொடங்கினார். இந்த நூலில் தோழர் தா பாண்டியன் சந்தித்த தலைவர்கள். அவர்களுடன் நடந்த சுவாரஸ்யமான சம்பவங்கள். ராஜீவ் காந்தியின் படுகொலையில் நடந்த துன்பியல் நிகழ்வுகள் என அனைத்தும் பதிவு செய்யப்பட்டுள்ளது. இந்நூலை அனைவரும் வாங்கிப் படிக்க வேண்டுகிறோம், **– இன்சுவை பாரதி**

தொகுப்பாசிரியர் : அம்மாசத்திரம் சரவணன்
**வெளியீடு : நியூ செஞ்சுரி புக் ஹவுஸ், 41பி, சிட்கோ இன்டஸ்ட்ரியல் எஸ்டேட், அம்பத்தூர், சென்னை 50**
**பக்கங்கள் : 134 விலை: ரூ.110**


**வாரம் தோறும் வெளிவரும்**
**ஜனசக்தி - நூல் நயம்**
**புத்தக விமர்சன பகுதிக்கு அனைத்துப் பதிப்பகங்களின் புத்தகங்களும் வரவேற்கப்படுகின்றன. புத்தகங்களை அனுப்புவோர் 2 பிரதிகள் அனுப்ப வேண்டும்.**
**தொடர்புக்கு : 8220468816**

**அனுப்பவேண்டிய முகவரி:**
**ஜனசக்தி**
**பாவை பிரிண்டர்ஸ் மாடி 142/16 ஜானி ஜான்கான் ரோடு, இராயப்பேடடை, சென்னை - 600014**

**சுழலும் உலகம்** — **செய்தித்தொகுப்பு: அருண் அசோகன்**

# அரசியல் கட்சிகள் வர்க்கப் பிரதிநிதித்துவ அமைப்புகளே!

## பாகிஸ்தான் கம்யூனிஸ்ட் கட்சி திட்டவட்டம்



இம்ரான்கான் அரசாங்கத்திற்கு மோசமான முறையில் முடிவு கட்டப்பட்டது. நாடாளுமன்ற ஜனநாயகம் எனும் புறத்தோற்றத்தின் வழியாக பாகிஸ்தானில் ஒரு புதிய ஏற்பாடு நிறுவப்பட்டுள்ளது. எனினும், அரசியல் நெருக்கடிக்கு தீர்வு காணப்படவில்லை.

தொழிலாளர்களுக்கு குறைந்தபட்ச ஊதியம் ரூ.25,000 என்று ஷெபாஸ் அரசாங்கம் அறிவித்துள்ளது. இந்தத் தொகை மிகவும் சொற்பமானதாகும். பாகிஸ்தானின் ஒவ்வொரு சராசரி குடிமகனும் அன்றாட வாழ்நிலையில் எதிர்கொண்டு வரும் கட்டுக்கடங்காத பணவீக்கத்தின் முன் இந்தக் குறைந்தபட்ச ஊதிய உயர்வு பயனற்றதாகும். மாதம் ரூ.50,000 ஊதியம் பெறுபவர்களும்கூட அத்தியாவாசியப் பொருட்களின் விண்ணை முட்டும் விலை உயர்வை சமாளித்திட இயலாமல் திண்டாடுகிறார்கள். இந்தச் சூழலில், அதிகரித்து வரும் பணவீக்கத்தைக் கட்டுப்படுத்துவது சாத்தியமற்றதாக இருக்கிறது. பாகிஸ்தானில் தொழிலாளர்களுக்கான ஊதியக் கொள்கையை நடைமுறைப்படுத்துவது என்பது நிறைவேறாத ஒரு கனவாகவே இன்றும் தொடர்கிறது; அரசாங்கத்தின் கட்டுப்பாட்டின் கீழ் இயங்கி வரும் அமைப்புகளும்கூட ஊதியக் கொள்கையை நடைமுறைப்படுத்த மறுத்து வருகின்றன. வலுவான தொழிலாளர் சட்டங்கள் இல்லாத காரணத்தால், இதுபோன்ற தெளிவான விதிமீறல்களும், காலதாமதப்படுத்தும் தந்திரங்களும் தொடர்கின்றன. அந்த அமைப்புகளின் தலைமைப் பொறுப்புளில் உள்ளவர்களும் செயல்படாமல் இருக்கின்றனர். உழைக்கும் வர்க்கத்தின் அமைப்பு ரீதியான போராட்டத்தின் மூலம் மட்டுமே உரிய குறைந்த பட்ச ஊதிய கொள்கையை நடைமுறைப்படுத்த முடியும்.

பாகிஸ்தானைச் சூழ்ந்துள்ள அரசியல், பொருளாதார நெருக்கடிகள் காரணமாக நாட்டின் பொருளாதாரம் சர்வதேச நிதியத்திடம் (மிவிதி) அடகு வைக்கப்பட்டுள்ளது. நிவாரணம் கிடைக்கும் என்ற சிறு நம்பிக்கையை கூட, இதுபோன்ற சூழல், சாமானிய மக்களுக்கு எவ்வாறு அளித்திட இயலும்?

பொருளாதார நெருக்கடி தொடர் விளைவுகளை உருவாக்கி வருகிறது; அரசியல் குழப்பங்களுக்கு வித்திடுகிறது. அதன் திரட்சியான விளைவாகவே ஒட்டுமொத்த தேசமும் நெருக்கடிக்கு உள்ளாகி வருகிறது.

பாகிஸ்தானின் தற்போதைய மோசமான சூழல் குறித்த, வெளிப்படையான விவாதத்தைப் பாகிஸ்தான் கம்யூனிஸ்ட் கட்சியின் அரசியல் தலைமைக்குழு மேற்கொண்டது. அக்கூட்டத்திற்கு பிறகு கட்சியின் பொதுச் செயலாளர் தோழர் இம்தாத் குவாசி பத்திரிகைகளுக்கு வெளியிட்ட செய்திக்குறிப்பில் கூறியிருப்பதாவது:

ஆளும்வர்க்கக்குழுக்களிடையேநிலவும்மோதல்போக்கு நாட்டை சட்டம் ஒழுங்கற்ற நிலையின் உச்சகட்டத்திற்கு கொண்டு சென்றுள்ளது; உலக ஏகாதிபத்திய சக்திகளின் உத்தரவுகள் மற்றும் சூழ்ச்சிகளுக்கு இரையாகி நாடு பிளவுபட்டுள்ளது.

இறையாண்மையை இழந்த ஒரு தேசமாக பாகிஸ்தானை ராணுவ தளபதிகள் கீழ்நிலைக்குத் தள்ளியிருக்கிறார்கள். அதற்கான பலனையும் அவர்கள் அறுவடை செய்து வருகிறார்கள். அவர்களின் குடும்பத்தினர் மற்றும் உறவினர்கள் ஐரோப்பா மற்றும் அமெரிக்காவில் ஆடம்பர வாழ்வை வாழ்ந்து வருகிறார்கள்; தொழிற்துறை சாம்ராஜ்ய சக்கரவர்த்திகளாக கோலோச்சி வருகிறார்கள்.

மக்கள் நலன் மற்றும் முன்னேற்றத்திற்காக உழைத்திட வேண்டும் எனும் லட்சிய நோக்குடைய தன்னலமற்ற அரசியல் துறையாரும், பொதுமக்கள் சேவையே புனிதமிக்க அரசியல் எனும் நிலைப்பாடு கொண்டோரும் நிலைபற்றி நின்றிட ஒருபோதும் அனுமதிக்கப்படுவதில்லை. அத்தகையோர் மிகவும் கொடூரமாகச் சித்திரவதைக்கு உள்ளாக்கப்பட்டு கொல்லப்படுகிறார்கள். அந்தச் சித்திரவதைகளையும் தாங்கிக் கொண்டு உயிர் பிழைத்தவர்கள் மனநிலை பிறழ்வால் பாதிக்கப்படுகிறார்கள். மீதமுள்ளவர்கள் பலவந்தமாக நாடு கடத்தப்படுகிறார்கள்.

மாணவர் மன்றங்கள் தடை செய்யப்பட்டுள்ளன. எனவே, அனுபவத் திரட்சியும், மக்கள் ஆதரவும் பெற்ற அரசியல் செயல்வீரர்களையும், தலைவர்களையும் உருவாக்கும் செயல்முறைகளும் சீர்குலைந்து போயின. இதுபோன்ற சீரழிவுப் போக்குகளால் உருவான சூழலை இம்ரான்கான் தனக்கு சாதகமாகப் பயன்படுத்துகிறார். மேற்கத்திய மற்றும் அமெரிக்க ஏகாதிபத்தியத்திற்கு எதிராக இடதுசாரிகள் கட்டமைத்து வரும் உணர்வு போதத்தை இம்ரான்கான் தன்வயப்படுத்திக் கொள்ளவும், ஏகாதிபத்திய எதிர்ப்பு உணர்வுகளை தனக்கு சாதகமாகப் பயன்படுத்திக் கொள்ளவும் முயலுகிறார். அவர் ஆட்சி அதிகாரப் பொறுப்பில் இருந்தபோது, முக்கியத்துவம் வாய்ந்த பொருளாதார மற்றும் நிதி அமைப்புகளின் நிர்வாக மேலாண்மையை மக்களால் தேர்ந்தெடுக்கப்படாத பாகிஸ்தான் – அமெரிக்க குடியுரிமை பெற்ற தனிநபர்களிடம் ஒப்படைத்தார். அவர்களே தேசத்தின் பொருளாதாரத்தைப் பேரழிவுப் பாதைக்கு கொண்டு சென்றவர்கள் ஆவர். அதன் விளைவாக, தேசம் சர்வதேச நிதியத்தின் கடன் வலைக்குள் சிக்கியுள்ளது. அடுத்து நிகழ உள்ள பல தசாப்தங்களிலும் தேசம் அந்தக் கடன் வலையில் சிக்குண்டு சீர்குலைய இருப்பதும் சாத்தியமாகி உள்ளது.

தங்களின் ஆடம்பர வாழ்க்கைக்குத் தேவையான நிதி வசதி தற்போது பற்றாக்குறையில் இருப்பதை ஆளும் வர்க்கம் உணர்ந்துள்ளது. தேசத்தின் பொருளாதார நிலைமை வர்ணிக்க முடியாத அளிவிற்கு வீழ்ச்சி அடைந்துள்ளதாக பாகிஸ்தான் கம்யூனிஸ்ட் கட்சி உறுதிபட கருதுகிறது. பொதுமக்கள் நலன் குறித்த அக்கறை ஏதும் தென்படவில்லை. ஆளும் வர்க்கத்தைச் சார்ந்த அரசியல் மற்றும் அரசியல் சார்பற்ற இத்தகைய பிரிவினரிடம் வெகுமக்கள் எவ்வகை நன்மையையும் எதிர்பாராமல் இருப்பதே சிறப்பாகும். இவர்கள் சாமானிய மக்களின் வாழ்வில் மகிழ்ச்சியை உண்டாக்கும் திறம்பெற்றார் இல்லை. பணவீக்கம் மற்றும் வேலைவாய்ப்பின்மை ஆகிய நீண்ட கால பிரச்சினைகளுக்கு இவர்களால் தீர்வு காண முடியவில்லை.

**வளமை மற்றும் முன்னேற்றத்திற்கான பாதையில் நாட்டைச் செலுத்துவார்கள் என்று ஆளும் முதலாளித்துவ வாதிகள் மற்றும் சுரண்டல் பேர்வழிகளிடம் எதிர்பார்ப்பது மூடநம்பிக்கையாகும். அரசியல் என்பது வர்க்க அடிப்படை கொண்டது, அரசியல் கட்சிகள் வர்க்கப் பிரதிநிதித்துவ அமைப்புகளே என்பதை வெகுமக்கள் உணரவேண்டிய காலம் வந்து விட்டது. தற்போது உள்ள நாடாளுமன்ற ஜனநாயக அரசியல் கட்சிகள் செல்வந்தர்கள், நிலப்பிரபுக்கள் மற்றும் முதலாளிகளின் பிரதி–நிதிகளாக உள்ளனர். அரசியல் அதிகாரத்தைக் கைப்பற்றிட இவர்கள் எவ்வித கீழ்த்தரமான எல்லைக்கும் செல்லக்கூடியவர்கள்.**

தன்னலம் கொண்ட ராணுவத் தளபதிகளும் கால ஓட்டத்தில் ஒரு வர்க்கமாகப் பரிணமித்துள்ளார்கள். மேற்படி குழுக்கள் மற்றும் வர்க்கங்கள் அனைத்தும் தங்களின் தேர்தல் ஆதாயத்திற்காக, வெகுமக்கள் எதிர்கொண்டு வரும் பிரச்சினைகள் குறித்து வெறும் வார்த்தை ஜாலத்தில் ஈடுபடுகின்றன.

அனைத்துவித சுரண்டல் சக்திகளுக்கும் எதிரான, புரட்சிக்கு வெகுண்டெழுவதைத் தவிர வேறு தீர்வு எதுவும் இல்லை. சோசலிசத்தை நிர்மாணித்திட, உழைக்கும் வர்க்கத்தின் ஆட்சியை நிறுவிட புரட்சி ஒன்றே பாதை அமைத்திடும். சோசலிசம் மட்டுமே கட்டணமில்லா கல்வி, சுகாதாரம் மற்றும் வேலைவாய்ப்பை உறுதிபடுத்தக் கூடிய உண்மையானதொரு மக்கள் நல அரசை வழங்கிட முடியும். சோசலிச அரசில் மட்டுமே தேசத்தின் வளங்கள் மக்களின் மேம்பாடு மற்றும் நல்வாழ்விற்குப் பயன்படுத்தப்படும்.

சுரண்டப்படுவோரின் விடுதலையானது கொள்ளையர்களையும், ஏகாதிபத்திய கைகூலிகளையும், சர்வாதிகாரிகளையும் புறந்தள்ளி, அவர்களுக்கு எதிரான வர்க்கப் போராட்டதை ஏற்று நடத்துவதில் அமைந்துள்ளது.

மக்களின் பிரச்சனைகளுக்காகப் போராட்டங்களை முன்னெடுக்கும், அவர்களின் உண்மையான உரிமைக் குரலாக ஒலிக்கும் அரசியல் கட்சிகளுக்கு ஆதரவாக அணிதிரளுமாறு தொழிலாளர்கள், விவசாயிகள், பெண்கள், மாணவர்கள் மற்றும் வெகுமக்கள் ஆகியோருக்கு பாகிஸ்தான் கம்யூனிஸ்ட் கட்சி அறைகூவல் விடுக்கிறது.

இவ்வாறு அந்த செய்திக்குறிப்பில் கூறப்பட்டுள்ளது.

### தமிழ் மாநில விவசாய தொழிலாளர்கள் சங்கம் சார்பில்

# வேலை நாட்களை 200 நாட்களாக உயர்த்திட கோரி ஆர்ப்பாட்டம்!



மகாத்மா காந்தி வேலை உறுதியளிப்பு திட்டத்தில் 100 நாள் வேலையை 200 நாட்களாக உயர்த்த வேண்டும், தின ஊதியமாக ரூ.600 வழங்க வேண்டும்,

ஒன்றிய அரசு ஏப் 1 முதல் அறிவித்த தின ஊதியம் ரூ.281 ஐ குறைக்காமல் வழங்க வேண்டும்,

வேலை நேரம் 7:00 என்பதை 9 மணியாக மாற்ற வேண்டும் என்ற கோரிக்கைகளை வலியுறுத்தி தமிழ்நாடு முழுவதும் தமிழ் மாநில தொழிலாளர் சங்கத்தின் சார்பில் பெருந்திரள் ஆர்ப்பாட்டம் தமிழகம் முழுவதும் நடைபெற்றது.

**திருவாரூர் மாவட்டம்:** திருவாவாருர் மாவட்டத்தில் நீடாமங்கலம் ஊராட்சி ஒன்றிய அலுவலகம் முன்பு நடைபெற்ற ஆர்ப்பாட்டத்தில் நாடாளுமன்ற உறுப்பினர் எம்.செல்வராசு, இரெ.ஞான மோகன், யூ.மணியரசன் ஆகியோர் தலைமை தாங்கினர். இதில் ஆயிரத்திற்கும் மேற்பட்டோர் பங்கேற்றனர்.

கோட்டூர் ஊராட்சி ஒன்றிய அலுவலகம் முன்பு நடைபெற்ற ஆர்ப்பாட்டத்திற்கு வை.சிவபுண்ணியம் எக்ஸ்.எம்.எல்.ஏ, ஒன்றியக்குழு தலைவர் மணிமேகலை, மாவட்ட பொருளாளர் ஜெயராமன் ஆகியோர் தலைமை தாங்கினர். இதில் 1500 க்கு மேற்பட்டோர் கலந்து கொன்டனர். திருத்துறைப்பூண்டி ஊராட்சி ஒன்றிய அலுவலகம் முன்பு நடைபெற்ற ஆர்ப்பாட்டத்திற்கு கே.உலகநாதன் எக்ஸ்.எம்.எல்.ஏ., முன்னாள் ஒன்றியக்குழு தலைவர் எம்.வையாபுரி, எம்.மகாலிங்கம் ஆகியோர் தலைமை தாங்கினர். இதில் 1500 பேர் பங்கேற்றனர்.

மன்னார்குடி ஊராட்சி ஒன்றிய அலுவலகம் முன்பு நடைபெற்ற ஆர்ப்பாட்டத்திற்கு முன்னாள் மாவட்ட ஊராட்சித் தலைவர் வை.செல்வராஜ், என்.மகேந்திரன் ஆகியோர் தலைமை தாங்கினர். இதில் 750 க்கு மேற்பட்டோர் பங்கேற்றனர். முத்துப்பேட்டை ஊராட்சி ஒன்றிய அலுவலகம் முன்பு நடைபெற்ற ஆர்ப்பாட்டத்திற்கு முன்னாள் மாவட்ட ஊராட்சி உறுப்பினர் கே.முருகையன், உமேஸ்பாபு, ராஜா ஆகியோர் தலைமை தாங்கினர். இதில் ஆயிரத்தற்கு மேற்பட்டடோர் பங்கேற்றனர்.

திருவாரூர் ஊராட்சி ஒன்றிய அலுவலகம் முன்பு நடைபெற்ற ஆர்ப்பாட்டத்தில் ஏஐடியூசி மாவட்ட செயலாளர் சந்திரசேகர ஆசாத் எம். நாகராஜன் தலைமையில் 300க்கு மேற்பட்டோர் பங்கேற்றனர்.

நன்னிலம் ஊராட்சி ஒன்றிய அலுவலகம் முன்பு நடைபெற்ற ஆர்ப்பாட்டத்தில் மாவட்ட செயலாளர் திருத்துறைப் பூண்டி ஊராட்சி ஒன்றிய குழு தலைவர் அ.பாஸ்கர், ஒன்றிய செயலாளர் கௌதமன், செந்தில் ஆகியோர் தலைமையில் 250 பேர் பங்கேற்றனர்.

வலங்கைமான் ஊராட்சி ஒன்றிய அலுவலகம் முன்பு நடைபெற்ற ஆர்ப்பாட்டத்திற்கு மாவட்ட துணைச் செயலாளர் கே. ராஜா செந்தில்குமார், ஜி.ரவி தலைமை தாங்கினர். இதில் 300 பேர் பங்கேற்றனர்.

கொரடாச்சேரி ஊராட்சி ஒன்றிய அலுவலகம் முன்பு நடைபெற்ற ஆர்ப்பாட்டத்திற்கு விவசாயிகள் சங்க மாவட்ட துணைச் செயலாளர் கே.ஆர்.ஜோசப், யூ.கேசவராஜ், பன்னீர்செல்வம் தலைமையில் 500 பேர் பங்கேற்றனர். திருவாரூர் மாவட்டம் முழுவதும் பத்தாயிரத்திற்கும் மேற்பட்ட விவசாய தொழிலாளர்கள் இந்த போராட்டத்தில் பங்கேற்றனர்.

**இராஜபாளையம்:** இராஜபாளையம் வட்டார வளர்ச்சி அலுவலகம் முன்பு தமிழ்நாடு விவசாய தொழிலாளர் சங்கம் சார்பில் ஆர்ப்பாட்டம் நடந்தது. மாவட்ட செயலாளர் வரதராஜன் தலைமை வகித்தார். அய்யனார், அய்யணன், அமுல்ராஜ் ஆகியோர் முன்னிலை வகித்தனர்.போராட்டத்தை விளக்கி சிபிஐ மாவட்ட செயலாளர் பி.லிங்கம் எக்ஸ் எம்பி , மாவட்ட துணை செயலாளர் எஸ்.பழனிக்குமார், மாவட்ட நிர்வாககுழு உறுப்பினர்கள் வி.இரவி, முத்துமாரி, கணேசமூர்த்தி, ஊராட்சி ஒன்றிய கவுன்சிலர் பகத்சிங், ஒன்றிய செயலாளர் இராமச்சந்திரன் ஆகியோர் பேசினார்கள். ஆர்ப்பாட்டத்தில் 300 பெண்கள் உள்பட ஏராளமானோர் கலந்து கொண்டார்கள். ஸ்ரீவில்லிபுத்தூரில் நடைபெற்ற ஆர்ப்பாட்டத்திற்கு வி.பொன்னுபாண்டியன் எக்ஸ் எம்எல்ஏ தலைமை வகித்தார். சிபிஐ மாநில நிர்வாககுழு உறுப்பினர் தி.இராமசாமி எக்ஸ் எம்எல்ஏ, தவிச மாவட்ட செயலாளர் சவுந்திரபாண்டியன், ஒன்றிய செயலாளர் பலவேசம், நகர செயலாளர் மூர்த்தி உள்பட பலர் கலந்துகொண்டு பேசினார்கள்

**ஒரத்தநாடு:** ஒரத்தநாட்டில் விவசாய தொழிலாளர் சங்கம் சார்பில் வட்டார வளர்ச்சி அலுவலகம் முன்பு ஆர்ப்பாட்டம் நடைபெற்றது. ஆர்ப்பாட்டத்திற்கு ஒன்றிய செயலாளர் இ. மாரிமுத்து, ஒன்றிய தலைவர் அ.சின்னத்தம்பி தலைமை தாங்கினர். கோரிக்கைகளை விளக்கி மாநில பொருளாளர் வழக்கறிஞர் சி.சந்திரகுமார் விளக்க உரையாற்றினார். ஆர்ப்பாட்டத்தில் இந்திய கம்யூனிஸ்ட் கட்சி ஒன்றிய செயலாளர் வா. இளையராசா, துணைச் செயலாளர் எஸ்.ஏ.எம்.கோசிமின், மாவட்ட நிர்வாக குழு உறுப்பினர் சீனி முருகையன், ஒன்றிய நிர்வாக குழு உறுப்பினர் தர்மராஜ், இளைஞர் மன்ற மாவட்ட செயலாளர் காரல் மார்க்ஸ் பாஸ்கர் மற்றும் திருநாவுக்கரசு உள்ளிட்டோர் பங்கேற்றனர்.நிறைவாக வட்டார வளர்ச்சி அலுவலரிடம் கோரிக்கை விண்ணப்பம் அளிக்கப்பட்டது.

**தருமபுரி:** தருமபுரி மாவட்ட ஆட்சியர் அலுவலகம் முன் சங்க மாவட்ட தலைவர் ஜி.மாதையன் தலைமையில் பெரும் திரள் ஆர்ப்பாட்டம் நடைபெற்றது. இதில் சங்க மாவட்ட செயலாளர் ஜெ.பிரதாபன் கோரிக்கைகளை விளக்கி சிறப்புரையாற்றினார். மற்றும் சங்க மாவட்ட துணை செயலாளர் ஜி. பச்சாகவுன்டர், மாவட்ட துணை தலைவர்கள் ஜி.ராஜகோபால், என்.முருகேசன், மாவட்ட நிர்வாகக்குழு உறுப்பினர்கள் வெ.பை.மாதையன், எல்.சி.கிருஷ்ணன் ஆகியோர் பேசினர். இதில் சங்க நிர்வாகிகள், உறுப்பினர்கள் பெருந்திரளாக பங்கேற்றனர். பின்னர் மாவட்ட துணை ஆட்சியரை சந்தித்து கோரிக்கைகள் அடங்கிய மனு சமர்பிக்கப்பட்டது.

**அம்மாபேட்டை :** தமிழ் மாநில விவசாயத் தொழிலாளர் சங்கம் சார்பில் அம்மாபேட்டை ஊராட்சி ஒன்றிய அலுவலகம் முன்பு ஆர்ப்பாட்டம்நடந்தது. ஆர்ப்பாட்டத்திற்கு மாவட்டக் குழு உறுப்பினர் தாமரைச்செல்வி தலைமை வகித்தார். ஆர்ப்பாட்டத்தில் இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி ஒன்றியச் செயலாளர் செந்தில்குமார், தமிழ் மாநில விவசாய தொழிலாளர் சங்க மாவட்டக் குழு உறுப்பினர் ரமேஷ்குமார், தமிழ்நாடு விவசாயிகள் சங்கத்தின் ஒன்றியச் செயலாளர் வெங்கடேசன்,இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் நகரச் செயலாளர் ராஜாராமன் உள்பட ஒன்றிய நிர்வாகிகள் பங்கேற்றனர்.



## தோழர் இரா.நல்லகண்ணுவை சந்தித்த பினாய் விஸ்வம் எம்.பி.

இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் தேசிய செயலாளரும், நாடாளுமன்ற உறுப்பினருமான பினாய்விஸ்வம் அவர்கள் மூத்த தலைவர் இரா.நல்லகண்ணு அவர்களை சந்தித்துப் பேசினார். உடன் மாநிலச் செயலாளர் இரா.முத்தரசன் உள்ளார்.

### கடலூர் அரசு மருத்துவக் கல்லூரி மாணவர்கள்

## இரா.முத்தரசனுடன் சந்திப்பு

கடலூர் அரசு மருத்துவ மற்றும் பல்மருத்துவக் கல்லூரி மாணாக்கர்களின் கல்விக் கட்டணத்தை, தமிழ்நாடு அரசின் இதர அரசு மருத்துவக் கல்லூரிகளுக்கு நிகராக குறைத்திட வேண்டும் என்ற கோரிக்கை வெற்றி பெற உதவிடக் கோரி, அக்கல்லூரிகளின் மாணவர் சங்கத் தலைவர்கள், இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் தமிழ்நாடு மாநிலச் செயலாளர் இரா. முத்தரசன் அவர்களை ஏப்.20 அன்று சந்தித்தனர்.

சமூக சமத்துவத்திற்கான டாக்டர்கள் சங்கத்தின் பொதுச் செயலாளர் டாக்டர் ஜி.ஆர்.இரவீந்திரநாத், செயலாளர் டாக்டர் ஏ.ஆர்.சாந்தி, கட்சியின் தென் சென்னை மாவட்டச் செயலாளர் எஸ்.ஏழுமலை ஆகியோர் உடன் இருந்தனர்.

கே.மாரிமுத்துவுடன் சந்திப்பு: இதே கோரிக்கை வெற்றி பெற உதவிடக் கோரி, அக்கல்லூரிகளின் மாணவர் சங்கத் தலைவர்கள், இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் சட்டமன்ற உறுப்பினர் கே.மாரிமுத்து அவர்களை சந்தித்தனர்.



## டாக்டர் ஜெ.ராதாகிருஷ்ணனுடன் ஜி.ஆர்.ரவீந்திரநாத் சந்திப்பு

மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை முதன்மைச் செயலாளர் டாக்டர் ஜெ.இராதாகிருஷ்ணன் ஐ.ஏ.எஸ். அவர்களை, சமூக சமத்துவத்திற்கான டாக்டர்கள் சங்கத்தின் சார்பில், சங்கத்தின் தலைவர் டாக்டர் த.அறம் மற்றும் பொதுச் செயலாளர் டாக்டர் ஜி.ஆர்.இரவீந்திரநாத் ஆகியோர் ஏப்.22 அன்று தலைமைச் செயலகத்தில் சந்தித்தனர். இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் தமிழ்நாடு மாநில நிர்வாகக்குழு உறுப்பினர் வி.அழகிரிசாமி எக்ஸ்.எம்.பி. உடன் இருந்தார்.














JANASAKTHI Tamil Weekly Phone: 044 - 28480201
Day of Publication: Every Thursday
Regd. No. TN / CH (C) / 551 / 2021-2023
WPP No: TN / PMG (CCR) /WPP/596/ 2021-2023
**Posted on 30.04.2022 at Egmore RMS 1 / Patrika Channel.**
Registered with Registarar of Newspapers for India, Under Regd No: 1222/57

## தொழிலாளர் சட்டத் தொகுப்புகளை கைவிடக்கோரி

# சட்டப்பேரவையில் தீர்மானம் இயற்றுக!

**தொழிலாளர்கள் கடந்த 150 ஆண்டுகளாக தொடர்ச்சியாக பல தலைமுறைகளாக போராடி, சட்டங்கள் வழியாக பெற்ற உரிமைகளைப் பறிப்பதற்கான 4 சட்ட தொகுப்புகளை ஒன்றிய அரசு கொண்டு வந்திருக்கிறது.**

ஒன்றிய அரசின் மூன்று வேளாண் சட்டங்களையும் தமிழ்நாடு அரசு எதிர்த்தது. சட்டப்பேரவையில் தீர்மானம் நிறைவேற்றியது. விவசாயிகள் போராட்டத்தாலும், மாநில அரசுகளின் எதிர்ப்பாலும் வேளாண் சட்டங்களை ஒன்றிய அரசு கைவிட்டது.

சாதாரண மக்களின் குழந்தைகள் உயர் கல்வியை எட்டாது தடுக்கும் நீட் தேர்வு முறையை தமிழ்நாடு அரசு எதிர்க்கிறது. அதன் தீமைகள் குறித்து ஆய்வு செய்ய நீதிபதி ஏ.கே. ராஜன் தலைமையில் ஒரு குழு அமைத்து பரிந்துரைகளைப் பெற்றது. தமிழ்நாட்டுக்கு பொருந்தாது என சட்டப்பேரவையில் தீர்மானம் நிறைவேற்றியது. அதனை ஆளுநர் திருப்பி அனுப்பிய போது, சட்டப்பேரவையைக் கூட்டி அதே தீர்மானத்தை மறுபடி நிறைவேற்றி அனுப்பியது. நீதிமன்றங்களிலும் தொய்வின்றி வழக்காடுகிறது.

அதைப்போலவே தொழிலாளர் சட்டத் தொகுப்புகளையும் தமிழ்நாடு அரசு எதிர்க்கிறது. சட்ட தொகுப்புகள் திரும்பப் பெறப்பட வேண்டும் என தமிழ்நாட்டின் சட்டப்பேரவையில் தீர்மானம் நிறைவேற்றினால் பொருத்தமாக இருந்திருக்கும். இதுவரை அது நடக்கவில்லை.

இந்த சட்டத் தொகுப்புகளுக்கான விதிகளை ஒன்றிய அரசு ஏற்கனவே வெளியிட்டிருக்கிறது. ஆனாலும் இந்தியாவில் உள்ள அனைத்து மாநில அரசுகளும் மாநில விதிகளை வெளியிட்டால்தான், அந்தச் சட்டத் தொகுப்புகளை அமலாக்க முடியும். தமிழ்நாடு கேரளா உள்ளிட்ட ஒரு சில மாநிலங்கள் இந்த விதிகளை நிறைவேற்றவில்லை. ஆகவே ஒன்றிய அரசு சட்ட தொகுப்புகளை அமலாக்க முடியவில்லை. கேரளா அரசு தொழிற்சங்கங்களை அழைத்து மாநில அரசு விதிகளை வரைவு விதிகளை தந்து விவாதித்துக்கொண்டிருக்கிறது.

தமிழ்நாடு அரசு கடந்த 11.4.2012 தேதியன்று இணையதளத்தில் 3 சட்டத் தொகுப்புகளுக்கான தமிழ்நாடு மாநில விதிகளை வெளியிட்டிருக்கிறது. அதனைக் கண்ணுறும் தமிழ்நாட்டு மக்கள் 45 நாட்களுக்குள் ஆட்சேபனை ஏதும் இருந்தால் தெரிவிக்கலாம் என்று சொல்லப்பட்டுள்ளது.

ஆனால் முன்னதாக 18.3.2022ம் தேதியன்று மாண்புமிகு தொழிலாளர் அமைச்சர் அவர்கள் சட்டத் தொகுப்புக்கான விதிகள் பற்றி விவாதிப்பதற்காக தொழிற்சங்கங்களை அழைத்து கூட்டம் நடத்தியுள்ளார். ஆனால் கூட்டத்தில் வரைவு விதிகள் எதுவும் கொடுக்கப்படவுமில்லை; அது பற்றி எந்த விவாதமும் இல்லை. ஒன்றிய அரசின் தொழிலாளர் சட்டத் தொகுப்புகள் மேன்மையானவை எனத் தோற்றமளிக்கும் ஒரு ஒப்பீட்டுப் பட்டியல் தரப்பட்டு, விளக்கப்பட்டுள்ளது.

அதிமுகவில் 10 ஆண்டு கால ஆட்சியில், முத்தரப்பு அமைப்புகளை பெரும்பாலும் கூட்டவில்லை. தமிழ்நாட்டில் தொழிலாளர் கொள்கை குறித்து வழக்கமாக மாநில தொழிலாளர் ஆலோசனை வாரியத்தின் கலந்து பேசி முடிவு எடுப்பது வழக்கம். இவை பற்றியெல்லாம் அதிமுக அரசு கவலைப்பட்டதில்லை. தொழிலாளர்களை அவமதிக்கும் இந்தப் போக்கில் இருந்து திமுகழக ஆட்சி அமைந்த பின்பு மாறுதல் வரும் என தொழிலாளர்கள் நம்பினார்கள்.

இனிமேல் நிரந்தர தொழிலாளர் என்ற முறையே இருக்காது, தொழிற்சங்கங்கள் நடத்துவது மிக கடினமாக மாற்றப்படும், கட்டுமான வாரியங்களின் சேர்ந்துள்ள நிதி பறிக்கப்பட்டு ஒன்றிய அரசின் ஆளுகைக்கு சென்றுவிடும் உள்ளிட்ட ஏராளமான அடிப்படை மாற்றங்களை ஒன்றிய அரசின் சட்ட தொகுப்புகள் முன்வைக்கின்றன. தொழிலாளர் விரோத சட்டங்களை பரிசீலிக்க ஏ.கே.ராஜன் குழு போன்ற தனி அமைப்புக் கூட வேண்டாம்; குறைந்தபட்சம் மாநில தொழிலாளர் ஆலோசனை வாரியக் கூட்டத்தை நடத்தியாவது அரசு முடிவு எடுத்திருக்கலாம்.

## தமிழ்நாடு முழுவதும் ஏஐடியூசி ஆர்ப்பாட்டம்




தமிழ்நாடு அரசின் வரைவு விதிகளை பற்றி எத்தனை ஆட்சேபனைகள், ஆலோசனைகளை எழுதினாலும், அவற்றையெல்லாம் பரிசீலித்ததாகவும், அவை பொருத்தமற்றவை என்று நிராகரித்து விட்டதாகவும் சொல்லி விதிகளை நிறைவேற்றி விடுவார்கள். ஏனெனில் பாஜகவின் ஒன்றிய அரசு இதையேதான் செய்தது. தொழிற்சங்கங்களின் ஆட்சேபனை பற்றியே சொல்லாமல் தொழிற்சங்கங்களிடம் பேசி விட்டோம் என அரை உண்மை சொல்லி கடந்து சென்றார்கள். அதே ஒளிவு மறைவுப் பாதையில் திமுக ஆட்சியும் செல்வது பொருத்தமற்றது. இது சமூகநீதிக் கோட்பாட்டுக்கு உகந்ததல்ல.

மாணவர்களையும் விவசாயிகளையும் முழு முயற்சி எடுத்து காப்பாற்ற முனைந்தது போல், தொழிலாளர்களையும் தமிழ்நாடு அரசு காப்பாற்ற வேண்டும். வரைவு விதிகளை வலியுறுத்தக் கூடாது. தொழிலாளர் சட்டங்களை திரும்பப் பெற வேண்டும் என சட்டப்பேரவையில் தீர்மானம் நிறைவேற்ற முன்வர வேண்டும்.

எனக்கோரி தமிழகம் முழுதும் மாவட்டத் தலைநகர்களிலும், தொழில் மையங்களிலும் ஆர்ப்பாட்டம் நடைபெற்றது.

**விருதுநகர்:** விருதுநகர் மாவட்ட ஆட்சியர் அலுவலகம் முன்பு நடைபெற்ற ஆர்ப்பாட்டத்திற்கு மாவட்ட தலைவர் க.சமுத்திரம், மாவட்ட செயலாளர் முத்துமாரி ஆகியோர் தலைமை வகித்தனர். மாவட்ட அமைப்புச் செயலாளர் வி.இரவி முன்னிலை வகித்தார். கோரிக்கைகளை விளக்கி சிபிஐ மாநில நிர்வாககுழு உறுப்பினர் தி.இராமசாமி எக்ஸ் எம்எல்ஏ, மாவட்ட செயலாளர் பி.லிங்கம் எக்ஸ் எம்பி, மாவட்ட துணை செயலாளர் எஸ்.பழனிக்குமார் ஆகியோர் பேசினர். மாநிலகுழு உறுப்பினர் பாலமுருகன், வத்திராயிருப்பு கோவிந்தன், மீனவர் சங்க மாவட்ட செயலாளர் செல்வம், கட்டிட தொழிலாளர் சங்க மாவட்ட தலைவர் தங்கராஜ் , அருப்புகோட்டை முனியசாமி நகர செயலாளர் முத்துகுமார் உள்பட ஏராளமானோர் கலந்து கொண்டனர்.

**நெல்லை:** பாளையங்கோட்டை வண்ணாரபேட்டை ரவுண்டானா அருகில் கவன ஈர்ப்பு ஆர்ப்பாட்டம் தமிழ்நாடு ஏஐடியுசி செயலாளர் எஸ்.காசிவிஸ்வநாதன் தலைமையில் நடைபெற்றது . மாவட்ட பொதுச்செயலாளர் இரா.சடையப்பன், பொருளாளர் எம். எஸ்.பாலகிருஷ்ணன், சிபிஐ துணை செயலாளர் செ.லட்சுமணன், போக்குவரத்து தொழிலாளர் சங்க பொதுச் செயலாளர் என்.உலகநாதன் ஆகியோர் முன்னிலை வகித்தனர். 200க்கும் மேற்பட்ட ஏஐடியுசி சங்க தோழர்களுடன் சம்மேளன சங்கத்தினரும் பங்கேற்றனர். இதில் பூதப்பாண்டி பேரூராட்சி மன்ற துணைத் தலைவரும், குமரி மாவட்ட ஏஐடியுசி தலைவருமான அனில் குமார் உள்ளிட்ட பல தலைவர்கள் உரையாற்றினர். இறுதியாக காசி விஸ்வநாதன் சிறப்புரையாற்றினார்.

**தருமபுரி:** தருமபுரி மாவட்ட ஆட்சியர் அலுவலகம் முன்பு நடைபெற்ற ஆர்ப்பாட்டத்திற்கு மாவட்ட தலைவர் எம்.மாதேஸ்வரன் தலைமை வகித்தார். கட்டுமான சங்க மாவட்ட தலைவர் எம்.வி.குழந்தைவேலு, மாவட்ட பொருளாளர் கே.விஜயா, ஏஐடியூசி மாவட்டக்குழு உறுப்பினர் பழனியம்மாள் முன்னிலை வகித்தனர். ஏஐடியூசி மாவட்ட பொது செயலாளர் கே.மணி, மாவட்ட பொருளாளர் ஏ.முருகன் ஆகியோர் கோரிக்கைகள் வலியுறுத்தி பேசினார்.

கட்டுமான சங்க மாவட்ட செயலாளர் ஆர். சுதர்சனன், போக்குவரத்து கழக மண்டல செயலாளர் சி.நாகராஜன், மண்டல பொருளாளர் இரவி, இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி இண்டூர் வட்டார பொறுப்பாளர் எம்.சிவன், மாதேமங்கலம் ஊராட்சி மன்ற தலைவர் சங்கர், உள்ளாட்சி பணியாளர் சங்க மாவட்ட தலைவர் மனோகரன், என்எப்டிஇ முன்னாள் அமைப்பு செயலாளர் சி.முனியன், ஆட்டோ சங்க மாவட்ட செயலாளர் கந்தசாமி, ஏஐஎஸ்எப் மாவட்ட பொறுப்பாளர் தமிழமுதன், எல்பிஎப் நிர்வாகி தங்கராஜ்ஆகியோர் பேசினர்.

**தென்காசி:** தென்காசியில் ஏஐடியூசி மாவட்ட தலைவர் சி.சுப்பிரமணியன் தலைமையில் கவனஈர்ப்பு ஆர்ப்பாட்டம் நடைபெற்றது. ஏஐடியூசி மாவட்ட செயலாளர் தி.சுப்பையா, சிபிஐ மாவட்டச் செயலாளர் த.இசக்கித்துரை, மாநில குழு உறுப்பினர் எஸ்.வேலாயுதம், மாவட்ட நிர்வாக குழு உறுப்பினர் ஏ.பரமசிவன், விவசாயிகள் சங்கம் எம்.எஸ்.கிட்டப்பா, விசைத்தறி தொழிலாளர் சங்க செயலாளர் ப.வேலு மற்றும் ஏராளமான தோழர்கள் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

**தூத்துக்குடி:** தூத்துக்குடி கோரம்பள்ளத்தில் ஒருங்கிணைந்த தொழிலாளர் நலஅலுவலகம் முன்பு நடைபெற்ற ஆர்ப்பாட்டத்திற்கு, மாவட்ட ஏஐடியூசி தலைவர் பாலசிங்கம் தலைமை வகித்தார். கோரிக்கைகளை விளக்கி மாவட்ட பொதுச்செயலாளர் கிருஷ்ணராஜ் உரையாற்றினார். ஆர்ப்பாட்டத்தில் கட்டுமான தொழிலாளர்கள் சங்க மாவட்டச் செயலாளர் சேது, டி.சி.டபுள்யூ தோழர்கள் லோகநாதன், முருகன், சந்தனராஜ், உப்பு சங்கம் பரமசிவன், சங்கரவேல், அமைப்புசாரா தொழிலாளர் சஙகம் ஆண்டி, பொன்னுசாமி உள்ளிட்ட ஏராளமான கட்டுமான அமைப்புச்சார தொழிலாளர்கள் கலந்து கொண்டனர்.

**கள்ளக்குறிச்சி :** கள்ளக்குறிச்சியில் மாநில நிர்வாக குழு உறுப்பினர் ஆ.வளர்மதி தலைமையில் நடைபெற்றது. ஆட்டோ தொழிலாளர் சங்கத்தின் சிறப்பு தலைவர் இரா.கஜேந்திரன் துவக்கி வைத்து முழக்கங்களை எழுப்பினார்.

சி.பி.ஐ. மாவட்ட செயலாளர் கே.எஸ். அப்பாவு கவன ஈர்ப்பு கோரிக்கைகள் வலியுறுத்தி பேசினர். சுமை தூக்கும் பணியாளர் சங்கத்தின் மாவட்ட பொறுப்பாளர் தாகபிள்ளை, கட்டட தொழிலாளர் சங்கம் மாவட்டக்குழு உறுப்பினர் ராமர், மாதர் சங்கம் மாவட்டக்குழ உறுப்பினர் ரீதா மற்றும் தோழர்கள் பங்கேற்றனர்.

**மணப்பாறை:** மணப்பாறை போருந்து நிலையம் முன்பு நடைபெற்ற ஆர்ப்பாட்டத்திற்கு திருச்சி மாவட்ட ஏ.ஐ.டி.யூ.சி. துணைச் செயலாளர் சுப்ரமணியன் தலைமை வகித்தார்.

அமைப்புச்சாரா தொழிலாளர் சங்க பொது செயலாளர் நல்லுச்சாமி, போக்குவரத்து கழக ஏ.ஐ.டி.யூ.சி. மாசிமாலை பெரியசாமி, உள்ளாட்சி பணியாளர்கள் சங்க அருணகிரி, காமாட்சி, கோட்டையாம்மாள், கணேசன் ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

விவசாய சங்க மாவட்ட பொருளாளர் பழனிச்சாமி, ஆட்டோசங்க மாவட்ட துணை தலைவர் ஜனசக்தி உசேன் ஆகியோர் ஆர்ப்பாட்ட உரை நிகழ்த்தினர்.

**திருப்பூர் :** திருப்பூர் மாவட்டம் உடுமலைப்பேட்டை வட்டாச்சியர் அலுவலகம் முன்பு நடைபெற்ற ஆர்பாட்டத்திற்கு தமிழ்நாடு மின்சார தொழிலாளர் சம்மேளனம் உடுமலைப்பேட்டை வட்ட செயலாளர் மாரிமுத்து தலைமை வகித்தார். ஏஐடியூசி மாநில குழு உறுப்பினர் வி.சௌந்தரராஜன் முன்னிலை வகித்தார். ரணதேவ், சுப்பிரமணியம், செல்வராஜ், நந்தகோபால், சுகுமார் மற்றும் மின்சார தொழிலாளர் சம்மேளன நிர்வாகி தண்டபாணி, ஓய்வு பெற்றோர் சங்கம் குருசாமி உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.







Janasakthi Tamil Weekly Published by **R. Mutharasan** and Owned by on behalf of Janasakthi Trust and Published from 43, Chevaliye Sivaji Ganesan Salai, Thiyagaraya Nagar, Chennai - 17. Editor: **K.Subbarayan .,**
Editorial Phone: 044-28480201, Editorial E-mail: janasakthieditor@gmail.com, Advt Email: info.janasakthi@gmail.com Printed by **A.Sivakumar** at Pavai Printers (P) Ltd., 142/16 Jani Jan khan Road, Royapettah, Chennai - 14.